

ஹரிஓம்.

ஸ்ரீ ரெக்மாயிசமேத பாண்டுரங்க பரப்பிர்ம்மணேநம:

# ஸ்ரீபக்தலீலாமிர்த வசனம்,

இஃது

ஸ்ரீ பாண்டுரங்கப் பரப்பிரம வஸ்துவினது நித்திய விபூதி

லீலா விபூதிகளாகிய

## திருவிளையாடல்களும்,

அவரது பரம பக்தர்களுடைய

## சரித்திரங்களுமாம்.

### கடவுள் வாழ்த்து.

உலகெலாமுள வாக்கிய உந்தியான்
மலரின்மேன்மங்கை வைகியமார்பினன்
கலபமஞ்ஞை கயிலுறழ்மேனியான்
சலசமாமலர்த் தாண்முடிசூடுவாம்.

ஆதிமத்தியாந்த ரகிதனுகவும், சர்வபரிபூரணனுகவும், எங்கும் வியாபகனுகவும், அந்தர்யாமியாகவும் விளங்குகின்ற ஸ்ரீமந்நாராயணனுனவர் சர்வ லோகங்களையும், சராசர வஸ்துக்களையும், சிருஷ்டிசெய்து தமது நித்திய விபூதி லீலாவிபூதியாகிய இரண்டையும் பரிபாலிக்க நினைத்து, தமது நாபியுங்

கமலத்தில் வண்டுபோல பிரமதேவனைப்படைத்து, அவனுக்கு நான்குவேதங்களையும் கற்பித்து, சிருஷ்டிசெய்யும்படியான தொழிலையும் கொடுத்து, அவனால் எல்லா உலகங்களையும், மேற்சொல்லிய சராசரங்களையும், உண்டாக்கினவரும், சர்வ மங்களகரமும்பொருந்திய கமலாசனத்தையுடைய மகாலட்சிமி தேவியைத் தமமுடைய மார்பினிடத்தில் வைத்தருளினவரும், கலாபத்தையுடைய ஆண்மயிலின் பிடரியின் பசுமையும் பொன்மையும் போன்ற நிறமுள்ள திருமேனியையுடையவருமாகிய தேவாதிதேவனது திவ்விய செந்தாமரை மலர்போலும் திருவடிகளை என்னுடைய சிரசிற்கு மகுடம்போல சூடிக்கொள்வேன்; யாது காரணத்தாலென்னில் என்னுடைய ஜனனமரண துக்கமும், சம்சார பந்ததுக்கமும், நிவர்த்தியாகி மோட்சவீட்டை அடைவதற்கு மார்க்கம் இதுதானென்று என்னறிவிற்றுத்தோற்றி, அவரது திருவிளையாடலும், அவருடைய அடியார்களாகிய பரமபாகவதர்களுடைய சரித்திரங்களும், நிரம்பிய "பக்தலீலாமிர்தமென்னும்" வசனகாவியத்தை யான் செய்து நிறைவேற்றத்தொடங்கினேன். இதற்கு யாதொரு விக்கினமுமின்றி நிர்விக்கினமாய் நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்பதேகாரணம்.

## அநுமார் துதி.

கஞ்சமாமலர்க் கண்ணனடியர்க
டஞ்சரித்திரந் தானவமாயருள்
அஞ்சனைச்சிறு வன்சரணங்களை
நெஞ்சினுளு நினைந்துவழுத்துவாம்.

கமலநேத்திரத்தையுடைய கண்ணபிரானது அன்பர்கள் சரித்திரங்களை பிரியத்தோடு அருள்செய்கின்ற அஞ்சனாதேவியின் புத்திரராகிய அனுமாருடைய இரண்டு திருவடிகளையும் என்மனதில் எந்நாளும் நினைந்து தோத்திரம்பண்ணுவேன்.

## கலைமகள் துதி.

பாரதிக்கு விஜயஞ்செய்பற்குனன்
சாரதிக்கடி யார்தஞ்சரித்திரஞ்
சேரதிக்கொன்றி லாமலருள்செயும்
பாரதிக்குப் பணிதல்செய்வாமரோ.

பாண்டவர்களில் ஒருவனாகிய திக்குவிஜயம்பண்ணின பார்த்தனுக்கு அடியார்க்கு அடியனென்னும் உரிமை உலகமுழுவதும் உணரும்படி ரதசாரத்தியம்பண்ணின ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அடியார்களின் சரித்திரங்கள் யாவற்றிலும் ஒரு பிழையுமில்லாமல் அருள்செய்யவேண்டுமென்று கருதி, உலகமாதாவாகிய சரஸ்வதியின் மலர்ப்பாதங்களுக்கு நான் மிகவும் தாழ்மையாக வணக்கஞ்செய்கின்றேன்.

## நூல்.

ஸ்ரீவியாசமுனிவரால் வகுக்கப்பட்ட பதினெண் புராணங்களில் ஒன்றாகிய பதுமபுராணத்தில் உமாமஹேஸ்வர பிரசனோத்தர சருக்கத்தில் சொல்லிய விஸ்தாரமான சரித்திரத்தை யான் ஒருவாறு சங்கிரகமாகச் சொல்ல ஆரம்பித்தேன்.

## கண்ணபிரான் பூவுலகத்திற்குவந்த காரணசரித்திரம்.

பசுத்தமலர்க்கொடியனைய உமாதேவிகண்ணபிரான்பாரின்மேவும்
விசித்திரமென்னெனத்திரியம் பகப்பெருமான்றனைவினவ வமிர்தின்மேலி
ரசித்தமொழிமடமானே யன்னவன்றன்விளையாடனவில்வலென்ன
வசுத்தனிவெற்பினைச்சிலையாய் வளைத்தபிரானகமகிழ்ந்து வகுக்கலுற்றான்

ஊழிதோறும் வளருகின்ற கைலாயத்தினுடைய மத்தியில் மாணிக்கமயமாய் விளங்குகின்ற சபாமண்டபத்தில் அநந்தமாயிரம் வெள்ளம் பூதகணங்கள் புடைசூழும்படியாகவும், ஏகாதச ருத்திரர்கள், துவாதச ஆதித்தர்கள், அட்டவசுக்கள், அட்டதிக்குப் பாலகர்கள், சைவ முனிவர்கள், சைவ அடியார்கள், நந்திதேவர், பிரிங்கிமுனிவர் முதலாகியவர்களெல்லாம் சந்நிதானத்தில் நின்று ஹர ஹரவென்று முழக்கி வந்தனம்செய்துகொண்டு நிற்கும்படியாகவும், தெய்வ சிம்மாசனத்தின்பேரில் அழியாத கன்னிகையாகிய உமாதேவியாரோடும்கூடிக் கொலுவீற்றிருக்கும் தருணத்தில் பரமசிவத்தோடுகூடி வீற்றிருக்கின்ற மலர்கள் நிரம்பிய பசுமையான கொடிக்கொப்பான பார்வதாதேவி திரியம்பக மூர்த்தியாகிய பரமசிவனது திருமுகத்தை நோக்கி ஸ்வாமின் வைகுண்டவாசகரான ஸ்ரீமந்நாராயணன் பூவுலகத்திற்கு எழுந்தருளி அதிவிநோதமாக வீற்றிருக்கின்றாரே அது யாதுகாரணத்தினாலோ இன்ன நிமித்தமாகப்போயிருக்கின்றாரென்று அடியாளுக்கு அருள்செய்யவேண்டுமென்று கேட்க அப்போது பொன்மலையை வில்லாகவளைத்த திரிபுராந்தகன் தேவாமிர்தத்திலும் மிக்கசுவையுள்ள வார்த்தையினையுடைய இளமைபொருந்திய பெண்கள் நாயகமே அத்திருமாலின் அற்புதமான திருவிளையாடலைச் சொல்லுகின்றேன் இனிது கேட்கவென்று மனமகிழ்ந்து சொல்லத்தொடங்கினார். அண்டபிண்ட சராசரங்களெல்லாமழியும்படியான ஊழிகாலத்திலுமழியாதிருக்கின்ற பரமபதமாகிய வைகுண்டத்தின் மத்தியில் அநேக நவரத்தினங்களாலும், சொர்னங்களாலும் இழைக்கப்பட்டு கோடிசூரிய பிரகாசத்தோடுங்கூடி விளங்குகின்ற சபாமண்டபத்தில் பிரமதேவனாதி முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியிசுரர்கள், கின்னரர், கிம்புருடர், கருடகாந்தருவர்கள், விஞ்சையர்கள் முதலானவர்கள் அஞ்சலி வந்தனத்

தோடு புடைசூழும்படியாகவும், வைணவமுனிவர்களும், பரமபாகவதர்
களும், பன்னிரண்டாழ்வார்களும், நித்திய சூரிகளும் பல்லாண்டு பா
டும்படியாகவும், சத்த சிரஞ்சீவிகளும், சத்த ரிஷிகளும் தோத்திரஞ்
செய்யும்படியாகவும், தும்புருநாரதர் வீணாகானம் பண்ணும்படியாக
வும், ரம்பை, ஊர்வசி முதலிய தெய்வ தாசியர்கள் நடனம்பண்ணும்
படியாகவும், ஜயவிஜயர்கள் துவாரபாலகர்களாக நிற்கும்படியாகவும்,
ஆயிரம் பணாமுடிகளையுடைய ஆதிசேடன் சிரோரத்தினங்கள் பிரகா
சிக்கும்படியான சேஷாசனத்தில் சர்வலோக சரண்ணியனாகிய ஸ்ரீமந்
நாராயணன் சர்வலோகமாதாவாகிய மகாலட்சுமியாரோடும்கூடிக் கொ
லுவீற்றிருக்கும் சமயத்தில் அமராவதிக்கரசியாகிய இந்திராணி ஸ்ரீ பர
ந்தாமனுடைய திவ்விய மங்களசொருபத்தைத் தரிசிக்கவேண்டுமென்கி
௪. ன்ற ஆவல்கொண்டு அவிடம்வந்து* ஸ்ரீமந்நாராயணனைத் தனது கண்
கள் களிக்கும்படியாகப்பார்த்து, அன்போடு அநேகவித தோத்திரம்செ
ய்துகொண்டு, அவர் சந்நிதியிலேநின்று அவர் பேரழகாகிய சமுத்திரத்
திலே மூழ்கி, அவர் திருவடியில் விழுந்து நமஸ்கரித்து ஒரு வார்த்தை
௫. சொல்லுகின்றாள்* சர்வலோகநாயகா, சர்வபரிபூரணா, சர்வாந்தரியாமி
யாகிய தயாபரமூர்த்தியே தங்களுடைய மடியின்பேரிலிருப்பதற்கு
நான் பேரவாக்கொண்டிருக்கின்றேன், இவ்வாசை என்னைவிட்டு நீங்
காதாகையால், என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றியருளவே
ண்டுமென்று பின்னும் விழுந்து நமஸ்கரித்துத் தோத்திரம்செய்துநி
ன்ற இந்திராணியை ஸ்ரீதரன் கருணையோடுபார்த்துக் குறுநகைகொ
௬. ண்டு கேளென்று சொல்லத்தொடங்கினார்* இந்திராணி நீ பூவுலகில்
சென்று அறுபதினாயிரவருஷ பரியந்தம் நம்மைவேண்டித் தவஞ்செய்
வாயாகில், அப்பொழுது நாம் துவாரகாபுரியில் கிருஷ்ணனாக அவதார
ஞ்செய்து விற்றிருப்போம், தெய்வலோகவாசியான உன்னை அக்காலத்
தில் என் மடிமீதுவைத்து உன் கோரிக்கையை நிறைவேற்றியருள்
௭. வேனென்றனர்* இவ்விதமாக நாராயணன் மொழிந்தவுடனே இந்
திராணியானவள் அதிக சந்தோஷத்துடன் அவர் இரண்டு திருவடி
களையும் வணங்கி அவ்வண்ணமே செய்கிறேனென்று விடைபெற்றுக்
கொண்டு பூவுலகில் ஓரிடத்தில் வந்திருந்து, மிகவும் செய்தற்கரிதான
அருந்தவஞ்செய்து அறுபதினாயிரவருஷம் பூரணமானபின்புகோகுல
௮. த்தில் ராதையாகவந்தவதரித்திருந்தாள்* அப்போது கிருஷ்ண பர
மாத்துமாவோடுகூடி யவ்வனபருவததில் விளையாடி அபரிமிதானந்த
மடைந்து பிரியாவிடையாயிருந்தபொழுது திவ்விய மங்களமூர்த்தி
யான கண்ணபிரான் கோகுலத்தினின்று நீங்கித் துவாரகாபுரிபோய்ச்
சேர்ந்தனர். அனந்த கல்யாணகுணன் கோகுலம்விட்டுப் போயினபின்,
௯. ராதை பிரிவாற்றாமையால் மிக வருந்தி உடல்மெலிந்தனள்* இவ்வ
ண்ணம் பலகாலம் வருத்தப்பட்டுக்கொண்டு கண்ணபிரான் தியானமா
கவே இருந்தமையாலும், பூர்வம் சுவாமியினிடத்தில் அவள் வரம்

பெற்றுக்கொண்ட காலம் வந்து கூடியபதாலும், அவ்வரமானது சுவாமி
யினிடம் சேரென்று அவளை ஏவினபடியால், அழகான வேறு வடிவ
மெடுத்துக்கொண்டு துவாரகாபுரியில் எழுந்தருளியிருக்கின்ற நீலமேக
௰. சாமளவண்ணன் கொலுமண்டபத்திற்கு வந்துசேர்ந்தாள்* இங்ங
னம் வந்தவள் லெட்சுமிபதியினுடைய திவ்விய மங்கள சொரூபாலங்
காரத்தைப்பார்த்து, அனந்தவிதம் துதிசெய்தனள். அப்படித் துதி
செய்தவளை மின்னலோடுகூடிய மேகத்துக்கொப்பான திருமேனியை
யுடைய கோபாலன் கிருபையாக நோக்கிப் பழைய வடிவத்தை நீக்கி,
வேறு வடிவமெடுத்து வந்திருக்கின்ற ராதையென்று தம்முடைய திரு
வுள்ளத்தில் நினைத்துத் தமது மடியின்மேல் நிலைபெறத் தங்கும்படியாய்
௰க. அவளை எடுத்து வைத்துக்கொண்டனர்* இப்படி அவளைச் சுவாமி
மடியின்மேல் வைத்துக்கொண்டதைக்கண்ட உலகமாதாவாகிய ருக்கு
மணிதேவியார் மனஞ்சகிக்காதவர்களாய் மன்மதன் பிதாவாகிய மகாசுந்
தரகோபாலன் மீது அதிக கோபங்கொண்டு தெளிவுள்ள ஞானவானை
புதனைப்பெற்ற சந்திரனுக்குச் சமானமாகிய முகமானது கொதித்து
எவ்வகையாலும் ஆறாத கோபமுடையவர்களாய் அதி வியாகூலத்தோ
௰உ. டும் அவிடம்விட்டு நீங்கி* லோகதண்டமென்று சொல்லுகின்ற திண்டீ
ரவனத்தில்வந்து தனிமுதலாகிய கண்ணபிரானை இடைவிடாதிதயத்தி
விருத்தி தளர்ச்சியில்லாத தவம்புரிந்திருந்தனர்கள். இப்படி இவர்களிரு
க்கவே, கரியமேகம்போலும் வடிவமுடைய கண்ணபிரான் ருக்குமணிதே
௰ங. வியாரைப்பிரிந்து* இருக்கமாட்டாதவராய், அவள் எவ்விடம்சென்று
ளோவென்று விருட்சங்கள் நெருங்கிய பெரிய காடு, வனங்களெங்கும்
தேடிக்கொண்டு விஸ்தாரமான கோகுலத்துக்குவந்து முன் பசுக்கூட்
டங்களைத் தாமேய்த்தபொழுது, அவைகளை ஓட்டுங் கோலையே தமது
௰ச. கையில் தடியாய் இலங்கும்படியாகவும்* தம்முடைய சங்கையே
பிக்ஷாபாத்திரமாகிய கமண்டலமாகவும், தமது கண்டத்தின் துளப
மாலையையே தாழ்வடமாகவும், தமது காதணியையே குண்டலங்களா
கவும் கொண்டு சந்நியாசியாகி எங்குந்தேடிக்கொண்டுவந்து திண்டீர
௰ரு. வனத்தைக்கண்டார்* அந்தத் திண்டீரவனமானது மிகவுஞ்செழி
த்து மேன்மையாகிய புட்பங்கள் நிறைந்திருக்கின்ற அழகையும், இனி
மையான காய்கனிவர்க்கங்களின் மிகுதியையும், மிருதுவான மயில்
கள், குயில்கள், அழகிய கிளிகள், நாகணவாய்ப் பக்ஷிகள் மனக்களிப்
புடன் வாசஞ்செய்கின்ற சிறப்பையும் தடாகங்களும் அத்தடாகங்களி
லுள்ள தாமரைமலர்களில் வாசஞ்செய்கின்ற அன்னப்பட்சிகளுடைய
சிங்காரங்களையும் கண்ணன் கண்குளிரப்பார்த்து ஆச்சரியமடைந்து
௰சா. இவ்விடத்தில்* கமலாசனியாகிய இலக்குமி இருந்தாலும் இருப்
பாளென்று தம்முள்ளே நினைவுகூர்ந்து என்உடலில் வாசமாயிருந்த
என்னுயிராகிய சுந்தரமே என்று வாயால் கூவிக்கொண்டு பூத்துத்
தழைத்தோங்கிய சண்பகவிருக்ஷங்களும் புன்னைவிருக்ஷங்களும் வண்டு

கள் சப்திக்கின்ற அசோகவிருக்ஷங்களும் பொருந்தி விளங்குகின்ற
சோலைக்குள் பிரவேசித்து சமானரகிதமான ருக்குமணிதேவியார்*
௰௭. தபஞ்செய்துகொண்டிருப்பதைக்கண்டு நேராகவந்து மிகவும் அன்பாக
நோக்கி உலகமுழுவதும் வணங்கும் தாமரைமலராகிய கோவிலில் வாச
மாயிருக்கின்ற இலக்குமி, பேசும்படியான என் சீவனே என்னு
டைய நெஞ்சைவிட்டுநீங்கி என்னை வெற்றுடம்பாக்கி இக்காட்டில் நீ
௰௮. தனியேவந்திருப்பது என்னகாரணம்* இதுவோ மனிதசஞ்சாரமில்
லாததும் மகாபயங்கரத்தைத் தரத்தக்கதுமாகிய சோரமான வனம்
இவ்விடத்துக்கு நீ எவ்விதமாய் வந்துசேர்ந்தாய் இப்படி வருவ
தற்கு உன் மனந்தான் எப்படித் துணிந்தது நீ தைரியமாய் ஒண்
டியாகவருவதற்குக் காரணம் என்னவென்று துறவிவேடமாக வந்த
௰௯. கண்ணன் கேட்டனன். அப்போது ருக்குமணிதேவியார்* மகா சுந்
தர புருஷோத்தமனாகிய பெருமானைப்பார்த்து நீயார் கோலைக் கையில்
பிடித்துக்கொண்டு இவ்விடத்தில் என்னசெய்வதற்காக வந்தாயென்று
கேட்டாள். அப்போது கோபாலகிருஷ்ணன் சேல் மட்சங்களுக்
குச் சமானமாகிய நேத்திரங்களையும் நூலின் இழைக்குச் சமானமா
கிய இடையினையுமுடைய என் பிராணநாயகியே உன்னுடைய பதி
நானே, உன்னையே தேடிக்கொண்டு வந்துசேர்ந்தேனென்று சொல்
௨௰. லினர்* அதுகேட்டு லெட்சுமிதேவியார் மிகுந்த கோபமாகச் சந்நியா
சியாகவந்த தேவாதிதேவனைப்பார்த்து, ஓய், துறவி! என்னுடைய பர்
த்தாவாகிய அநந்த கல்யாணகுண லீலாவினோதருக்கு அளவிறந்த பத்
தினிமார்களுண்டு அவர்களைவிட்டு என்னிடத்தில் ஒருகாலத்திலும்
வரவேமாட்டாரென்கின்ற நிட்சயம் தெரிந்துள்ள யான் வனமத்தி
யில் தனியே இருந்து உத்தம தவம் பண்ணுகின்றேன் என்னிடத்தி
ற்கு வேறு வேடம் தரித்துக்கொண்டு நீவந்து என்னாயகனென்று சொ
௨௧. ல்லுகின்றாயே, உன்னைப்பார்த்து யோசிக்குமிடத்தில்* மகா வஞ்ச
னைக்காரனென்று தோற்றப்படுகிறது. அன்றியும், தனித்திருக்கும்
ஸ்திரியினிடத்தில் எவ்வளவும் பயங்கரமில்லாமல் வந்தது தகாத
காரியமாம். ஆதலால், சற்றுநேரமாவது இவ்விடத்தில் நில்லாமல்போ
ய்விடென்று மிக உக்கிரகோரமாக உரைத்தார்கள். அதுகேட்ட கரு
மேகவண்ணனான சுவாமி மிகவுமயக்கங்கொண்டு, நிமைக்கொட்டாத
௨௨. வராய்* தன் கையிற்பிடித்திருந்த கோலை இரண்டு முளந்தாள்களா
லுமிடுக்கிக்கொண்டு, இரண்டு கைகளையும் இடையிலே வைத்துக்கொ
ண்டு, இரண்டு நேத்திரங்களையும் நெருக்கி நாசிமுனையை நோக்கின
நிலையராய் ருக்குமணிதேவியாருக்கு எதிரே மகாவிருப்பத்துடன் இப்
போதும் நின்றனர். பார்வதி அது எவ்வளவுகாலமென்று நீ கேட்
௨௩. பாயாகில் இதுவரையிலும்* இருபத்தெட்டு துவாபரயுகங்களாயின.
அவற்றை நீ எண்ணிப்பார்த்துக்கொள்ளென்றுபரமேசுரர் கூறி
னர். அதுகேட்ட உமாதேவியார், பசுபதியாகிய தன் நாயகரைப்

பார்த்துப் பின்பு நடந்த சங்கதிகளையும் குறைவில்லாமல் மிகுந்த அன்புகூர்ந்து சொல்லியருளவேண்டுமென்று வணக்கஞ்செய்து கேட்டனள்.

## திண்டீர அசுரன் சரித்திரம்.

கலைமதியைநிகர் முகமும்கயல்விழியும் வள்ளையுறழ்செவியுங் கன்னற்
சிலைநுதலும் கொவ்வைச் செங்கனிவாயும் அமிர்தமொழியுஞ்சிறந்த
மலைமகளே மிகவலிய திண்டீரவசுரனென்போன் திருமாலாலே
நிலைமையதாம் பெரும்பேறுபெற்ற சரித்திரமதனை நிகழ்த்துவேனால்.

பூர்ணமதியை ஒத்த வதனமும் சேல் மச்சங்களை ஒத்த நேத்திரங்
களும் வள்ளைப்பூவை ஒத்த செவிகளும் கரும்புவில்லை ஒத்த புருவங்
களும் சிவந்தகோவைக்கனியை ஒத்த செவ்வாயும் அமிர்தத்திற்கு
ஒப்பாகிய மொழியும சிறந்து விளங்குகின்ற பருவத ராஜபுத்திரியே
அதிக புஜபலபராக்கிரமமுடைய திண்டீர அசுரனனவன் ஸ்ரீ ஹரியி
னலே ஒருகாலத்திலும் அழிவில்லாத பெரும்பேறுபெற்ற சரித்திரத்
உச. தைச்சொல்லுகின்றேனென்று சொல்ல ஆரம்பித்தார்* திண்டீரன்
என்னும் பெயரினையுடைய ஓரசுரன் இருந்தான் அவன் இரவைப்
போக்கிப் பகலையுண்டாக்குகின்ற சூரியனுடைய ரதம் ஆகாயமார்க்கத்
தில் செல்லவொட்டாமல் தடுத்தும் உலகத்திலுள்ள சீவராசிகளை
இமிசைப்படுத்தியும் வந்தான் அதுகண்ட தேவர்களும் ரிஷிகளும்
உடு. யோசித்து எல்லாரும் ஒன்றாகக்கூடிக்கொண்டு* ஸ்ரீமந் நாராயண
னுடைய சரணத்தில் அபயமென்று அடைந்தார்கள் அப்போது நீல
மேனியையுடைய பரமன் அவர்களிடத்தில் கருணை கூர்ந்து நீங்கள்
அஞ்சாதிருங்கள் நாம் பூமியில் மல்லிகார்ச்சுனனாக அவதரித்து உங்கள்
துக்க நிவாரணம் பண்ணுகிறோமென்று அவர்களுக்கு வரங்கொடுத்
தனுப்பினர் அக்காலத்தில் யாவரும் அறியும்படியான புகழையுடை
யோனும் மகா புண்ணியவானுமான ஸ்ரீ சந்த்ரனென்னும் ஓரரசன்*
உசா. என்னைக்குறித்து ரேதகுண்டத்தில் நின்று நெடுநாள் அருமையான
தவஞ்செய்தான் நாம் அவன் தவத்துக்கு இரங்கி அவனெதிரே பிர
சன்னமாகி உனக்கிச்சையான வரத்தைக்கேளென்றோம் அப்போதவ்
வரசன் விஷ்ணுவைப்போலும் புத்திரனையருள்செய்யவேண்டுமென்று
கேட்டான் அப்போது அந்த விஷ்ணுவே உனக்குப் புத்திரனாக வரு
உஎ. வாரென்று நாம் பிரியமாக வரங்கொடுத்தோம்* அந்தப்பிரகாரமேஸ்ரீ
லெக்ஷிமிநாயகனவதரித்து மல்லிகார்ச்சுனனென்னும் நாமத்தை உடை
யவராய் வேட்டையாடுகிறதற்காகத் திண்டீர வனத்தில் பிரவேசித்தா
ரப்போது திண்டீரனென்னும் அசுரராஜன் சொல்லுவதற்கரிதானமகா
உஅ. புஜபல பராக்கிரமராகிய மல்லிகார்ச்சுனரைப் பார்த்து* அடா துஷ்
டா ; நான் வாசம்பண்ணுகிற வனத்தில் கொஞ்சமாவது பயமில்லாமல்

வேட்டையாட வந்தாயல்லவா என் உணவுக்கிசைந்த சாப்பாடானு
யென்று அதிகோபங்கொண்டு போர் செய்ய வந்தபொழுது இரு
பேருக்கும் கொடிய யுத்தம் நேரிட்டது இப்படி ஒருவருக்கொருவர்
தோல்வியில்லாமல் மாமிசங்களெல்லாம் சிதறும்படியாக ஆயிரம்
௨௯. வருஷம் யுத்தம் செய்தார்கள்* இவ்வகையாக இருபேரும் போர்
செய்யுங்காலத்தில் மல்லிகார்ச்சுனராகிய தேவன் இவ்வசுரனோடு
நாம் பலகாலமாக யுத்தம் செய்தும் இவன் எவ்வளவும் தோல்வியடை
யாமல் நம்மோடு சமமாக யுத்தம் செய்கிறான எவ்வகையாயிவனுயி
ரைப்போக்குவதென்று தமக்குள்ளே ஆலோசனை செய்து லோக
தண்டமென்கிற கதையினால் இவனைச் சம்மாரஞ் செய்யவேண்டு
மென்று அக்கதையைத்தம்முடைய கையிலெடுத்து அவனை அடித்தார்
அந்த அடிபட்டமாத்திரத்தில் உயிர் போகும்படி பூமியில் வீழ்ந்தான்*
௩௰. விழுந்தவன் பிராணன் போகும் தருணத்தில் ஸ்ரீ ஹரியென்று அவ்
வசுரன் சொல்லிய ஓசையை அவன் பிராணன் போகும்படி வீழ்த்
தோனாகிய மல்லிகார்ச்சுனமூர்த்தி யுணர்ந்து சூரியகிரணத்தைப்போ
லும் பிரகாசிக்கின்ற சொர்னமயமுள்ள தமது நிசமான திருமேனி
யுடன் அவ்வசுரனுக்கெதிரே பிரசன்னராகத்தோன்றி ஏ; அசுர
வேந்தனே உனக்குவேண்டிய வரங்களைக்கேளென்று கருணைக்கண்
௩௧. ணன் கூறினர்* சுவாமியைக்கண்ட அவ்வசுரன் அதிபக்தியோடு
அநேகவிதமான தோத்திரங்களைச்செய்து அகணிதாலங்கார லெக்ஷிமி
பதியினது திருமுகத்தைப்பார்த்து என் அய்யனே தங்கள் கதையி
னாலே நான் மரணமாயினபடியால் தாங்கள் கைக்கொண்ட கதையின்
பெராகவே இவ்வனத்துக்கு லோகதண்டமென்னும் பெயர் விளங்கு
வதாக்கி இதில் அற்புதமான பட்டணமும் ஒன்று செய்து அந்த நகரத்
௩௨. தில் தனிமுதலாகிய தாங்கள் பெருஞ்சிறப்புப்பொருந்தி* எக்கால
மும் இருந்து வளர்ந்தருளவேண்டும் பார்த்தபேர்களின் பாபங்களை
எல்லாம் அந்நிமிஷத்திலே போக்கி விளங்குகின்ற பானுதீர்த்தம் விளங்
குகின்றது பிரமாணத்தில் அடங்காத வல்லமை பொருந்திய கதாயுதத்
தினால் யானிறந்தமையால் இப்பொழுது அக்கதையின் பெயராலே
உளதாகிய ஓர் தீர்த்தமும் உண்டாக்கி அத்தீர்த்தத்தின் இடமாகவே*
௩௩. எக்காலமும் நிலைபெற்றிருக்கும்படியாக அக்கதையை நாட்டவேண்டும்
பிரீதியாக இக்கதையைப்பார்த்துத் தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணி இக்
கதையைக் கட்டித்தழுவினபேர்களின் பாவங்களெல்லாம் போகும்படி
யாகவும் அநுக்கிரகம் செய்தருளவேண்டுமென்று அவ்வசுரன் வேண்
டிக்கொண்டான். அவன் வேண்டுகோளுக்குக் குறைவில்லாமல் மன்மத
ன்பிதாவாகிய விஷ்ணுதேவர் அதிக சந்தோஷத்துடன் அவ்வரங்களை
௩௪. எல்லாம் கொடுத்து* அவ்வசுரனைத் தமது வைகுண்டத்தில் எக்காலு
மிருக்கும்படியாக அனுப்புவித்தார் கண்ணபிரான் சொல்லிய அந்நாள்
முதல் அவ்வனம் லோகதண்டமென்னும் பெயர்கொண்டு விளங்குவ

தாகி மேலும் அவ்வசுரன் கேட்டுக்கொண்டவைகளெல்லாம் பொருந்தி நாடோறும் மிகமேன்மையாய் யாவரும் மகிழ்ச்சியடையும்படியாக விளங்கியது※

## புண்டலீகர் சரித்திரம்.

என்னையாளுடையநாயக கேட்டற்கின் சுவைத்ததாய் மென்மேலுமூறும்
பின்னைகேள்வன் றனாடலுமன்னோனடியர்தம் பெருமியற்கையும் புகல்க
என்னவும்பிறைசூடி புண்டலீகனென்னு நாமனாரும் பொறையுயிர்த்த
அன்னைதந்தைதம் சேவையாற்பெற்ற அரியபேற்றினையறை குவனாமால்.

திண்டூர அசுரன் சரித்திரத்தைக் கேட்ட உமாதேவியார் கங்கா
தரனைப் பார்த்து என்னை அடிமையாகக்கொண்டபிராணநாயக கேட்க
கேட்க மேலு மேலும் இனிமையான சுவைபெருகுகின்ற இலக்குமி
நாயகனுடைய திருவிளையாடலையும் அவருடைய பரமபக்தர்களுடைய
சரித்திரங்களையும் சொல்லியருளவேண்டுமென்று மிகவும் பிரியமாகக்
கேட்டபொழுது சந்திரசேகரரானவர் புண்டலீகனென்னும் பெயரை
யுடைய ஓர் மறையவனானவன் தன்னை ஈன்ற தாயையும் தகப்பனையும்
பூசை செய்து அதனால் தான் அடைந்த பெருங்கதியைச் சொல்லு
கடு. கின்றேன்* லோகதண்டமென்னும் பெயர்பெற்று விளங்குகின்ற
அத்தலத்தில் மறையோர் குலத்தில் மேன்மையானவரும் அன்பு பொரு
ந்திய நற்குணமுடைய ஞானபரராயும் பாபரகிதராயும் சனனமரண
துக்க நிவாரணமாகும்படியாக ஸ்ரீமந்நாராயணனிடத்தில் தியானத்
தோடு பொருந்திய ஆனந்தகரமான மெய்ந்நெறியினிற்கின்ற சன்னு
கசு. வென்னும் நாமத்தையுடைய ஒரு முனிவரிருந்தார்※ அவர் நான்கு
வேத பாராயணமுடைய மறையவர் குலத்தில் தோன்றிய சாத்யகி
என்னும் பெயர் பூண்ட மாதை விவாகஞ்செய்துகொண்டு இல்லற
தருமம் வழுவாமல் வாழ்ந்து வந்தனர் அவருக்கு வெகுகாலம் புத்திர
ரில்லாமையால் மிக வருந்தித்தவஞ்செய்தபின் அருமையாய் ஒரு புத்தி
ரன் உண்டாகக்கண்டு அதிக மனமகிழ்ச்சியடைந்து புத்திரனுக்கு
கஎ. என்ன பெயரிடுவோமென்று யோசனை செய்து※ புண்டலீகரென்று
பெயரிட்டு மிகுந்த பிரியத்துடன் நாளொருமேனி பொழுதொரு
வண்ணமாக வளர்த்து வித்தியாப்பியாசமும் உபநயனமுஞ் செய்வித்து
ப்பதினாறு வயதானபின்பு தமக்குத்தக்க பிராமணர் குலத்தில் பெண்
ணெடுத்து விவாகமுஞ் செய்வித்தனர் அப்பால்புத்திரனாகிய புண்ட
லீகர் பெண்சாதியுடன் கூடி வாழ்ந்திருக்கையில் தாமும் தன்
பெண்சாதியுஞ் சேர்க்கையாகவும் தாயையும் தகப்பனையும் வேறாக
வும் பாவித்து அவர்கள்பேரில் வெகுண்டு துன்மார்க்கமாய் நடந்து
கஅ. தந்தை தாயர்களைப் பலவிதமாய் தூஷித்துத் துன்பப்படுத்தித் தாம்
தாசியோடுகூடி உறவாடி அவள்ஏவின ஊழியவேலைகளைச் செய்து

கொண்டு தினந்தோறும் இவர் அலைந்துதிரிவதைத் தாயும் தகப்பனும் பார்த்து அப்பாபுண்டலீகா நம்முடைய குலாசாரத்துக்கு முழுவிரோ
௩௯. தமாய் நீ நடக்கின்றது நியாயமல்லவென்று* நன்மையான புத்தி சொல்லினார்கள் இப்படி அவர்கள் சொல்லியதற்குக் கொஞ்சமும் பயப்படாமல் அவர்களோடெதிர்த்து இன்னமும் நீங்கள் சாகாதிருக்கிறீர்களாவென்று கோபங்கொண்டு அகம்பாவத்தால் அவர்களை அடித்துத் துர்ப்பாஷையாய்த் திட்டிப்பகைகொண்டு அவர்களுக்கு அன்னபானாதி
௪௰. யும்கொடாமல் தாமும் தம்பெண்சாதியும் வேறாக இருந்தார்கள்* தாயும் தகப்பனும் அவர் செய்கின்ற அநியாயத்தைப் பொறுக்கமாட்டாதவர்களாய் நாம் இந்தத்துரோகியைவிட்டு விலகி எங்காகிலும்போய் மரணமடைவது நல்லதென்று யோசித்துக்கொண்டிருந்தார்கள் அப்படியிருக்கிற சமையத்தில் காசியாத்திரைபோகிறபேர்கள் அவ்விடத்தில் வந்திறங்கினார்கள் அவர்களைக்கண்டவுடன் இவர்கள் அவர்கள்பின்றொ
௪௧. டர்ந்து காசிக்குப்போக எண்ணினார்கள்* யாத்திரைக்காரர்கள் போகிறபோது விருத்தராகிய சன்னுவும் அவர் பாரியாராகிய சாத்யகியாரும் அவர்களோடு சேர்ந்துபோயினார்கள். வேறுசிலர் காசியாத்திரைபோகிறபேர்கள் மறுநாள் அந்த லோகதண்டமாகிய வனத்திலே வந்திறங்கினார்கள். அவர்கள் காசியாத்திரை போகின்ற பெருந்தன்மையைப் புண்டலீகர்பார்த்து அவர்களோடுகூடித் தாமும் காசியாத்திரை
௪௨. போகவேண்டுமென்று நினைவுற்றார்* அப்படி நினைத்தவர் தம் பாரியாளைப்பார்த்து நாமும் காசியாத்திரைபோய் அக்காசியின் மகத்துவங்களை எல்லாம் பார்த்துவருவோம் நீயும் வருகவென்று தாம் ஒரு குதிரையின்மேலும் அவளொரு குதிரையின்மேலுமாக ஏறிக்கொண்டு சந்தோஷமாக யாத்திரைபோகிறவர்களுடன் இவர்களும் போயினார்கள்
௪௩. இப்படிப்போகிறமார்க்கத்தில்* முன்னே பாதசாரியாக நடந்துபோயின தாயும் தகப்பனும் விருத்தாப்பியத்தினாலே யாத்திரைபோகிறவர்களுடன் தொடர்ந்துபோகச் சக்தியில்லாமல் வருத்தத்தோடும் தள்ளாடிக்கொண்டுவருவதைப் புண்டலீகர்பார்த்தும் பகையாளியைப்போலே எண்ணிக் காசிக்குச் சமீபமாயிருக்கின்ற குக்குடயோகீஸ்வரர் பர்
௪௪. ன்னகசாலையின்* எதிரில் இருக்கின்ற தர்மசத்திரத்தில் வந்து இறங்கினார்கள். இஃது இப்படியிருக்க பசுபதியானவர் பார்வதியைப்பார்த்து நாம் சொல்லிய பரிசுத்தராகிய குக்குடமுனிவரது மகத்துவத்தைச் சொல்வதற்கு இரண்டாயிர நாவினையுடைய ஆதிசேடனும் நா
௪௫. ணமடைவான்* பிரமதேவன்முதலான மலரகிதர்கள் என்பவர்கள் யாவரும் தங்களுக்கு ஒரு தோஷம் சம்பவித்தால், சத்வாம்சராகிய அவரைத் தோத்திரஞ்செய்ததனால், அத்தோஷத்தினின்று நீங்குவரென்றால் அவருடைய தவத்தின்மகிமையை யாவர்சொல்லத்தக்கவர்*
௪௬. அக்குக்குடமுனிவர் தம்மைப்பெற்ற தாய்தந்தையினுடைய சேவையையே எந்நாளும் இடைவிடாதுசெய்து அவர்கள் சந்நிதானத்தில்

இருந்து பந்தபாசத்தை நீக்கும்படியான புராணங்களை வாசிப்பார்*
௪௭. தாம் சாப்பிடுவதிலும், தூங்குவதிலும், பிரியம் வைக்கமாட்டார். ஒரு
நிமிஷநேரமாவது தாய்தந்தையைவிட்டுப் பிரியமாட்டார். சமீபத்தி
லிருக்கிற காசியையும், கங்காநதியையும் அவர்களைக்கூடியிருப்பதிலும்
௪௮. பெரிதென்று தம்முடைய புத்தியில் மதிக்கவேமாட்டார்* தன்னைப்
பெற்ற தாய்தந்தையரைப் பார்க்கிலும், பெரிதானது ஒரு தெய்வமும்
இல்லையென்கின்ற தீர்மான சித்தத்தை யுடையோரிடத்தில் குற்றமற்ற
கங்கை, யமுனை, சரஸ்வதியாகிய நதிமங்கையர்கள் நடுராத்திரியில் வரு
௪௯. வார்கள்* உலகத்திலுள்ளோர் பலரும் தங்கள் பாபங்கள்போகும்படி
ஸ்நானம்பண்ணுவதால், அளவில்லாதஅப்பாவங்களையெல்லாம் தங்கள்
மேனியில்கொண்டு நீசரூபமாகி அந்நீசரூபம் போகும்படியாக அவர்
பர்ன்னகசாலைக்குள் பிரவேசித்து, ஒரு கணப்போது அவருக்கு ஊழி
௫௰. யஞ்செய்து* தங்கள் அழகு விளங்கும்படியான ரூபத்தோடு போ
வார்கள். அவ்விடத்தில் நாடோறும் தாய்தந்தையர்க்குத்தக்கதாக மகா
தவஞ்செய்கின்ற மேன்மைபொருந்திய குக்குடதபோதனர் கீர்த்தியை
௫௧. இவ்விடத்து என்னாலும் சொல்லிமுடியாதென்று சொல்லி* மேலும்சந்
திரசேகரர் சொல்லத்தொடங்கினார். அந்தக்குக்குடமுனிவர் ஆச்சிரம
த்துக்கு எதிரில் இருக்கின்ற தருமசத்திரத்தில் மனைவியுடன் வந்திற
௫௨. ங்கினபுண்டலீகர் அப்பரிசுத்தகுணமுள்ளவரிடத்தில்* வந்து குக்குட
ரிஷியைப்பார்த்து மிகுந்த கீர்த்திபொருந்திய காசி இன்னும் எத்தனை
தூரம் இருக்கின்றது சொல்லுமென்றுகேட்க அந்தக்காசி எப்படியிரு
க்குமோ நான் அறிந்திலேனென்று அக்குக்குடமுனிவர் சொல்லினார்*
௫௩. நீர் இவ்வளவு சமீபத்திலிருந்தும், உத்தம ஸ்தலமாகிய காசியை பிரிய
மாகப் பார்த்திலீராகில், மனிதர்களுக்கு ஒப்பாய்ப் பிறந்திருக்கின்ற
உம்முடைய சென்மம் ஒரு பிரயோசனமுமில்லாமல் போயிற்றெ
௫௪. ன்று அம்முனிவர் முன்னின்று இகழ்ச்சியாய் நகைத்துத்* திரும்பித்
தாம் தங்கின சத்திரம்வந்துசேர்ந்தார். அன்று ராத்திரிபதினைந்து
நாழிகை நேரத்தில் நதித்தெய்வங்களான மங்கையர் மூன்றுபே
௫௫. ரும் கொடிதாகிய பயங்கரமான நீச வடிவத்தைப்பொருந்தி* குக்குட
தபோதனர் பர்ன்னகசாலையிடம் போகிறபொழுது நித்திரையில்லாமல்
விழித்துப் பார்த்துக்கொண்டிருந்த புண்டலீகர்க்கு அவர்கள்போனது
௫௬. தெரிந்தபடியால், பசாசுகள் என்று மிக பயமடைந்தார்* குக்குடர்
மனைக்குள் பிரவேசித்த மூன்றுமாதர்களும் அங்குள்ள குப்பைகளை
யெல்லாம் கூட்டிப்பெருக்கியானபின் நிலமுழுதுமெழுகி ஒருநிமிஷத்
௫௭. தில் ஈனவடிவம் நீங்கி அழகுபொருந்தி* பிரகாசமான தெய்வீகரூப
த்துடன் வெளியேவந்தார்கள். அப்போது சத்திரத்தில் மிக்க பயம்
கொண்டிருந்த புண்டலீகர் இம்மூவரும் மின்னலுக்கொப்பான பிரகா
சமாக வருவதைப்பார்த்து ஆச்சரியமடைந்து தோஷம்நீங்கிய நதிமங்
௫௮. கையரிடத்தில் வந்து* அழுக்கடைந்த விகாரரூபமாக இந்த நடுராத்

திரியில்வந்து இந்த மடத்துக்குள் புகுந்த நீங்கள் இப்போது மிக்க பிர
காசரூபமாக வெளிப்பட்டு வருகின்றீர்களே, நீங்கள் யாரென்று கேட்
டார். அப்போது பரிசுத்தமாதர்களில் கங்காதேவி சொல்லுகின்
௫௯. றாள்* ஒழியாத பாபசம்பந்தமுடைய துராத்மனாகிய நீ சஞ்சலசித்த
மில்லாத எங்கள் எதிராக வரலாமா, தூர விலகிப்போடாவென்று
மிக்க கோபங்கொண்டாள். அப்போது புண்டலீகர் கங்காதே
௬௰. வியின் பாதங்களை* இரண்டு கைகளினாலும் பிடித்துக்கொண்டு
என் தாயே, நீ யென்னைத்தொடர்ந்த ஜென்மாந்திர பாவங்களை
யெல்லாம் போக்கி அருளவேண்டுமென்று இரக்கம் வரும்படியா
கக் கனிவாய்க்கூறினார். ஒப்பில்லாத புகழ்பெற்ற கங்காதேவி அப்போ
௬௧. து சொல்லுவாள்* அடாகாலைவிட்டெழுந்திரு நீ இந்தச்சென்மத்தில்
மிகுதியான பாவகிருத்தியங்களைச் செய்திருக்கின்றனை ஆனால் முன்பு
அளவில்லாத சென்மங்களை எடுத்திருக்கின்றாய் அப்போதெல்லாம் நல்
லொழுக்கந்தவறாமல் நடந்து உத்தமமானதவங்களை அநேகமாகச் செய்
௬௨. திருக்கின்றனை ஆகையால்நான்* இந்த மகானுபாவராகிய குக்குட
முனிவரைத் தரிசித்தாய் அவரைத் தரிசித்த புண்ணியத்தால் எங்களை
யும் கண்டாய் ஆதலால் இனி எல்லாப்பாவங்களும் தீர்ந்து நன்மை
யான பரிசுத்த தன்மையில் அதிகரிப்பாயென்று சொல்லி மேலும்
௬௩. சொல்லுகின்றாள்* நான் கங்கை இவள் யமுனை அவள் சரஸ்வதி
சுவர்க்கமத்திய பாதாளமாகிய மூன்றுலகத்தவர்களும் எங்களிடத்தில்
வந்து ஸ்நானஞ்செய்தலால் எங்களைத் தொட்டநிமித்தம் பாவதோஷங்
௬௪. களினின்று நீங்கிப் பவித்திரராகின்றனர்கள்* அவர்கள் செய்த பாவ
ங்கள் எல்லாவற்றையும் நாங்கள் வகித்துக்கொண்டு நெருங்கிய மலின
தேகமுடையவர்களாகி இந்த நிராசையுடையவரான குக்குடதபோத
னர் மனையில்வந்து ஊழியவேலைசெய்து அந்நீசவடிவம் நீங்கிப் புதுமை
யான அழகிய வடிவம் பெற்றுக்கொண்டு தினந்தோறும் இவ்வண்ண
௬௫. மாகவே வருவோம்* நாங்கள் அடைந்த அளவிறந்த பாவங்களும் ஒரு
நிமிடநேரத்தில் போகும்படி செய்கின்ற உத்தமராகிய குக்குடமுனி
வர் பெருந்தன்மையைச்சொல்லும் தகுதியுடையவர்கள் ஒருவரும் இல்
லையென்று கங்காதேவியார் சொல்லியபொழுது கங்காதேவி பாதத்
தைப் பிடித்துக்கொண்டு பூமியில்கிடந்த புண்டலீகர் எழுந்துநின்று
௬௬. இவ்வார்த்தை சொல்லுகின்றார்* தாயே உங்களுடைய பாவங்களை
எல்லாம் போக்கும்படியாக இவ்விடத்திலிருக்கின்ற குக்குடதபோதனர்
செய்கிற புண்ணியம் யாதென்று கேட்டார். அதற்குக் கங்காதேவி
தன் மாதாபிதாவுக்குச் செய்யும் பணிவிடையிலும் மேற்பட்ட புண்ணி
௬௭. யம் வேறொன்றுமில்லை* கோடி யாகங்கள் செய்ததனால் வரும்
பலமும் பூமியை ஆறுதரம் பிரதக்ஷணம் செய்ததனால் கிடைக்கும்
நன்மையும் ஒப்பில்லாத காசியை இரண்டு லெக்ஷம் தடவை பிரதக்ஷ
௬௮. ணஞ் செய்ததனால் வருகின்ற நன்மையும் தாயை வணங்குதல்* ஒரு

தரம் செய்யில் மேற்சொல்லிய எல்லா நன்மைகளும் கிடைக்கும் சத்
பாவத்தோடு தந்தையை ஒருதரம் வணங்கினால் நித்தியமான மோக்ஷத்
தைத்தருகின்ற ஞானமுண்டாகுமென்று சொல்லப்பட்ட இவ்விர
ண்டினால் ஸ்ரீமந் நாராயணன் எதிரே பிரசன்னமாக வருவானெ
௬௯. ன்று மேலான பெரியோர் சொல்லுவார்கள்* இப்படிப் பெரியோர்
சொல்லிய வாக்கியத்தை இவ்வரிய தபோதனர் தம்முள்ளத்தில் உறுதி
யாகக்கொண்டு தன் தாயையும் தகப்பனையும் தவிரத்தனக்கு வேறொ
ரு தெய்வமுமில்லையென்று நிச்சயித்துத் தினந்தோறும் இரவிலும்
பகலிலும் இடைவிடாமல் அவர்களுடைய பணிவிடையே செய்து
வருகின்றனர். இங்ஙனமின்றி தன் தாயையும் தகப்பனையும் தூஷிக்
௭௰. கின்றவன்* கொடுமையான பாவத்தொழிலையுடைய நீசனாகப்பிறந்து
இனிவருவதாகிய கற்பாந்தம் வரையினும் நீங்காதிருக்கின்ற கொடிய
ரௌரவாதி நரகத்தையடைவன் மேல் அவன் எத்தனை ஜென்மங்களை
௭௧. எடுத்தானாயினும்* அத்தனை ஜென்மங்களிலும் பெருவியாதிகொண்டு
விகாரமாயிருப்பான் அவனைக்கண்ணால் பார்த்த பேர்களும் மகா பாவி
களாவார்களென்று கங்காதேவி மொழிந்தாள். அப்போது புண்டலீ
கர் மிகவும் பயங்கரமடைந்து ஆ ஐயோவென்று மிகத்துன்பமுற்ற
௭௨. னர்* இங்ஙனம் துன்பமடைந்தவர் நான் குற்றமில்லாத மானுடஜென்
மத்தை எடுத்தும் நன்மையான பலனை அடையாதவனாய் வீணாகப்
பண்ணினேன் கொலைபோன்ற பழிபாவங்களையே செய்தேன் இப்பாவ
௭௩. த்துக்கு நான் என்ன செய்வேனென்றேக்கமுற்றார்* மாதாபிதாவுக்
குப் பணிவிடை செய்வதையுந்தவிர்ந்து அவர்கள் மனம் நொந்து வருத்
தப்படும்படியாகவுஞ் செய்தேனல்லவோ இந்த மகா பாதகத்தினின்று
நான் எப்படி நீங்கப்போகிறேனென்று அந்தக் கங்காதேவி பாதத்தி
௭௪. ல் விழுந்து கதறியழுதார்* அப்போது பாகீரதி அவரழுவதைப்
பார்த்து மனமிரங்கிப் பாபகிருத்தியத்தையுடையவனே இனிமேலா
வது தெளிவான சித்தத்துடன் உன் தாயுந் தகப்பனுமே எல்லாத்
தெய்வங்களுக்கு மேலான தெய்வமென்று கருதி இது முதல் அவர்களு
௭௫. க்கு இசைந்த பணிவிடை செய்து வருவாயாகில்* பழிபாவங்களும்
உன்னைவிட்டு நீங்கும் திரிலோகங்களிலும் நிறைந்த புகழையுடைய
நிர்ம்மலரான சக்கரபாணியனான தேவாதிதேவனுடைய திருவருளும்
௭௬. உனக்குக் கிடைக்குமென்று* சொல்லிக் கங்காதேவி யமுனைசரஸ்
வதியாகிய இருவரோடும் சென்றனள் புண்டலீகர் நல்லது அம்
மணி அவ்வாறே செய்கின்றேனென்று மொழிந்து குக்குடர் மடத்
திற் புகுந்து அவர் பாதசேவை பண்ணிக்கொண்டு யாத்திரையாக
௭௭. வந்த தன் தாய் தந்தையரைத்தேடி இருவரையும் கண்டு அவர்கள்
பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்துத் தானும் தம் பாரியாரும் ஏறிக்கொ
ண்டு வந்த இரண்டு குதிரைகளின்மேல் அவ்விருவரையும் ஏற்றுவித்
துக்கொண்டு முன் உத்தேசித்துவந்த காசிநகர்க்குப்போய்ச் சேர்ந்து

பிரயாகை கயைமுதலான ஸ்நான கடங்களில் அவர்களுடன் தாமும்
எஅ. ஸ்நானம்பண்ணி* அவர்கள் செய்யவேண்டிய கிரியைகளை எல்லாம்
செய்வித்து பவளம்போன்ற அதரத்தையுடைய தமது பாரியாரும்
தாமும் சோர்வில்லாமல் அவர்களுடைய பணிவிடையைச் செய்து
கொண்டு அவர்கள் பணிவிடை செய்வதில் மிகுந்த பிரியசித்தராய்
ஊருக்குத் திரும்பிவந்து இருவரையும் தங்கள் மனையில் தெய்வம்போல்
எகூ. வைத்துத்தினந்தோறும்* எந்தச்சமயத்தில் அவர்களுக்கு எது வேண
டியதோ அந்தச்சமயத்தில் அதைக்கொடுத்து இரவிலும் பகலிலும் பரி
சுத்தரான குக்குட முனிவரைப்போல பரிசுத்த குணமுடையராய்
அ௰. விஸ்தாரமான பணிவிடை செய்துவந்தார்* இவர் இவ்வண்ணம்
மாதா பிதாக்களின் பணிவிடை செய்துக்கொண்டிருக்கையில் இதற்கு
முன்னான யுகத்தில் ஒப்பில்லாத வல்லமையுள்ள விருத்திராசூரன்
தேவராசாவான தேவேந்திரனுக்கு எப்பொழுதும் பகைமைசெய்து
அவ்விந்திரனைக் கொல்லுவதற்கான தவஞ்செய்வதற்குக் குற்றமில்
அக. லாதபாதாள லோகத்திற்குப்போய்* ஓரிடத்திலிருந்து அருமையான
தவஞ்செய்தான் இவனிப்படிப் பாதாள லோகத்திற்போய்த் தவஞ்
செய்வதைத் தேவேந்திரன் உணர்ந்து அவ்விடத்தில் பிரவேசித்துக்
கூர்மையான வச்சிராயுதத்தினால் அவன் சிறப்புற்றதலையைக் கண்
அஉ. டித்தான்* அவன் தலையை அரிகிறபொழுது விருத்திராசூரன் மிகு
கோபங்கொண்டு நான் தவஞ்செய்து கொண்டிருக்கும் தருணத்தில்
என் தலையை அறுத்தபடியால் மண்ணால் செய்யப்பட்ட செங்கலாக
அங. நீ பூவுலகில் வீழக்கடவதென்று சபித்தான்* அவனிட்ட சாபத்தி
னால் இந்திரன் செம்மை நிறமுள்ள செங்கலாய்ப் பூவுலகில் விழுவ
தற்கு முன்னதாய் ஸ்ரீ லெட்சுமிபதியை வேண்டி அநேகவித தோத்
திரஞ்செய்து துதித்தான் அவன் தோத்திரத்துக்காகத் தயைகூர்ந்து
எல்லாப் பாவங்களையும் போக்குகின்ற செந்தாமரை மலர்போலும்
அச. திருவடிகளையுடைய திருமால் அவனெதிரே பிரசன்னராகி* இந்திரா
நாம் புண்டலீகருடைய ஆச்சிரமத்திற்கு வருவோம் அங்கு கல்லாய்க்
கிடக்கும் உன்மீது நம்முடைய பாதங்களைவைத்து உனது பழைய வடி
வம் உனக்கு வரும்படியாகவும் செய்து என் பாதத்தில் எப்போ
தும் கல்லாகவே இருக்கும்படியாகவும் செய்வோமென்று கூறினர்*
அரு. அவரருளியபடியே, அன்றுமுதல் அடர்ந்த விருக்ஷங்களுடைய திண்
டீர வனத்தில் செங்கலாகவே கிடந்தான். இந்திரன் செங்கலாய் அவ்
வனத்திற் கிடந்த பின்பு அவ்வனம் பெரிய அழகிய பட்டணமானது
அசு. அதில் புண்டலீகர்க்கும் அரண்மனை உண்டாயது* கேளாய், பார்
வதி இத்தன்மை நடந்த காலத்தில், தமது பத்தினியாரான லெட்சுமி
தேவியின் கோபத்தைச் சமாதானம் பண்ணுவதற்காகப்போய், அவ
ளெதிராக நின்ற விஷ்ணுதேவர் இப்போது நாம் சொல்லிய மாதாபி
தாவுக்குச் சம்மதமாகப் பணிவிடைசெய்து வருகின்ற புண்டலீக

சிடம் வருவதற்குத் தம்முள்ளத்தில் நினைத்து அங்குநின்று எழுந்த
ருளி வருகின்ற அவருடைய திருமேனியின் அழகினைச் சொல்லுகின்
௮௭. றோம்* பிரமதேவன் தான் ஆசனமாகக்கொண்டு வீற்றிருக்கின்ற
தாமரைமலரே எல்லாமலர்களிலும் மேலான மகிமைபெற்றதென்று
எண்ணங்கொண்டிருந்தவன், பசுக்கூட்டங்களுடன் சென்ற ஸ்ரீகோ
பாலனுடைய பாததாமரையின் பெருமகத்துவத்தையறிந்து, ஏ; பக்
தர்களே! நம்மை எல்லாம் ஈடேற்றுவதற்காக, ஆகாய கங்கையைத்
தந்தருளிய பாதங்களுக்கு மேற்பட்ட பொருள் ஒன்றுமில்லையென்று
தன் வேதவாக்கால் சொல்லுகின்றதற்கொப்பாக அவர் திருவடியில்
௮௮. அணிந்த சிலம்புகள் மிகுந்தொலி செய்யும்படியாகவும்* யசோதை
அம்மாள் அநேகங் கயிறுகளால் கட்டிப்பார்த்தும் அளவுபடாத அவ
ருடைய இடையை நாம் எல்லோரும் கூடிப்போய் பரிசோதிப்போ
மென்று அச்சுவினி முதலான நக்ஷத்திரங்களெல்லாம விளங்குகின்ற
சோதியானது பிரகாசிக்க ஒன்றுகூடி வந்து, அவ்விடையைச் சுற்றிக்
கொண்டனபோலச் சுவர்ன அரைஞாணில் கிண்கிணியாகிய சதங்கை
கள் பிரகாசிக்கும்படி கோத்து கலகலவென்று தொனிசெய்யும்படி
சிற்றிடையில் பல மணிகளின் ஒளியும் விரவிப்பிரகாசிக்கும்படியாக
௮௯. வும்* மாதுர்வாக்ய, பிதுர்வாக்ய பரிபாலனம் செய்கின்ற ஊழியத்
தில் சிறப்புற்றுவந்த என்னைப்போல உலகத்தில் யாராவது தாய்தந்தை
யரின் பணிவிடைசெய்ய வல்லவரானால் அப்புண்ணியத்தால் அவர்க
ளெதிராக நான் சென்று அவர்களை இரட்சிப்பேனென்று தாம் கொ
ண்டிருக்கின்ற விரதத்தை யாவரும் அறியும்படியாக அழகுபொருந்
திய இரண்டு கைகளிலும் தரித்திருக்கின்ற நவரத்ந கங்கணங்கள்
௯௰. விளங்கி மின்னும்படியாகவும்* காளியனென்கின்ற சர்ப்பத்தின்
ஆயிரம் படத்தலைகளிலும் தமது பாதத்தை நாட்டி மிதித்து, அவனை
வென்ற அபாரமான சக்தியை அறிந்து அப்பேர்ப்பட்ட வல்லவரும்
சர்வ சீவர்களையும் அடிமைகொள்பவருமாகிய கண்ணபிரான் கைகளில்
நாம் போயிருந்தால், ராகு கேதுக்களைச் செயிக்கலாமென்று நினைத்
துச் சூரியனும், சந்திரனும் வந்திருப்பதுபோலும், விளங்குகின்ற
சங்கும், சக்கரமும், செந்தாமரை மலர்போலும், சிவந்த கைகளில்
௯௧. விளங்கித் தோன்றும்படியாகவும்* ஆயர்பாடியிலும், பிருந்தாவனத்
திலுஞ் சேர்ந்து, தனித்தனியாக ஆநந்தம் பெருகும்படியாகக்கூடி,
மகிழ்ந்து பிரியாவிடையாயிருந்த கோபிகாஸ்திரீகள் பிரிந்துபோயிருக்
கின்ற கிருஷ்ணதேவருடைய செய்கையைத்தெரிந்துகொண்டு துன்ப
த்தால் மெலிந்து அவர் மார்பிலிருக்கும் இலக்குமி தேவியார் அறியாத
வண்ணமாக எப்போதும் அவர் மார்பைவிட்டகலாதிருக்கும்படியாக
நவரெத்தின வடிவமெடுத்துச் சேர்ந்திருப்பதுபோல மார்பில் மணி
௯௨. மாலை மிகவும் துலங்கும்படியாகவும்* சந்திர சூரியர்கள் வசிக்கும்
மண்டலங்களுக்கு மேலாக நாமிருக்கின்றோமென்று கருவங்கொ

ண்ட நட்சத்திர கணங்கள் இடைபைச்சூழ்ந்து அவ்விடையளவுக்
கெட்டாமல் அவமானப்படுவதைப்பார்த்து, நாமுங்கூடி மிக்க அவமா
னத்தை உண்டாக்குவோமென்று அநேக சந்திரரும் அநேக சூரிய
ரும் மொய்த்திருப்பதுபோலச் செவிகளில் குண்டலங்கள் பிரகாச
௩௩. மாய் விளங்கும்படியாகவும்* சொருகிய மயிலிறகென்னும் கொத்து,
அழகு மிகுந்து விளங்கும்படி பொருத்தி அழகுதங்கிய மயிர்க்கொண்
டை துலங்க, சிரசில் நீல நிறம்பெற்ற வண்டுபோலச் சுருள் சுரு
ளாக மயிர் தொங்குதல், மதியைப் பிளந்துவைத்ததுபோலிருக்கின்ற
நெற்றியினிடத்துத் துவண்டு மொய்க்கவும், மிகுதியான ஒளியும், பிர
காசமுமுடைய நவரெத்நச் சுட்டியும் பட்டமும் பேரொளி பரப்ப
௩௪. வும்* சிம்மம்போலும், ரிஷபம்போலும், இளமையான மதயானை
போலும், நீல பருவதம்போலும் நடந்து, பாதம்பொருந்திய சுவடுகளி
லெல்லாம் சங்குச்சக்கரக் குறிகள் பொருந்தி விளங்கவும், திடமான
பத்தியுடன் தாய்தந்தையரைப் பூசனைசெய்யும் சமையத்தில் புண்டலீ
கர் பார்க்கும்படியாக அவர் விசால முதுகின்புறமாக வந்து நின்றார்*
௩௫. அத்தருணத்தில் பிதாவினுடைய பாதத்தைத் தொட்டுக்கொண்டிரு
ந்த புண்டலீகர், ஸ்ரீ கண்ணபிரான் பசும்பொன்சோதிச் சாயை தம்
முன்னே விளங்கலுங்கண்டு இதென்ன பிரகாசமென்று நினைத்து
முகந்திரும்பிப்பார்த்துத் தேவாதிதேவன் வந்து தன் அருகில் நிற்ப
தைக்கண்டு மேலான கங்காதேவியார் தந்த வரம் இன்றுதானோ கிடை
த்ததென்று மனதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, தலையால் வணக்கஞ்
௩௬. செய்து சமீபத்திற் கிடந்த செங்கலை* எடுத்து இவர் சமீபத்திலெ
றிந்து என்னிடம் வந்த கண்ணபிரானே; என் பூசனையை யான்
முடிக்கிறவரையிலும் இக்கல்லின்மேல் நில்லுமென்றுசொல்லித் தாய்
தந்தையர் பணிவிடைசெய்துகொண்டு அவர் அங்கிருக்க, விஷமானது
தங்கிய நீலகண்டனாகிய யானும் அறிவதற்கரிய திருமாலானவர், இந்
திரனாகிய செங்கலின்மேல் நின்று இடையின்கண் இருகரத்தையும்
வைத்துக்கொண்டு புண்டலீகர் மாதாபிதாவுக்குப் பூசைசெய்வதைச்
௩௭. சந்தோஷமாய்ப் பார்த்துக்கொண்டு நின்றார்* புண்டலீகர் மாதா
பிதாவின் பூசைசெய்து முடிந்த பிற்பாடு, பீதாம்பரமானது நிலையாய்
பிரகாசிக்க பசுக்களை மேய்த்த கோலை முழந்தாள் மத்தியில் கொண்ட
வராய் சமிபத்திற்கிடந்த செங்கல்லின்மேல் சமசரணராகி, அழகு
பொருந்த நிற்பவரைப்பார்த்து மிகவும் சாஷ்டாங்கமாக விழுந்து நம
௩௮. ஸ்கரித்து பேரானந்தக்கடலில் மூழ்கி* அநேக விதமாகத் தோத்
திரம் பண்ணிக்கொண்டு நிற்க, கிருபாசமுத்திரராகிய கண்ணபி
ரான் பார்த்து புண்டலீகா; உன்னைப்போலும் பக்தரை உலகத்தில்
நாம் ஒருவரையும் கண்டதில்லை. உனக்கு வேண்டிய வரங்களைக்
கேளென் றுரைத்தனர். ' செந்தாமரை மலர்போலும் நேத்திரங்க
ளையுடைய தேவா; திரிமூர்த்தி சொரூபமும் தாங்களேயாகிச்

சஞ்சரிக்கின்ற படியாலும், பாமரர்களையெல்லாம் பாவனம் செய்கி
௯௯. ன்றமையினாலும்* தாங்கள் விட்டல என்கின்ற பெயரைத் தரித்து
எக்காலமும் இவ்விதமாகவே யிருந்து உம்மைச் சமீபித்து வணங்கின
பேர்களுடைய எல்லாப் பாவங்களும் நீங்கிப் பரிசுத்தமாகச்செய்து கு
றைவற்ற என்னுடைய பெயரின் சார்பால் இத்தலத்தைப் பண்டரியெ
ன்று பெயர்கூறுவதாக்கி, அளவில்லாத இத்தலச் சார்பினால் தாங்கள்
௱. பாண்டுரங்கன் என்கின்ற பெயரையும் தரித்து இன்னமும்* இந்த
ஸ்தலத்தில் எல்லாத் தீர்த்தங்களுக்கும் மேலானதாய் ஒரு தீர்த்தத்தை
யுமுண்டாக்கி, அந்த மேன்மையான தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணின
பேர்கள் பரிசுத்தராகவுஞ் செய்தருளவேண்டுமென்று கேட்டனர்.
உத்தமா ; நீ வேண்டியவகையெல்லாம் ஆக. மூன்றுலோகங்களிலுமு
ள்ள தீர்த்தங்கள் எவ்வளவோ அவ்வெல்லாத் தீர்த்தங்களும் இன்று
நடுப்பகலிலே இவ்விடம் வந்துசேருமென்று கண்ணபிரான் அநுக்கிர
௱௧. கம் பண்ணியருளினர்* உடனே உலகத்திலுள்ள தீர்த்தங்களெல்
லாம் மத்தியானகாலத்தில் தினந்தோறும் அந்தத் தீர்த்தத்துடன் வந்து
கூடுமென்று பார்வதி நீ அறிவாயாக. நான் பூர்வம் திரிபுரத்தை எரி
த்ததனாலுண்டாகிய மிகுந்த பிரயாசந்தீர பீமாசங்கரராய் இத்தலத்
௱௨. தில் வந்து தவஞ்செய்திருக்கும்பொழுது* எனது சரீரத்தில் வெயர்
வையுண்டாகிப் பெருகிப் பீமாநதியென்னும் பெயர்பூண்டு, என்னுடை
யஞான சக்தியைக்கொண்டு பெரு முழக்கத்தோடு வரும்போது, யாவ
ருமதிக்கும்படியான புண்டலீகருடைய கிரகம்வரையில் வர, அத்தலத்
தில் தங்கிய பீமசேன பயிரவன் அந்நதியின் அலையின் பெருமுழக்கத்
௱௩. தைக்கேட்டு, மனம்பொறுத கோபமுடையவனாகி* செந்தாமரை மல
ர்போலும் நேத்திரங்களையுடைய பெருமான் இவ்விடத்தில் எழுந்த
ருளி இருக்கும்பொழுது கொஞ்சமாவது பயப்படாமல் இந்நதி இவ்
வளவு வேகமாக வருவது தக்கதாவென்று தன் கையிலிருந்த கதையால்
அடித்து, இவ்விடம்வந்த நதியே, உன்னுடைய சத்தத்தோடு செல்கி
ன்ற வேகத்தை இத்தலம் தாண்டுகிறவரையில் அடக்கிக்கொண்டு செ
ல்லக்கடவாயென்றான். அவ்வாறே ஊமையைப்போலக் கொஞ்சமா
௱௪. வது ஓசையில்லாமல்* தன்னைப் பார்த்தபேர்களுடைய பாவங்களை
யெல்லாம் தகித்துக் கங்காநதியைப்போல் வந்து கண்ணபிரானுக்கெதி
ராக அடைந்து, மேல் இடதுபுறமாகச் சுற்றிப் பிறையைப்போல் தெ
ன்புறஞ்சேர்ந்து, கீழ்த்திசையைநோக்கிச் செல்லுகின்றபடியால், சந்
திரபாகையென்று பெயர்விளங்குவதாகி, முன்னாளில் தேவகுருவாகிய
வியாழபகவானால் சந்திரனுக்குநேரிட்ட பெருஞ்சாபத்தை இந்தநதியில்
சந்திரன்வந்து ஸ்நானம்பண்ணித் தீர்த்துக்கொண்டான். அதனால் இத
௱௫. னைப் பானுதீர்த்தமென்று நினைத்துக்கொள்* புண்டலீகர் போட்ட
செங்கல்லின்மேல் நிற்கின்ற ஸ்ரீ பாண்டுரங்கனின் சரணாம்புஜங்களை

வணங்கி தரிசித்து பரிசுத்தமாகலாமென்று எந்நாளும் உள்ளத்தில் எண்
ணிக்கொண்டு இக்காலத்தும் பெருகி வருகின்றது. அந்நதியில் நீராடி.
பாண்டுரங்கனைத் தரிசித்தமாத்திரத்தில், அநேக ஜெனனங்களிலும் செ
ய்த பாவங்களெல்லாம் தீர்ந்து, அப்பாண்டுரங்க பரமனுக்கடியராவார்*
௱சு. ருக்குமணிதேவியாருக்கெதிராக நின்ற கண்ணபிரான், உனக்கு முன்
னுகப் புண்டலீகரிடம் போகின்றேனென்று அவர் போயினபின்பு சுவா
மியைப் பிரிந்திருக்கச் சகியாமல், முன் தாமரை மலரின்கணின்று எழு
ந்தருளிய செல்வியாகிய லெட்சுமிதேவியார் பாண்டுரெங்கமூர்த்தியிடம்
௱எ. சென்ற நிலைமையைச் சிறிது யாம் சொல்லுகின்றோம்* ருக்குமணி
தேவியாரின் அளகபாரத்துக்குத் தோற்று ஓடிப்போன கரியவண்டுகள்
புட்பங்களினிடத்திற்போய்ச்சேர, அம்மலர்கள் தேவியாரின் காந்திபொ
ருந்திய திருமேனியின் மெல்லிய தன்மைக்குப்பயந்து சந்திரனைக்கு
டையாகவுடைய மன்மதனிடத்தில் போய்ச்சேர அம்மன்மதன் தன் மா
தாவின் சத்துருவென்று நினைத்து, வெறுக்காமல் பிரியமாகக் கைக்கொ
௱அ. ண்ட தோஷத்தினலேதான் அநங்கனுயினன்* தேவியார் கண்களுக்
குத்தோற்றமான் ஏ கண்களே, நீங்களிருக்கும் இடத்துக்கு மேலான
இடத்தில் நானடைந்து உங்களுக்கு இகழ்ச்சியுண்டாகும்படி உங்களைச்
செயிப்பேனென்று சந்திரனிடத்திலடைந்தது. அச்சந்திரன் அவர்கள்
முகத்தழகுக்கு அவமானப்பட்டு, மறுவைக்கைக்கொண்ட என்னிடமாக
வந்தது. அதை இலக்குமியாருடைய விரோதியென்று நீக்கிவிடாமல்
நான் அங்கீகாரம் பண்ணிக்கொண்டபடியால், பைத்தியங்கொண்டவனுயி
௱கூ. னேன்* அவர்கள் பற்களுக்குத்தோற்று ஓடின முத்து வெள்ளையானை
யாகிய ஐராவதத்திடை விரைந்துசேர அவ்வயிராவதம் அவர்கள் குஜ
பாரத்துக்குத் தோல்வியடைந்து, தேவேந்திரனிடம் போய்ச்சேர இங்ங
னம் தன்பால்வந்த இரண்டையும் லெட்சுமியாருக்குப் பகையானவைக
ளென்று நினையாமல் உறவாகக்கொண்டமையால், அவ்விந்திரன் சரீர
௱௰. முழுவதும் துவாரமாயினன்* தேவியாரின் கண்டத்திற்குப் பயந்து
வெண்மை நிறமுள்ள சங்குபால்கடலுக்குப் போய்ச்சேர, அவர்கள்
கிருபாவாரிக்கு நாணமுற்ற அக்கடல் கண்ணபிரானையடைய, இலக்குமி
தேவியாருக்குப் பகையானவை இவ்விரண்டுமென்றெண்ணுதவராய்,
அவைகளோடுகூடி வாழ்ந்தபடியால், வடிவமுங்குறுகி, வாமனனுகி,
௱௰க. ஒருகாலத்தில் மூன்றடிமண்ணை யிரப்போனுமாயினர்* அவர்கள் நடை
யைப்பார்த்துப்பயந்த அன்னப்பறவை மிருதுவான தாமரை மலரைய
டைய அவர்களது நவமணியிழைத்த சிலம்புபூண்ட பாதங்களுக்குத்தோ
ற்று, அத்தாமரைமலர் பிரமதேவனிடத்தில் விரும்பி அடைய, அப்பிர
மன் சர்வலோகமாதாவுக்கு இவைகள் பகைமைப்பொருள்களென்றுண
ராமல் தனக்குரிமைப்பொருளாகக் கொண்டபடியால், ஒரு தலையையு
௱௰உ. மிழந்து நிந்தையையுமடைந்தான்* இத்தன்மையராவார்களானல்,
அவ்விலக்குமிதேவியாருளை விரும்பாதவர்கள் யாருளர். அப்பேர்ப்

பட்ட அவர்களுடைய அழகையும், உறுப்புகளையும், ஒருவரால் அளவிட்டுச் சொல்லுதற்கு அமையுமோ, அமையாது. எப்பேர்ப்பட்டவர்களாயினும் அழகுக்கரசியாகிய லெட்சுமியார் தமக்கு அழகாகத் தரித்துக்கொள்ளும் ஆபரணங்களுமுண்டென்று சொல்லக்கூடுமோ, இப்படியிருக்க, ஆதிசேடனே சொல்லுவான், அவனால் சொல்லமுடியாது*
௱௰௩. ஏனென்றால் அவன் சொல்லவேண்டுமென்று, அளவிட்ட தோஷத்தினாலல்லவோ. ஆயிரமாயிருந்த நாவுகள் பிளவுபட்டு இரண்டாயிரமுமாகிப் பூமியை எப்போதும் தூக்கிக்கொண்டிருக்கின்றான். கண்ணுக்கு அழகுசெய்யும்படியாய்த் தரிக்கின்ற ஆபரணங்கள் உண்டா, தேவியாருக்கு ஆபரணமில்லையென்று ஒருவரும் நினையாதுண்டென்று நினைக்கும்பொருட்டாகப் பலவகையாகிய ஆபரணங்களும் பிரகாசிக்கும்படி-
௱௰௪. யாகவும்* ஆண் யானையைப் பெண் யானை பின்றொடர்ந்து செல்வதற்கொப்பாயிருக்கின்றதென்று பிறர் சொல்லும்படியாகப் பாண்டுரங்கபரமனின் அடிச்சுவட்டைப்பற்றிவந்து அவருடைய இடது பாகத்தில் அடைந்து முல்லையினரும்புகள்போல் பல்வரிசைகள் அழகுசெய்ய, அதனால் வர்சனைபொருந்திய முல்லைக்கொடியானது கற்பகவிருட்சத்தைத் தழுவி நிற்பதுபோலக் கூடிநின்றார்கள்*

## பண்டரிமான்மியம்.

விண்ணுலகங்களிலுள்ள நகரங்களெவற்றினுக்கு மிகவுமேலாய்
எண்ணுதற்குமியற்றுதற்கு மரிதாயமந்தரமும் நகருமிந்த
மண்ணுலகில்விளங்குவதற் கியாதுகாரணமியம்பு மழுக்கரத்துக் [ம்.
கண்ணுதலேயெனவினவு முமைகளிப்பக்கறைமிடற்றுக் கடவுள்கூறு

தெய்வலோகங்களிலுள்ள மேலான நகரங்களெவற்றினுக்கும் மேலாக நினைப்பதற்கும், செய்வதற்கும், அரிதாகிய ஆலயமும், நகரமும், இந்த மண்ணுலகத்திலுண்டாகி, விளங்குவதற்குக் காரணம் இன்னதென்று யான் அறியாமையாலே, புலப்பட அறிவிக்கவேண்டும் மழுவைக் கரத்திலேந்திய நெற்றிநேத்திரத்தையுடைய எம்பெருமானே யென்று, வினவிய உமாதேவி மனமகிழும்படியாக காளகண்டத்தையுடைய பரமசிவம் சொல்லத்தொடங்கினர்.

௱௰௫. விட்டலநாதனுடைய பாதங்களைச் சுமக்கப்பெற்றதனால், உயர்வடைந்த தேவேந்திரன், தேவர்கள் தச்சனாகிய விஸ்வகர்மாவைப்பார்த்து, மதமடைந்துவந்த துதிக்கையையுடைய மலையை நிகர்த்த குவலயாபீடமென்னும் யானையின் கொம்புகளை ஒடித்த தேவாதிதேவனருளினால், வலிமைபொருந்தி ஆர்ந்த சூரியசக்கரத்தின்மேல் பண்டரிபுரமானது நிலைபெற்றுப் பொலிவுசெய்து பொருந்த அதினுடைய மத்தியபாகத்திற்கு*

௱௰௬. பிந்துதீர்த்தமென்னும் பெயர் அதனடுவில் மூன்று கடவடிவாய் உயர்
ந்து திரிகூடமென்று சொல்லும்படி நிலைபெற்றுள்ளது. அதில் அர்த்
தமாத்திராவென்று பெயர்கூறும்படியான ஒப்பில்லாத ஆசனத்திலிருக்
௱௰௭. கும் செங்கல்லின்மேலாக எழுந்தருளி விளங்குகின்ற* விட்டலமூர்த்
திக்கு இன்பத்தைத் தரும்படியான கோவிலும் விளங்கத்தக்கதாய்ச்செ
ய்து, பெலமாய் அழகமைந்த கோபுரம், மதில் முதலானவைகளும் மே
ன்மையுடன் சிறந்த பட்டணமுமுண்டாக்கென்று சொல்லினன். இங்ங
னம் இந்திரன் கூறினவுடன் ஸ்ரீ பண்டரிநாதனுக்கு ஊழியஞ்செய்யும்
பேறுகிடைத்ததென்று, தெய்வத்தச்சன் தன்னுள்ளத்தில் ததும்பும்படி
௱௰௮. யான பேரானந்தங்கொண்டான்* உடனே மாற்றுயர்ந்த தங்கமும், சிவ
ந்தகாந்தியுள்ள மாணிக்கமும் வேண்டினவளவாயில்கொண்டு அவைகளா
ல்மதில்களும், கோபுரங்களும், வாயில்களும், கெர்ப்பக்கிரகமாகிய விமா
னமும் மேலும், செய்யவேண்டியன ஸ்தானங்கள் அங்கங்கள் யாவும்
இதுபோல் புதுமையுள்ளது எவ்வுலகத்திலுமில்லையென்று யாவரும்
சொல்லும்படியாக அலங்காரமாய்ச்செய்தான். தேவர்களுடைய லோ
கத்தைப்பார்க்கிலும் மேலானது பூவுலகத்திலுள்ள இப்பட்டணமென்று
௱௰௯. சொல்லத்தக்கதாயிற்று* கிருஷ்ணாநதிக்கும் வெள்ளியபாலென்று நினை
க்கத்தக்க நிறமுடைய கோதாவிரி நதிக்கும் நடுவிலிருக்கின்றது. பண்
டரிநகரம், அந்நகரத்தின் நடுவில் கோவிலானது ஜெயவிஜயர்கள் கா
௱௨௰. வல்செய்யும்படியாக விளங்குகின்றது* ரிஷிகளும், தேவர்களும், பா
ண்டுரங்கனின் தரிசனஞ்செய்வதற்கு முற்பட்டுவந்து ஆநந்தம்பெருகு
கின்ற தரிசனங்கிடைக்கும் சமயமெப்போதென்று பார்த்துக்கொண்
டிருப்பார்கள். சந்நிதானத்தில் நெருங்கிநிற்கின்ற தும்புருவும், நாரத
ரும் கீர்த்தனத்துடன் வீணாகானம் செய்வார்கள். யக்ஷர்களும், காந்த
௱௨௰௧. ருவர்களும் இனிமையான வாத்தியங்களை முழக்குவார்கள்* ரம்பை,
மேனகை, திலோத்தமை முதல் மற்றுமுள்ள தெய்வதாசியர்கள் யாவ
ரும் வந்துகூடி விதவிதமாகத் தினந்தோறும் நடனம்செய்து சந்தோஷ
கரமாய்ச் செல்வார்கள்.

இவ்விதமான பண்டரிக்ஷேத்திரத்தில் சந்திரபாகாநதியானது பாண்டுர
ங்க பரமனுக்கு தொண்டுசெய்து பெரும்பதவி பெறவேண்டுமென்று கருதி, பண்டரிபுரத்திலுள்ள பெரிய தடாகங்கள், குளங்கள், குட்டைகள், ஏரிகள் முதலானவைகளையும் நிரப்பி, வயல்களில் பிரவேசித்து, நெற்பயிர் முதலான வைகளை வளர்த்து கோதுமை, சாமை, கொள்ளு, சோளம், எள்ளு, துவரை முதலிய பயிர்களையும் செழிக்கச்செய்து, சோலைகளில் பரவி மாமரம், தென்னை மரம், பலாமரம், வாழைமரம், கமுகு, கரும்பு முதலியவைகளை யெல்லாம் வளர்த்து, பூத்துக் காய்க்கும்படிசெய்து மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம், மந்தாரை, துளசி, செவந்தி, மருவு, கொழுந்து முதலிய புட்பச்செடிகளையெல்லாம் தழைத்துப் பூக்கச்செய்து, ஒருகாலத்தும் நீர்க்குறைவில்லாது பூரணமாக நிறைவித்து, பெருமானுக்கு நிவேத்தியத்திற்கும், அர்ச்சனைக்கும்,

அபிஷேகத்திற்கும் தானே பணிவிடைசெய்துவருவதாக மகிழ்கூர்ந்து பெருகி, தன்னை நினைத்தோரும், கண்டோரும், தன்னில் மூழ்கினோரும் ஜனனாந்திரங்களில்செய்த பாவங்களெல்லாம் நிவர்த்தியாகி, ஆதிமத்தியாந்தரகிதனாகிய விட்டலமூர்த்திக்கு அடியார்களாகச் செய்கின்ற பெரும்பேறுபெற்ற சந்திரபாகா நதிக்குச் சமானமான தீர்த்தம் ஒன்றுண்டோ ; அப்பண்டரிபுரமானது, எத்தன்மையாகவிளங்குகின்றதென்னில், சுவர்க்கலோகமுதலிய ஏழுலோகங்களும், அதலலோகமுதலிய ஆறு கீழ் உலகங்களும், பூலோகத்தினிடத்தேவந்து பண்டரிநாதனுக்குப் பணிவிடைசெய்யவேண்டுமென்று கருதி, வெள்ளிமயமான சுவர்த்தலங்களும், சொர்னமயமான சித்திரங்களும், தங்கமயமான கம்பம், போதிகை, உத்திரம், விட்டம் முதலிய பரப்புகளாயும், அசையாநிலைபாக ஒளிபெறநின்று பண்டரிநாதனுடைய திருவோலக்கக்காட்சியைத் தரிசிக்க நிற்கும் தன்மையைப்போல முத்துச்சுண்ணத்தினால் தீற்றப்பட்ட சுவர்த்தலங்களும், சந்திரகாந்த கற்களினால் கட்டப்பட்ட மாடமாளிகை, கூடகோபுரங்களும், பார்த்தவர்களெல்லாம் மயங்கும்படியாக சிற்பநூலில் தேர்ந்த ஓவியர்களால் எழுதப்பட்ட சித்திரங்களும் விளங்குகின்ற மனைகள் நிரம்பிய மறையோர் வீதிகளும், க்ஷத்திரியர் வீதிகளும், வைசியர் வீதிகளும், சூத்திரர் வீதிகளும், மிளகுகோட்டம் முதலியமலைபடு திரவியங்களும், தேன் மயிற்பீலி முதலிய காடுபடு திரவியங்களும், செந்நெல், கரும்பு முதலிய நாடுபடு திரவியங்களும், உப்பு, முத்து முதலிய கடல்படு திரவியங்களும் ஆகிய இவைகளெல்லாம் நிரம்பிய கடைவீதிகளில் கொள்ளும்படியாக வந்து திரளாகக்கூடிய ஜனங்களின் கூட்டமும், ஒவ்வொரு வீதிகளிலும் சிறுபிள்ளைகள் கல்விகற்கும் பாடசாலைகளும், பண்டரிநாதனைவைத்து பஜிக்கும் பஜனைசாலைகளும், பெருமானுடைய சொரூப விசாரணைசெய்கின்ற மடங்களும், அன்னசத்திரங்களும், தண்ணீர்ப்பந்தல்களும், யாகசாலைகளும், வேதகோஷ்டத்தினுடைய முழக்கமும், கலியாண முரசினுடைய தொனியும், தம்பூரு, வீணை, சுரபத்து, பிட்டில், தாளம், மிருதங்கம் முதலானவைகளை சுரலயம் பிறழாமல் முழக்கி, பரமபாகவதர்கள் விட்டலமூர்த்தியின் கீர்த்தனங்களைப்பாடி, ஹரிநாமசங்கீர்த்தனம் செய்யும்படியான தொனியும், கடலொலியையும், மேகத்தினுடைய ஒலியையும் அடக்கி, மேலாகவே எப்போதும் ஒலித்துக்கொண்டேயிருக்கும். இவ்வண்ணமாக அநேகம் ஹரிதாசர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி, சந்திரபாகையில் ஸ்நாநம்பண்ணி பஜனைசெய்துகொண்டு, முதலில் புண்டலீகருடைய சன்னிதானத்தில்வந்து அநந்தவிதமாகப் பாடிக் களிகூர்ந்து, கருடஸ்தம்பத்தினடியில்வந்து ஆநந்தக்கூத்தாடி, கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பம் பெருகி ஓடும்படியாக அநந்தகலியாண குணங்களோடும் கூடிய விட்டலமூர்த்தியின் நாமசங்கீர்த்தனம் சொல்லி, ஒருவரையொருவர் கட்டித்தழுவி, ஆநந்தபரவசமடைவார்கள். அவ்வண்ணமே தேவர்களும், தெய்வஸ்திரீகளும், ரிஷிகளும், மேற்சொல்லிய சந்திரபாகையில் ஸ்நாநம்பண்ணி, புண்டலீகரைத் தரிசித்து, கருடஸ்தம்பத்தினடியில் நின்று பஜிக்கும்படியான பாகவதர்களோடுகூடி, தாங்களும் அநேகவிதமான கீர்த்தனங்களைப்பாடி, தேவர்களென்றும், மானிட

ர்களென்றும், தெய்வஸ்திரீகளென்றும், நரஸ்திரீகளென்றும் ரூபத்தினுலும், பாடல்களினுலும், ஆடல்களினுலும், பேதமறியக்கூடாமல் தேகஸ்மரணை நீங்கி, மனம் விட்டலமூர்த்தியின் திருவடியில் லயப்பட்டு நிற்கின்றபடியால், ஸ்திரீகள், புருஷர்களைக்கட்டித் தழுவியும், புருஷர்கள், ஸ்திரீகளைக்கட்டித் தழுவியும் ஒவ்வொருவர் பாதங்களில், ஒவ்வொருவர் விழுந்து பணிந்தும், உள்ளமுருகி, என்பும் உருகின அன்பினையுடையவர்களாய் ஆஞ்சநேயர் சந்நிதானத்திலும் அவ்வண்ணமாகவே பாடியாடி அபரிமிதானந்தத்தோடு கோவிலுக்குள்ளே பிரவேசித்து, பாண்டுரங்கபரமனுடைய திவ்விய மங்கள சொரூபத்தைக் கண்குளிரப்பார்த்து, பாதத்தில்விழுந்து பணிந்து எழுந்து, கட்டித்தழுவி கண்ணும் கரைய, மனமும் கரைய, கனிந்துருகி தரிசித்தகண்களைப் பேர்க்க மாட்டாமல் பிரமாநந்த சமுத்திரத்தில் மூழ்கிநின்ற நிலைபேராது நிற்பார்கள். இப்பேர்ப்பட்ட தன்மையையடையும்படியாய்ச் செய்தருளிய பண்டரிநாதனுடைய அற்புத சகுணவடிவமானதை பஞ்சாக்கினி மத்தியிலே யிருந்து நெடுங்காலம் தவம்பண்ணிய பேர்களும், விருக்ஷங்களிலே கொடிகளையும், கயிறுகளையும் கட்டி, காலில்முடிந்து தலைகீழாகத் தொங்குகின்றபேர்களும், ஜலத்துக்குள்ளே மூழ்கியிருந்து தவஞ்செய்கிறவர்களும், இயமம் நியமமுதலிய அஷ்டாங்க யோகங்களைச் செய்தபேர்களும், அணிமா மகிமா முதலிய அஷ்டமாசித்திகளையுடைய பேர்களும் காணுதவர்களாய், கலங்குகின்றபேர்களாய், இவ்வுலகத்தின்கண் அநேகருளர். பக்தியென்று சொல்லும்படியாகிய ஒரு கருவியைத் தவிர இதர கருவிகளினுலே பரமாத்ம சொரூபனுகிய பண்டரிநாதனைக் காணவும், அடையவும் கூடாது. ஆதலால், பரமபாகவதர்கள் அஞ்சலியஸ்தர்களாய் விட்டலமூர்த்தியினுடைய சந்நிதானத்தில் நின்று, ஸ்வாமின் நாங்கள் மூலப்பிரகிருதியில் அழுந்தி, ஜீவாத்ம பரமாத்ம சொரூபமும், அவ்விரண்டிற்குமுள்ள சம்பந்தமும், அச்சம்பந்தத்தைத் தடுக்கும்விரோதமும், அவ்விரோதத்தை நிவர்த்திக்கும் உபாயமும், அவ்வுபாயத்தைச் செய்தவிடத்து அடையும் பரமார்த்தமும், இன்னதென்று விளங்காமல் நாங்கள் நாசத்தை அடைந்திருக்கையில், தங்களுடைய நிர்ஹேதுவான கிருபையினுலே எங்களைப்படைத்து, வேதாகமங்களைக் கொண்டு மேற்சொல்லிய சொரூபமுதலானவைகளையும் தெரியவிளக்கி, உன்னுடைய திருவடியில் சரணுகதம்பண்ணுவதற்கு ஏற்ற சேஷத்வம் தலையெடுத்துப் பாரதந்திரராகி, உன்னுடைய கைங்கிரியத்தை இப்பிறப்பில் இடைவிடாதுசெய்து, யாங்கள் உஜ்ஜிவிக்கும்படி நீர் அருள்செய்திருப்பதே எங்களுக்கு போருமானது. எங்கள் ஆயுளுள்ள நாளளவும் இவ்வாறே சன்னிதானத்தில் நின்று பணிந்தும், எழுந்தும், பாடியும், ஆடியும், இரவும்பகலும் நீங்காது நாமஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருக்கும்படி கருணைசெய்து பின் எந்த ஜனனம் கிடைத்தபோதிலும் அதற்கஞ்சுவோம் அல்லேம். அச்செனனத்திலும் அடியேங்கள்பேரில் கருணைகூர்ந்து இப்போது சந்நிதானத்தில் நின்று உள்ளமுருகி உம்முடைய திருவடியினிடத்தில் பற்றுதலாய் நிற்கின்ற பக்தனென்று சொல்லும்படியான கருவியை அந்த ஜென்மத்திலும் கொடுத்து அருள்வேண்டுமென்று அனவரதம் புகழ்ந்து நமஸ்கரித்துப் பாடுவார்கள். இவ்விதமான பக்த

கோடிகள் நிரம்பி விளங்கும்படியான இத்தலத்திற்கு சமானமான ஒரு தலமுமு ண்டோ ; விஸ்தாரமான திருக்கோவிலும், சொர்னமயமான மதில்களும், கோ புரங்களும், தூபிகளும், கெர்ப்பக்கிரகமும், சபாமண்டபமும், மகாமண்டப முதலிய யாவும் பெருமானுடைய திருவடியில் செங்கலாய் கிடக்கின்ற தேவேந் திரனுனவன் விருத்திராசூரனால் தனக்கு நேரிட்ட சாபநிவாரணமாயின சந் தோஷகரத்தால் தெய்வதச்சனாகிய விஸ்வகர்மனை வரவழைத்து செய்விக்கப்ப ட்ட அவ்வாலயத்தின் கெர்ப்பக்கிரகத்தில் நிற்கின்ற ரெக்மாய்சமேதராகிய விட் டலமூர்த்தி, பூர்வம் சோமுகாசூரனுனவன் பிரமதேவனிடத்தில் இருந்த வேதங் களைப்பிடிங்கிக்கொண்டு சமுத்திரத்தில் புகுந்து மறைந்துகொண்டகாலத்தில் அவன் நிமித்தமாக மச்சாவதாரமெடுத்து சமுத்திரத்தில் பிரவேசித்து அவ னைச்சம்மரித்து வேதங்களைக்கொண்டுவந்து கொடுத்தவரும், சந்திரனைக்கம்ப மாகநட்டு மந்தரபர்வதத்தை மத்தாக அதில்பிணித்து வாசுகியைக் கயிரு கப்பூட்டி பாற்கடலில் ஓடதிகொடுத்து தயிராக்கி தேவாசுராள் இருதிரத் தார்கள் இருபாகமாகநின்று கடைந்தகாலத்தில் பூமிதாங்கமாட்டாமல் அமி ழ்ந்தியது அதுநிமித்தம் கூர்மாவதாரம் எடுத்து அப்பூமியை முதுகினிட த்தில்தாங்கிக்கொண்டு தாமேகடைந்து தேவர்களுக்கு அமிர்தம் கொடுத்த வரும் பூமியை பாய்போல் சுருட்டிக்கொண்டு பாதாளலோகத்தில்போயின இரணியாக்ஷன் நிமித்தம் ஆதிவராகமென்கிற வெள்ளைப்பன்றியின் வடவ மெடுத்துச்சென்று அவனேடுபோர்புரிந்து அவனைவதம்செய்து பூமியைப் பழ மைபோல் விரித்து தமது ஒருகொம்பினமேலே தாங்கிக்கொண்டு நிற்கின்றயெ க்கியமூர்த்தியானவரும் தன்னுடைய நாமத்தையே ஸ்மரணை பண்ணவே ண்டுமென்று பிரகலாதனராகிய பரமபக்தரை இம்சித்த இரணியகசுவின் நிமித்தம் கம்பத்தினிடத்தில் நின்று நரசிம்ம அவதாரமாகத்தோன்றி அவ னது மார்பைக்கிழித்து குடலைமாலைபாகப்பூண்டு சர்வலோகத்தவர்களுடைய இம்சையை நிவர்த்திபண்ணினவரும் எல்லா உலகங்களையும் தன்வசப்படுத் திய மாபலிச்சக்கிரவர்த்தியின் நிமித்தம் கசிபப்பிரமாவுக்கு புத்திரராய் வாம னவதாரமெடுத்து அம்மாபலியினிடத்துவந்து மூன்றடிமண்கேட்டு வாங்கி திரிவிக்கிரம் அவதாரம்பூண்டு ஓரடியால் பூவுலகத்தையும் மற்றோர் அடி யால் வானலோகத்தையும் அளந்து மூன்றும்அடியை அவன்சிரசில்வைத்து பாதாளலோகத்தில் சேர்த்தினவரும் பூவுலகத்தில் உள்ள அரசர்களாகிய க்ஷத்திரியர்களையெல்லாம் ஒருகாரணநிமித்தமாக வதம்செய்வதற்கு பரசுரா மஅவதார மெடுத்து இருபத்தோருதலைமுறை அவர்களை கருவறுத்து இரு பத்தோரு இரத்தமடுக்களை உண்டாக்கி தமது பிதாவாகிய ஜமதக்கினி முனிவருக்கு அவ்விரத்தத்தினாலே திலதர்ப்பணம் செய்து புரோகிதருக்கு இப்பூவுலகத்தையெல்லாம் தக்ஷிணையாகக்கொடுத்தவரும், இராவணகும்பகர்ன னுகிய இராட்சதர்கள் செய்த உபத்திரவத்தால் பிரமனுதிதேவர்களும் வே ண்டிக்கொண்ட நிமித்தம் அயோத்தியாபுரியை ஆண்ட தசரத சக்கிரவர்த் தியின் புத்திரராக ராமாவதாரம் எடுத்து இலங்கையில் பிரவேசித்து ரா வணகும்பகர்னன் முதலிய இராட்சதர்களையெல்லாம் சம்மரித்து தேவர்கள்

முதலியயாவர்களுடைய இடுக்கண் களைந்தவரும், தேவகிக்கும் வசுதேவரு க்கும் புத்திரராய் பலராமராக அவதரித்து நைமிசராண்ணியத்திற்கு வந்த பொழுது சவுனகர், கண்ணுவர் முதலாகிய மகாரிஷிகள் எல்லோரும் எழுந் துநின்று மரியாதைசெய்ய வியாசருடைய சீஷர்கள் பன்னிருவரில் ஒருவ ராகிய சூதமுனி கமலாசனத்தில் இருந்து அவ்விரிஷிகளுக்குப்போதித்துக் கொண்டிருந்தவர் இவரைக்கண்டு எழுந்து மரியாதைசெய்யாமையால் கோ பங்கொண்டு தம்முடைய கலப்பை ஆயுதத்தினால் அவரை வதம்செய்தபொ ழுது அதுகண்ட கண்ணுவர்முதலிய மகாரிஷிகளெல்லோரும் மகானுபாவ ரே அவரை வதஞ்செய்துவிட்டீரே இனிமேல் எங்களுக்கு சகலபுராணகா வியமுதலிய சாஸ்திரங்களையும் யார்போதிப்பார்களென்று அதிககவலை அடை ந்தபொழுது அச்சூதமுனிவருடைய களேபரத்தில் அரணியாகிய காட்டத் தைவைத்துக்கடைந்து அதிலிருந்து வேறு சூதமுனிவரை ஜெனிப்பிக்கச்செ ய்து, பழயபடி அக்கமலாசனத்திலிருந்து சகல ஆகமபுராண சாஸ்திரங்க ளையும் அவர்களுக்கு போதிக்கும்படியாய்ப் பண்ணினவரும், பூமாதேவியான வள் மகாபாபிகளுடைய பாரத்தைத் தாங்கமுடியாமல் தேவாதிதேவனிடத்தி ல்போய் வேண்டிக்கொண்டநிமித்தம் மேற்படி தேவகிக்கும், வசுதேவருக்கும் புத்திரராகவும், பலராமருக்கு சகோதரராகவும், கிருஷ்ணவதாரமெடுத்து ஆய ர்பாடியில் நந்தகோபன் மனையில் யசோதையால் வளர்க்கப்பட்டவரும், மாமனாகிய கம்சனது ஏவலினால்வந்த கேசிஎன்னும்பெயருடைய குதிரைவ டிவான அசுரனது வாயைப்பிளந்தவரும், கன்றால் விளவையெறிந்தவரும், சகடாசூரனை சம்மரித்தவரும், பூதனையைக்கொன்றவரும், ஆநிரை மேய்த்தகா லத்தில் வேய்ங்குழல் ஊதினவரும், ஆயிரம்படங்களையுடைய காளியனதலையில் மிதித்து நடித்தவரும், மதுராநகரத்திற்கு கம்சனானவன் தன்னைவரவழைத்தகா லத்தில் குவலயாபீடமென்னும் யானையையும் கம்சனையும் சம்மரித்தவரும், பா ண்டவர்களின் பாரியாளாகிய துரோபதியின்மானம் காத்தவரும் பாண்டவர்கள் சொல்லியவார்த்தையை சொல்லுகிறநிமித்தம் துரியோதனனிடத்தில் தூது போய்வந்தவரும் பார்த்தனுக்குக்கீதையை உபதேசித்தவரும் பாரதயுத்தகாலத் தில் சக்கரத்தால்சூரியனை மறைத்தவரும் மேலும் அநேகவிதமான கஷ்டசமயங் களில் பாண்டவர்களை ரக்ஷித்தவரும் துவாரகாபுரியில் எழுந்தருளினவரும் கேட்டுக்கொண்ட பூமிதேவியின் பூபாரம் நிவர்த்தி பண்ணினவரும் இக்கலி யுகத்தில் கற்கி அவதாரம் எடுத்திருப்பவரும் புண்டலீகர் முதலிய பரமபாக வதர்களையெல்லாம் இரக்ஷிக்கிற நிமித்தம் பவுத்தாவதாரம் எடுத்து விட்டல மூர்த்தி என்கின்ற நாமத்தை வகித்து இப்பண்டரீபுரத்தில் உள்ள சொர்னமய மான ஆலயத்தில் செங்கல்லின்மேல் சமசரணத்தோடுங்கூடி இடையிலே இரண்டு கரங்களையும் வைத்துக்கொண்டு பக்தகோடிகளை யெல்லாம் கருணை யோடு பார்த்து அருள் செய்கின்றவருமாகிய இம்மூர்த்திக்கு சமானமான மூர் த்தியுமுண்டோவென்று பரமசிவமானவர் உமாதேவியைப்பார்த்து ஏ பர்வத ராஜபுத்திரி இப்பாண்டுரங்கனது பெருந்திருவிளையாடலை யான் உன்னுள்ளம் களிகூரும்படியாக சொல்வதற்கு மிக்க விருப்பங்கொண்டிருக்கின்றேன் ஆத லால் இனி உன்னுடைய விருப்பம் எதுவோ அதனைக்கேட்கக் கடவாயென்று மொழிந்தருளினார்.

பாண்டுரங்க பரப்பிரமனே நமஃ

# ஜெயதேவர் சரித்திரம்.

தூயமாமதி சூடியசுந்தரமுதல்வ
பாயன்மந்தரம் வந்தவாறுணர்ந்தனனவற்கு
நேயஅன்பர்தம் சரித்திரநிகழ்த்தெனக்கையிலை
நாயகன்ஜெய தேவர்தம்சரித்திரநவிலும்.

தாவள்ளியமாகிய சந்திரனை ஜடாபாரத்தில் தரித்தருளிய அழகிய தேவனே, ஸ்ரீ கண்ணபிரானுடைய அற்புதமான ஆலயமும், பண்டரி நகரமும் வந்தவாறு தங்களால் விளங்க உணர்ந்தேன். பாண்டுரங்கனுடைய அடியார்களது சரித்திரங்களைக்கேட்க மிக விருப்பமுள்ளவளாயிருக்கின்றேன் என்று கேட்ட பராசக்தியினது மனமகிழும்படியாக கைலையங்கிரியில் எழுந்தருளிய பரமசிவம், மறையவர் குலத்தில் அவதரித்த ஜெயதேவர் சரித்திரத்தைச் சொல்லத்தொடங்கினர்.

க. ஸ்ரீ வைகுண்டநாயகரும், சர்வலோகநாயகரும், சர்வதேவநாயகரும், சர்வவேதநாயகருமான ஸ்ரீமந்நாராயணனவர் வியாசமுனிவரை அன்போடு நோக்கி, நீர் பூவுலகில் பிராமணகுலத்தில் அவதரித்து, எனது நாம பக்திவிரிந்து வளரும்படி மனிதர்களுக்கு உபதேசம் செய்யவேண்டுமென்றுகட்டளையிட்ட புருஷோத்தமனுடைய பாதபங்கயங்களை வணங்கிச் சுவாமி ஆக்கினைப்படியே நடக்கின்றேனென்று உத்திரவுபெற்

உ. றுக்கொண்டு* பூவுலகத்தின்கண் கீழ்சமுத்திரத்தின் அருகாக உள்ள பன்னீர், புன்னை, குங்குமம், மந்தாரை, சண்பகம், மா, பலா, தெங்கு, கமுகு முதலான அநேக விருக்ஷஜாதிகளும். மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, துளசி முதலிய புஷ்பஜாதிகளும். செந்தாமரை, வெண்தாமரை, செவ்வல்லி, நீலோற்பலம், செங்கழுநீர் முதலியவைகள் நிரம்பிய தடாகம், குளம், குட்டை, ஏரி முதலியவைகளும். நெற்பயிர் தழைத்தோங்கிய வயல்களும், மற்ற தானியங்கள் விளைகின்ற நிலங்களும், பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர வீதிகளும், பலவகையான திரவியங்களும், கல்வியும், ஞானமும், மிகுதியாய் விளங்குகின்ற புருஷர்களும், நற்குண நற்செய்கைகளையுடைய ஸ்திரீகூட்டங்கள் முதலான எல்லாச் செல்வங்களும் மிகுதியாய் நிறைந்துள்ளதும் பூவுலகத்தில் உள்ள திவ்வியக்ஷேத்திரங்களுக்கெல்லாம் மேலாய் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா எழுந்தருளியிருக்கின்றக்ஷேத்திரமுமாகிய ஜெகந்நாதமென்னும் க்ஷேத்திரத்திற்குச் சமீபத்தில் நீர்வளமும், நிலவளமும், பெருஞ்செல்வமும், தானமும், தருமமுதலிய நன்மைகளெல்லாம் செழித்தோங்குகின்ற திந்துபில்வமென்கின்ற பெயரினையுடைய ஊரில், வேதவிதி தவறாமல் தோஷரகிதராய் வாழ்ந்துவருகின்ற வேதியர் மரபில் வந்து கடல்சூழ்ந்த பூமண்டலமுழுவதும் ஸ்ரீ நாராயணமூர்த்தியே இவரென்று புகழ்ந்து

௩. கொண்டாடும்படியான திவ்விய சுந்தரரூபமாக அவதரித்தார்* இவ்விதமாகப் பிறந்த குழந்தையைத் தாயும் தகப்பனும் பார்த்து, அளவில்லாத ஆநந்தமடைந்து, நாளொருவண்ணமாக மிக்க பிரியத்தோடு வளர்த்து ஜெயதேவரென்கின்ற திருநாமமுமிட்டு, ஐந்துவயதில் உபநயநமுஞ்செய்வித்தார்கள். அப்போது ஒருபாத்தியாயனிடத்திலும் ஓதாமல் சகல வேதாகமபுராணங்களை யெல்லாம் தாமே உணர்ந்து, ஸ்ரீ ஹரியினுடைய பாதபக்தியிற் சிறந்த உத்தமசித்த பரமபாகவதராயினர்*

௪. நட்சத்திர கணங்களுக்கு எல்லாம் சந்திரனும் சேனைவீரர்களுக்கெல்லாம் வீரபத்திரனும் ரிஷிகளுக்கெல்லாம் சங்கரனும் ஆகாயத்தில் விளங்குகின்ற ஒளிகளுக்கெல்லாம் சூரியனும் சிரேட்டமாயிருப்பனபோல ஜயதேவரானவர் பிராமணகுலத்திற்கும் வேதசாஸ்திரங்களை எல்லாமுணர்ந்த வித்வபண்டிதர்களுக்கும் எல்லா வுயிர்களையும் தன்னுயிர்போல் நினைத்தொழுகுகின்ற ஜீவகாருண்யமுடையவர்களுக்கும் ஸ்ரீஹரிபாத பக்திவழுவாத பரமபாகவதர்களுக்கும் மேலாய்ச் சிறந்து விளங்கினர்*

௫. இத்தன்மையாக விளங்கிய கருணை சமுத்திரராகிய மஹானுபாவர் சிறுபருவத்திலே தானே உலகத்திலுள்ள பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர என்னும் நான்கு வருணத்தவர்களிலும் கற்றோரும் கல்லாதவருமாகிய யாவரும் ஸ்ரீகண்ணபிரானுடைய இருவகை விபூதிகளையுமுணர்ந்து அவருடைய திருவடிக்கன்பராகி ஜனனமரணமாகிய துக்கசாகரத்தினின்று நீங்கி ஈடேறும்படி செய்விக்கவேண்டுமென்று தமது திருவுள்ளத்தில் கருதிப் பூருவம் தம்மால் வகுக்கப்பட்ட பதினெண்புராணங்களில் ஒன்றாகிய பதுமபுராண இதிகாசத்தில் சொல்லியிருக்கின்ற பழமையும் அற்புதமுமான புகழ்பெற்ற ராதா சரித்திரவிலாசத்தைத் தேன்பால்கண்டு மாங்கனி ரசம் இவைகளை ஒன்றாய்ச்சேர்த்துக் காய்ச்சித் திரட்டியதுபோலும், பஞ்சவண்ணமுள்ள மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைபோலவும், பதபுஷ்டியும், அருத்தபுஷ்டியும், பக்திரசமும், சிங்கார ரசமும் பெருகும்படியாகப் பரிசுத்தமும் மேன்மையும்பொருந்தக் கோவிந்த கீதமென்கின்ற பெயருமிட்டுச் செய்தனர். அப்படிச் செய்த கிரந்தத்தின் மகிமையானது உலகெங்கும்பரவியது. அதைக் கேள்வியுற்ற வேதசாஸ்திரங்களிற் சிறந்த வல்லபமுடைய வித்துவான்களும், ஸ்ரீ ஹரிதாசர்களும், புட்பத்தின் வாசனையையறிந்த வண்டின் கூட்டங்கள் அப்புட்பத்திலுள்ள தேனையுண்ணும் நிமித்தம் பறந்து வந்து மொய்ப்பதுபோல ஜெயதேவருடைய சந்நிதானம் வந்துசேர்ந்து சுவாமிகள் சொல்லிய கோவிந்த கீதத்தின் சாரத்தைச் செவிவாயாக அருந்தி ஆநந்தக்களிகூர்ந்து பின்பு எல்லோரும் ஜெயதேவருடைய அனுமதியால் எழுதிப் பாராயணம்பண்ணி மகிழ்சிறந்து வந்தார்கள்*

௬. அக்காலத்தில் ஸ்ரீ நாராயணன் எழுந்தருளியிருக்கின்ற ஜெகநாத சமஸ்தானத்தை அரசாண்டுவந்த வேதாகமங்களை நன்குணர்ந்த சாத்வீக இராஜனானவன் தெய்வீக தன்மையுடைய ஜெயதேவர் லோகோபகார

மாகச் செய்தருளிய கோவிந்தகீதத்தின் பெருமையை அநேகர்சொல்லக் கேள்விப்பட்டுத் தானும் ஸ்ரீ கண்ணபிரானுடைய திருவிளையாடலை தனது விவேகத்திற்கும், வித்வத்திற்கும், பக்திக்கும் தக்கவாறாக அதிக பிரியத்தோடும் ஒரு அழகான கிரந்தத்தை உண்டாக்கினான். அதை
எ. உலகத்தில் பரவச்செய்யவேண்டுமென்று நினைத்து* வேதாகமங்களிலும், அறிவிலும், சிறந்த வித்வான்களையும், பாகவதர்களையும் தன்னுடைய சபைக்கு வரவழைத்து, அவர்களுக்குத்தகுந்த ஆசனங்கொடுத்து இருக்கச்செய்து, யான் கண்ணபிரானுடைய ஆடலை ஒரு சாஸ்திரமாகச்செய்திருக்கின்றேன். இதோ இருக்கின்றது பாருங்கள் ஆனால், இது மகானுபாவராகிய ஜெயதேவர்செய்த கோவிந்தகீதத்திற்குச் சமானமாக இருக்குமேயல்லாமல் எவ்வளவும் பேதமாக இருக்கமாட்டாது. ஆகையால் நீங்கள் எல்லோரும் என்னால் செய்யப்பட்ட இந்நூலை மிகவும் கவனமாகப் பார்வையிட்டுப் பாராயணஞ்செய்து உலகமெங்கும் பரவச்
அ. செய்யவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொண்டான்* அப்போது அவ்வரசன் சொல்லிய வார்த்தையைக்கேட்ட மகாவித்வான்களும், ஹரிதாசர்களும், ஏராளேந்திரா ஸ்ரீ விஷ்ணு அவதாரமூர்த்தியும் ஓதாமல் சகல வேதாகமங்களையுமுணர்ந்தவருமாகிய ஜெயதேவர் அருளால் செய்யப்பட்ட கோவிந்தகீதத்தோடு என்னால்செய்யப்பட்ட இந்நூலும் சமானமாயிருக்குமென்று தாங்கள் சொன்னீர்களே, எல்லாமறிந்த நீரே இப்படிச்சொல்லலாமா, யான் எனதென்னும் செருக்கில் அமிழ்ந்தியிருக்கின்ற உம்மால் சொல்லியவார்த்தைகள் உம்க்கே சம்மதமும் அழகுமாயிருக்குமேயல்லாமல் வேறொருவருக்கும் சம்மதிக்க இடங்கொடாது*
கூ. அல்லாமலும், அவருடைய கோவிந்த கீதத்தை நீங்கள் எல்லோரும் சிரத்தாபக்தியுடனே பாராயணம்பண்ணுவதுபோல என்னுடைய நூலையும் நீங்கள் எல்லோரும் பாராயணம்பண்ணுங்களென்று நீரேவலிந்து சொல்லுவதை ஆலோசிக்குமிடத்தில் ஒருவர் எவ்வகை மேன்பாடான பொருளையும் தாமே கொண்டுவந்து கொடுத்து, நீங்கள் எல்லோரும் இதை அங்கீகாரம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று சொல்வார்களேயானால், அப்பொருளின் மேன்மையும், அதில் விருப்பமும் குறையுமென்று
ய. ன்று பெரியோர் சொல்லுவார்கள்* தாங்களோ, உலகையாளுகின்ற அரசர், மேலும் வேதாகமங்களை எல்லாமுணர்ந்த பிரபு, தங்களுடைய கட்டளையை மீறிநடக்க யாங்கள் வல்லேம், அல்லேம். ஆயினும், ஒரு வார்த்தைசொல்ல அஞ்சுகின்றோமென்றார்கள். அப்போதரசன் நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டுவதில்லை, சொல்லுங்கள் என்றான். அப்போது அவர்கள் யாவரும் ஜெகநாதத்திலிருக்கும் கண்ணபிரான் உம்முடைய கிரந்தத்தை ஒப்புக்கொண்டால் நாங்கள் உம்முடைய கிரந்தத்தையே பாராயணம்பண்ணிப் பூசிக்கின்றோம் என்றார்கள்*
யக. மகாவித்வான்களும் பரமபாகவதர்களும் சொல்லியவார்த்தையைக் கேட்ட அரசன் அவர்களைப்பார்த்து ஸ்ரீகண்ணபிரானுக்கு சம்மதமாய்

இருக்குமாஎன்று நீங்கள் சொல்லியபடி என்னுடைய அபிப்பிரா
யத்திலும் அவருடைய சம்மதியைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்
கின்ற அபேக்ஷை இருக்கின்றது ஆகையால் தேவாதிதேவன் எழுந்
தருளியிருக்கின்ற ஆலயத்திற்கு நாம் எல்லோரும்போவோம் வாரு
ங்கள்என்று அவர்களையும் அழைத்துக்கொண்டு அரசன் ஜெகன்னாத
மூர்த்தியின் ஆலயத்திற்குள் பிரவேசித்து மிகுந்தபக்தியோடும் சோ
டசஉபசார பூசனையும் ஸ்வாமிக்குச்செய்து மிக்கசிறப்பாக அலங்
கரித்து அஷ்டாங்கபஞ்சாங்க சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்து
எழுந்துநின்று மகாமூர்த்தியாகிய ஜயதேவர்செய்த கோவிந்தகீதத்
தையும் தான்செய்த சாஸ்திரத்தையும் சுவாமியினுடைய திருவடிக்கு
நேராகவைத்து சர்வஜீவதயாபரா கருணாகராபக்தரக்ஷகா எங்குநிறை
ந்துவிளங்குகின்ற பூரண புருஷோத்தமா சந்நிதானத்திலேவந்து நிர
ம்பிநிற்கின்ற விதவான்களுக்கும் ஹரிதாசர்களுக்கும் அடியேனுக்கும்
சந்தேகநிவர்த்தியாகும்படியாக தங்களுக்கு எதிரேவைத்திருக்கின்ற
இந்தஇரண்டு கிரந்தங்களிலும் எம்பெருமானுக்குச்சம்மதமான பெ
ருமைபொருந்திய கிரந்தம் சந்நிதானத்திலேயிருக்கக்கடவது சம்மத
மில்லாதகிரந்தம் வெளியே பிரகாரத்திலிருக்கக்கடவதென்று பிரா
ர்த்தித்து, கர்ப்பகிரகத்தை மூடி பூட்டுப்போட்டு, தன்னுடையவும்,
வித்வான்கள் தாசர்களுடையவும், முத்திரைவைத்து இரவில் தங்கள்
௰உ. தங்கள் ஸ்தானம்போய்ச்சேர்ந்தார்கள்* மறுநாள் உதயமானபின்பு
அரசன் முதலிய யாவரும் ஸ்நானஞ்செய்து நித்திய நேமங்களை முடி
த்துக்கொண்டு, ஜெகந்நாத பரம்பொருளின் ஆலயத்திற்குவந்து கூடி
முதல்நாள் பூட்டிய பூட்டின் முத்திரையைப்பார்த்துக்கொண்டு பூட்
டைத்திறந்து சுவாமி திருவடிக்கு எதிரில் வைக்கப்பட்ட சாஸ்திரங்
களைப் பார்த்தார்கள். அப்போது ஜெயதேவரால் செய்யப்பட்ட கோ
விந்தகீதமாத்திரம் சந்நிதானத்தில் வைத்தபடியேயிருக்க, எல்லோரும்
கண்டு அரசன் நூலைத் தேடியபொழுது கெர்ப்பக்கிரகத்துக்கு வெளிப்
பிரகாரத்தில் கிடக்கக்கண்டு, அந்தக் கிரந்தத்தை எடுத்துக்கொண்டு
தர்மசமுத்திரமாகிய கடவுளின் சந்நிதானத்திற்குவந்து அறிஞரும் பக்
தருமாகிய யாவரும் அதியன்போடு சுவாமியை வணங்கி அநேகவித
௰௩. தோத்திரஞ்செய்துகொண்டாடிய* அத்தருணத்தில் மிகுந்த நாணத்
தோடும், பெருந்துக்கத்தோடும் தலைநாணிப் பூமியைப்பார்த்துக்கொ
ண்டே நிற்கின்ற அரசனை நோக்கி, ஏ ; ராஜேந்திரரோ, அவதாரமூர்த்
தியாகிய ஜெயதேவர்செய்த கிரந்தத்துக்கு எதிராகத் தாமொரு கிர
ந்தத்தைச் செய்தீரோ கண்ணபெருமானுக்குச் சம்மதம் இல்லாமையினு
லேதானே அதையெடுத்துப் பிரகாரத்தில் எறிந்துவிட்டார். சூரியனு
க்கு எதிராக ஒரு மின்மினிவருமாயில் அதனுடைய ஒளி எப்படி மழு
ங்கிப்போகுமோ அத்தன்மையாயினது. பார்த்தீரா, தேவாதிதேவன்
உம்முடைய கிரந்தத்தை வெறுத்து புறம்பேயெறிந்தது என்றார்கள்*

௰௪. இவ்விதமாக அவர்கள் சொல்லிய குறைவான வார்த்தையைக்கேட்ட
அரசன் மிகவும் மனம்வெதும்பி அதிக கவலையோடு சுவாமியினுடைய
சந்நிதானத்தின் எதிரில் நின்று சர்வஜீவகோடிகளுக்கு மாதாபிதாவும்
ஆகிய என் ஆண்டவனே எல்லோரும் உம்முடைய குழந்தைகள் அல்
லவா அப்படியிருக்க ஜெயதேவனைமாத்திரம் உம்முடைய குழந்தை
யாக வகித்துக்கொண்டு யான் உம்முடைய குழந்தையல்லவென்று வெ
ளியே தள்ளிவிட்டதற்கு ஒப்பாக அவர் கிரந்தத்தைமாத்திரம் அங்கீகா
ரம்பண்ணிக்கொண்டு என்னால் செய்யப்பட்ட கிரந்தத்தை மதில்புறத்
தில் எறிந்துவிட்டீரே இது உமக்குச் சம்மதமா, இது நியாயமா, இது
உமக்குத் தகுமா, ஒருகண்ணிலே வெண்ணெயும், ஒருகண்ணிலே சுண்
ணும்புமாயிருக்கின்றது. அறிவுள்ள பிள்ளைமாத்திரம் உம்முடையபிள்
ளை அறிவில்லாதபிள்ளை உம்முடைய பிள்ளையல்லவா, இப்படி பக்ஷபார
மாக நீர் பார்க்கலாமா, செய்யலாமா, பதிதபாவனன் என்கின்ற உம்மு
௰௫. டைய பெயருக்கு இதனால் தோஷம்வந்ததல்லவா* சூரியனுடைய கிர
ணம்நல்லபொருள் இழிவானபொருள் இரண்டின்மீதும்சமமாகவேபொ
ருந்தும் நாட்டிற்கு எரித்த சந்திரகிரணங்கள் காட்டிற்கும் சமத்வமா
கவே எரிக்கும். புஷ்பங்கள் பரிமளிக்கின்ற தடாகம், ஏறி, ஓடை
முதலியவைகள், புலிமுதலிய துஷ்டமிருகங்களுக்கும், பசுமுதலிய
சாந்தமிருகங்களுக்கும் தங்களுடைய ஜலத்தைப்பொதுவாக உண்
ணக்கொடுக்கும். இத்தன்மையாகயாவருக்கும் சமமாகக்கரு
௰௬. ணைசெய்வது உமக்கு நியாயம்* என்று அநேகமாகச்சொல்லி,
யான் பண்ணிய நூலைக் குறைவுள்ளதென்று வெளிப்புறத்தில் எறிந்
தீர், ஜெயதேவர்செய்த ஒரு நூலை உத்தமமானதென்று சந்தோ
ஷமாய் அங்கீகரித்துக்கொண்டீர். இவ்வித விரோதமாகப் பே
தம்செய்வது உமக்குத்தகுமா, ஒப்பில்லாத சர்வலோகநாயகா, பரம
புருஷா, பதிதபாவனா, அமலா, ஆநந்தா, ஆதிமத்தியாந்தரகிதா, அச்சு
தா, அகண்டிதாகாரா, சர்வாந்திரியாமி, சர்வபரிபூரணா, சர்வலோககர
தா உம்முடைய எண்ணமாத்திரமாகத் தாமே சகல லோகமாகவும்,
சகல சராசரங்களாகவும், அவ்வகையாகிய பொருள்களில் அணுமலை
முதலானவற்றின் உள்ளும் புறமுமாகியும், அவைகளுக்குவேண்டிய
ஆகாரவஸ்துக்களாயும், எங்குமாகியும், மாதாவாயும், பிதாவாயும்,
குருவாகவும், தெய்வமாகவும், மனைவியாயும், மகவாயும், பகையாயும்,
உறவாயும் விளங்குகின்ற சர்வமும் நீரேயாகியும் எங்கெங்கும்பார்த்தா
லும் அங்கங்கும் அவர்தானென்றும், பிரபஞ்சரூபம் பிரமோகமென்
றும், யாது முனையன்றியுண்டோவென்றும் சொல்லுகின்ற உண்மை
வாக்கியப்படி சர்வமங்களமூர்த்தியாகிய கருணாநிதியே, அபேதா, அச
ஞ்சலா, உமக்குத்தகுமா தயாபரா, தாமே எனக்குளிருந்து இந்நூலைச்
செய்யும்படி பிரேரணஞ்செய்து இப்படித்திக்காரம் செய்துவிட்டீரே,
இப்போது இதற்கு நான் மேலென்னசெய்யவேண்டியது என்றால்*

௰௭. என்னுடைய அகம்பாவதோஷத்தைப் போக்கவேண்டியது. அதுவோ
என்பிராணன்போனாலொழியப் போகமாட்டாது. ஆதலால், சந்நிதா
னத்திலே என் பிராணனைவிடுவதே நலமென்று பிராணனைவிட முயன்
றான். அப்போது தமது மார்பினிடத்து லெட்சுமியை வைத்திருக்கி
ன்ற தயாபரமூர்த்தியாகிய பக்தரெக்ஷகன் தம்முடைய சுயரூபத்தோ
டும் அரசனுக்கு எதிரே பிரசன்னராகத்தோன்றி ஏ ராசன் பிராணனை
விடுவதில் வருத்தப்படாதே, நிற்க நிற்கவென்று திருவாய்மலர்ந்தனர்*
௰௮. அப்பொழுதரசன் அற்புத மூர்த்தியின் அகணித சுந்தர வடிவத்தைக்
கண்குளிரப்பார்த்து, ஆநந்தபாஷ்பங்கள்பொழிய அஷ்டாங்க பஞ்சா
ங்க சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம்செய்து ஆநந்தசமுத்திரத்
தில் மூழ்கிநின்று அகிலலோகநாயகா, பன்னகசயனா, கஜேந்திரவரதா,
கருணாகரா, தேவாதிதேவா, தேவதேவோத்தமாவென்று அநேகவிதங்
களாக சுவாமியினுடைய திவ்வியமங்கள கல்யாணகுணங்களையெல்
லாம் எடுத்துப்புகழ்ந்து கொண்டாடிச் சுவாமி, அசேதனனும் அகம்
பாவமுமுடைய மகாபாவியாகிய நான்செய்த பிழையைப் பொறு
த்து இரக்ஷித்தருளவேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்தான். அப்
போது பக்தபரிபாலரான சேஷசாயி கிருபைகூர்ந்து அரசன்செய்த
நூலிலிருந்து இருபத்துநாலு சுலோகங்களை எடுத்து அதிலுள்ள குற்
றங்களைநீக்கி மகாமூர்த்தியான ஜெயதேவர்செய்த கோவிந்த கீதத்தில்
சேர்த்து, சிருஷ்டிகர்த்தாவும் திரிமூர்த்தியில் ஒருவருமான பிர
மதேவருடைய சிரசிலும் எழுதும்படியான தமது திருக்கரத்தால் எழு
௰௯. தித்தந்தனர். இங்ஙனம் சுவாமி அருள்செய்து மறைந்தபின்பு* அர
சன் அடியார்பக்திக்குத் தயைபுரிகின்ற சகநாதபிரானுடைய அருளு
க்கு மிகுந்த களிகூர்ந்து முன் தான்கொண்ட துன்பமும் கோபமும்
நீங்கி வனமாலையணிந்த பரந்தாமனுடைய கீர்த்தியையே கொண்டாடிப்
பாடிக்கொண்டிருந்தான். இப்பால் அந்தச் சகநாத தலத்தில் யாகம்
செய்யும்படியான பிராமணகுலத்தில் சிறந்த அந்தணனுக்கு ஒரு
புத்திரி பிறந்திருந்தாள் அக்கன்னிகையின் ஒப்பில் லாத அழ
௨௰. கைப்பார்த்து* அவ்வழகுக்குத் தகுதியாகப் பதுமாவதியென்று
நாமகரணமிட்டு வளர்த்துவருகையில் பருவமிகுக்க மிகுக்க அதி
கவழகு மிகுந்தமையால், சகநாத தேவதேவனுக்கே அக்கன்னிகையை
விவாகஞ்செய்து கொடுக்கிறதென்று அவளைத் துதிசெய்துகொண்டு
தாய்தந்தையர் நிக்ஷயித்திருந்தார்கள். அவர்கள் பந்துக்கள் பெண்ணி
௨௧. னுடைய அழகையும், குணத்தையும் நன்றாய்த்தெரிந்து பெண்* வீட்டு
க்கு வந்து தங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டவர்களுக்கெ
ல்லாம் சகநாதப்பெருமானுக்கு என் குமாரத்தியை விவாகஞ்செய்து
கொடுப்பேனேயல்லாமல், மற்றொருவருக்கும் கொடேனென்று தடுத்
துச்சொல்லிவிட்டு, மகளை அன்போடு வளர்த்துவருகிறநாளில், எல்
லா உலகத்தாரும் விரும்பிப் பணிந்து துதிக்கின்ற சகநாதத்தில் விள

ங்குங் கண்ணபிரான் ஒருநாளிரவில் பதுமாவதி பிதாவாகிய பிராம
ணன் சொப்பனத்தில் வந்து, கேளும் பிராமணரே, நாம் வேறென்றும்
ஜெயதேவர் வேறென்றும் நீர் நினைக்கவேண்டாம். எனக்குச் சமான
௨௨. மானவர் அவர்* ஆகையால் அவருக்கே உன் குமாரத்தியாகிய அரு
மைத்திருமாதை விதிப்படி கல்யாணம செய்வியுமென்று சுவாமி சொ
ப்பனம் சாதித்தபொழுதே நித்திரைதெளிந்து எழுந்து சுவாமி சொ
ல்லியபடி ஜெயதேவரைக் கண்குளிரப்பார்த்துத் தன்மகளுக்கு வரன்கி
டைத்த சிலாக்கியத்திற்காக ஆச்சரியமடைந்து நல்ல முகூர்த்தகாலத்
தில் சுவாமியைக்குறித்துத் தோத்திரம்செய்து கலியாணத்தை முடிப்
௨௩. பித்தார்* கலியாணம் முடிந்தபின் மலரகிதரான கண்ணபிரான் அம்
சரூபராகிய ஜெயதேவர் பத்தினியாகிய பதுமாவதியாரோடு அமலனை
ஜெகநாதன்வாழும் பதியில் ஸ்ரீ ஹரிபஜனைசெய்துகொண்டு எழுந்த
ருளியிருந்தார். இவர் இப்படியிருக்கும்போது தாமரை சூரியனைவி
ரும்புவதுபோல நாராயணன் பாதபக்தியைவிரும்புபவனும், யாதொரு
தோஷமுமில்லாதவனும், மகாபரிசுத்தனுமான ஒரு வர்த்தகனிருந்
௨௪. தான் அவன் திரிகரணசுத்தியாகத் தினந்தோறும்* ஜெயதேவருக்குச்
செய்துவந்த பணிவிடையை அவர்பார்த்து தோஷமில்லாதவன் இவ
னென்று மனதில்கொண்டு அவனது ஜனனமரணதுக்கத்தைப் போக்
கடிக்கும்படியான அற்புத இதோபதேசம்செய்து அவனுடைய அடி
மைத்தன்மை மிகவும் விருத்திக்கும்படி கருணைபுரிந்து, ஜெயதேவர்
தபோதனர்களுக்கெல்லாம் மேலான தபோதனராய் ஸ்ரீ ஹரியினுடைய
சரணாரவிந்தங்களில் தம்முடைய உள்ளத்தை நிலைபெறச்செய்து ஆந
௨௫. ந்தபரராயிருந்தார்* இப்படி யிருக்கும்போது மனம், வாக்கு, காயம்,
என்னும் திரிகரணசுத்தியாகப் பரமாசாரியர் பணிவிடையில் சிறந்த
பக்தியுடைய வர்த்தகன் ஒருநாள் ஜெயதேவருடைய பாதத்தில் வீழ்
ந்து நமஸ்காரஞ்செய்து லெட்சுமிநாயகனுக்குச் சமானமாகிய சுவாமி
களே, அடிமையினுடைய இச்சை பூரணமாகும்படியாக அடிமையின்
மனைக்கு மனமுவந்து எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்.
அப்பொழுது சுவாமிகளுஞ்சம்மதித்தார்கள். உடனே இரதத்தின்
மேல் ஜெயதேவரை ஏற்றிக்கொண்டு தன்னூரில் வளம்பெருகும்படி
௨௬. யாய்* வந்துசேர்ந்த வர்த்தகன், ஜெயதேவரைத் தகுதியான ஆசன
த்தில் எழுந்தருளச்செய்து, சோடச உபசாரமும் முறையாகப்புரிந்து
அதிவிருப்பமாய்ப் பூசித்து, அவருடைய அருளால் சமதமாதி முதலிய
சாதனங்களும் நிறைவுற்று, நாததத்துவத்தின் முடியில் நிலைபெற்ற
தத்துவாதீதனாகிய தன்னையுமுணர்ந்து சீலனாகச்சிறப்புற்று நாள்தோ
றும் ஸ்ரீ ஹரிபஜனை செய்துவந்தான். தேகமே தானென்றெண்ணிக்
கொண்டிருந்த அவ்வூர் அறிவீனர்கள் எல்லோரும் தேகம் இன்னதெ
ன்றும், தேகி இன்னானென்றும் பரம்பொருளாகிய தேவன் இன்னவனெ
ன்றும் அவரது திருவடியில் ஐக்கியப்படும் நெறி இன்னதென்றும்

முழுதுமுணர்ந்து அச்சாதனத்தையே அவர்கள் அநுஷ்டித்துக்கொ
உ௭. ண்டு வரும்படியாகச்செய்திருந்தார் இப்படி* ஒருமாதம்வரையில்
பக்தியிற்சிறந்த குணமுடைய சீடனாகிய வர்த்தகனாற்செய்யப்பட்ட
அன்புநிரம்பிய பணிவிடைக்குமகிழ்ந்து, அவ்விடத்தில் எழுந்தருளி
யிருந்து பின்பு வணிகனைப்பார்த்து சிறந்த கீர்த்திபொருந்திய அன்ப
னே, நீ இவ்விடத்தில் சுகமாக வாழ்ந்திரு நாம் சகநாதத்திற்குப்போ
கின்றோமென்று கூறி, எழுந்தருளினார். அவருக்கு அஞ்சலிவந்தனத்
உ௮. துடனே வர்த்தகன் சர்வ உபசாரங்களும்செய்து* ஞானபலத்தைக்
கொடுத்தருளிய கற்பகவிருக்ஷத்திற்கொப்பாகிய என் குருசுவாமிக
ளே, தங்கள் சரணாரவிந்தங்களை ஒரு கணப்போதும் அடிமை மறவா
திருக்கும்படி கருணைப்பிரசாதம் தந்தருளவேண்டும் என்று பிரார்த்தி
க்க அப்போது ஜெயதேவர் கிருபைகூர்ந்து தமது செந்தாமரை மலர்
போலும் திருக்கரத்தை அவன் சிரசின்மேல்வைத்து அருள்புரிந்து
கிருபாநோக்கம்வைத்தனர். அப்பேர்து வர்த்தகன் சுவாமிகளோ பற்
றற்றவர்கள் குருதக்ஷிணையாக எவ்வளவுகொடுத்தாலும் வேண்டார்க
ளென்று தெரிந்து அவருக்குத்தெரியாமல் அநேகதிரவியங்களையும்,
மிகுதியான விலையுயர்ந்த ஆபரணங்களையும், மேன்மையான புட
வைகளையும், ஒரு ரதத்தில்வைத்து அதன்மீது பரமாசாரியரான
சுவாமிகளை ஏற்றுவித்து ஒரு மனிதனை அவ்விரதசாரதியாகவும்,
அவருக்குத் துணையாகவும் நேமித்துவைத்துத் தான் வெகுதூரம்
உ௯. வழிதொடர்ந்துவந்து அனுப்பிவித்தான்* இப்படி அனுப்பும்போது
தான் துணையாய் அனுப்பின மனிதனையழைத்து ஆபரணங்களையும்,
புடவைகளையும், என் குருபத்தினியாரிடத்தில்கொடுத்து என்னுடைய
வந்தனமும் சொல்லென்று ரகசியமாகச்சொல்லி அவ்விடத்திலே நின்
றுபணிந்து வர்த்தகன் சென்றபின் துணையாகவும் சாரதியாகவும் வர்
த்தகனால் அனுப்பப்பட்டவனுடன் வழிக்கொண்டு நீங்காத தபோதன
ரான ஜெயதேவர் வருகிறபோது துணையாகவந்த பாகன் ஜெயதேவரை*
௩௰. வணங்கி சுவாமிகளே, அடியேன் கிரகத்தில் ஒரு பெரியகாரியம் உண்
டாகியிருக்கிறது நான் அவசியம் போகவேண்டியது. ஆகையால், என
க்கு உத்தரவுகொடுக்கவேண்டுமென்று கேட்டான். நற்குணங்களால்
உயர்ந்த ஜெயதேவர் அவனுடைய அபிப்பிராயத்தையறிந்து அதனால்
நமக்கு மனஸ்தாபமில்லை, நீ போவாயென்று அவனையனுப்பிவிட்டுத்
௩௧. தாம் தனியாக இரதத்தில்போயினர்* அத்தருணத்தில் கங்காநதியைப்
பார்க்கவந்த கொக்குக்கு ஒப்பாக மகா கொடிய பாவிகளாகிய இரண்டு
திருடர்கள் சுவாமிகள் ஏறிவரும் இரதத்தின் இரண்டுபக்கத்திலும் வந்
தார்கள். அவர்கள் வருவதைப்பார்த்து ஜெயதேவர் உள்ளத்தில் சந்
தேகந்தோன்றி இவர்கள் வருமியல்பால் நமக்கு அவமானம் நேரிடுமெ
௩௨. ன்றுணர்ந்து அக்கள்வரைப்பார்த்து* அப்பா நீங்களிருவரும் இத்தே
ரிலுள்ளவைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளுங்களென்று கூறி

த்தாம் தேரைவிட்டிறங்கிப் பூமியிலே பாதசாரியாய்ப் போயினர்.
அப்படிப்போவதை இரக்கமற்ற மகாபாவிகளான திருடர்கள் பார்த்து
இவரை உயிரோடுபோகவிட்டால் வர்த்தகனிடத்தில் சொல்வார் அப்
போது பிரஸ்தாபப்படுமென்று தெரிந்து கொஞ்சமாவது பயங்காமில்
௩௩. லாதவர்களாய்* பின்தொடர்ந்து சென்று அவரைக்கொலைசெய்வத
ற்கு மனம்வராமல் அவர் கால்களையும், கைகளையும், அறுத்து விசால
மான புல்லுகளுள்ள ஓர் புதரில் போட்டுவிட்டு தேரைக்கைக்கொண்டு
சென்றார்கள் அப்போது பூமியிலேநடந்துபோன தேசிகோத்தமரான
௩௪. வர் பூமாதேவி நடுங்கும்படியாகப் பூமியிலேகிடந்தார்* அப்படிக்கிட
ந்த சுவாமிகள் ஸ்ரீ நாராயணனுடைய நாமத்தை இடைவிடாது ஸ்மரி
த்து மிகுந்த புண்ணான சரீரத்தை வெறுத்துத் தாம் சரீரத்துக்கு அந்
நியமாகி நீலம்மேக சாமளவண்ணனான ஸ்ரீ கண்ணபிரானைத் தம்இதயத்தி
லேகொண்டு அங்குநின்று நீங்காமல் பெரிதுயர்வான ஞானனந்த சுகத்
௩௫. திலே மூழ்கியிருந்தார்* அந்நாள் கிரவுஞ்ச அரசன் வேட்டையாட
வந்தவன் பகல்முழுவதும் அவ்வனத்தில் அலைந்துதிரிந்து சூரியாஸ்த
மானமானவுடன் அவ்வனத்திலே சேனைகளுடனே இறங்கி இருந்தான்.
அவ்வரசன்செய்த தபோபலத்தால் ஜெயதேவருடைய தேககாந்தி பிர
காசிக்கின்றதானது புதைத்துவைத்த திரவியம் வெளியில்வந்து ஒளி
௩௬. வீசுவதுபோல் விளங்கிற்று* இங்ஙனம் இருளில் பிரகாசிப்பதைக்
கண்ட வேந்தன் அவ்விடம்வந்து என்னவென்றுபார்த்தபோது ஸ்ரீ ஹ
ரிதாசர் தேககாந்தியுடன் ஆநந்தகரமாகச்செய்கின்ற நாமஸங்கீர்த்தனத்
தையும் அறிந்து மிகுந்த பேரன்புடன் தோத்திரஞ்செய்து விழுந்து
௩௭. நமஸ்கரித்தான்* நமஸ்கரித்த அரசன் ஜெயதேவரின் கால்களும் கை
களும் வெட்டுப்பட்டு ரணத்துடன் குறைந்திருப்பதையும் அதனால்
கிஞ்சித்தும் துன்பமடையாதிருப்பதையும் கண்டு சுவாமிகளே தாங்கள்
வருத்தப்படும்படியாய் இவ்வண்ணம்செய்த மகாபாவியர்கள் யாரோ
வென்று கேட்டான். அதற்குச் சுவாமிகள் நமது தீவினையேயென்று
சொல்லினர். அதுகேட்ட அரசன் சுவாமிகளைப் பல்லக்கின்பேரில்
௩௮. வைத்துக்கொண்டு தன் பட்டணத்துக்குக் கொண்டுபோயினன்* போ
னவன் சுவர்னமிழைத்த நவரத்ந சிம்மாசனத்தில் சுவாமிகளைவைத்துத்
திரிகரணசுத்தியாகத் திருவடிபூசனைசெய்து அன்போடு நேயம்செய்து
ஞானசூரியனேயென்று பணிவிடைபண்ணி அருள்பெற்று விளங்கி
ஆதிசேஷன்மீது அறிதுயில் அமர்ந்த பரஞ்சுடராகிய ஸ்ரீமந்நாராயண
௩௯. னை அநந்தவிதமாகத் தோத்திரம்பண்ணினன்* மேலும் தன்னுடைய
சேவகர் பிரதானிமுதலான சேனைகளையும் பார்த்து நீங்கள் யாவரும்
இந்தச்சுவாமிகளுடைய பணிவிடையில் எவ்வளவும் குறைவுபடாமல்
நடவுங்களென்று ஆங்ஞையைசெய்து நாம் எல்லோரும் பெரும்புண்ணி
யம் பண்ணினபடியினாலே பெறுதற்கரிய பாக்கியத்தைப்பெற்றோமெ
ன்று சர்வத்திரர்களும் நினைந்து மனமகிழ்ச்சியாக சுவாமிகளின் பணிவி

௪௰. டையில் முயன்றார்கள்* இந்தவிதமாகச் சர்வத்திரஜனங்களும் ஜெய
தேவனைப் பரம்பொருளாகப்பாவித்துப் பணிவிடைசெய்து வருகிறகா
லத்தில் ஒருநாள் அரசன் ஜெயதேவருடைய சந்நிதியில்சென்று அவ
ருடைய பாதங்களைப்பக்தியோடுபணிந்து சுவாமிகளே தங்களுடைய
திவ்விய பாதபூசனை செய்வதினும் பெரிதான புண்ணியப்பொருள் வே
௪௧. றொன்றுமில்லையென்று உணர்ந்தயான் இன்னமும்* சுவாமிகள் திரு
வுள்ளத்துக்கு எதெதுசெய்யவேண்டுமென்று எண்ணம் இருந்தாலும்
அவைகளையெல்லாம் செய்ய அவாவுடையவனாயிருக்கிறேன். அடிமை
செய்யும்படியாகக்கட்டளையிட்டருளவேண்டுமென்று அன்புடன்கேட்க
சுவாமிகள் அரசனைநோக்கிக் கெடாத அன்பினையுடைய வேந்தே; நீ
ஸ்ரீ லெட்சுமிநாயகனுடைய திருவடித் தொண்டர்களின் பாதபூசனை
பண்ணி அளவில்லாத தொண்டுசெய்வதே உனக்குரியதொழிலாகக்
௪௨. கொள்ளவேண்டும். என்னெதிராக* என்று சுவாமிகள் சொல்லிய
போதே அரசன் அவர் பாதங்களைவணங்கி சுவாமி அவ்விதமேசெய்கி
ன்றேனென்று ஒப்பி, ஸ்ரீ நாராயணனுடைய பக்தர்களை நான் எப்படி
த்தெரிந்துகொள்ளுவேன் அவர்கள் அடையாளத்தை அறியும்படி அரு
ள்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க அப்போது தபோவல்லவராகிய
௪௩. ஜெயதேவர் அரிதாசரின் லெக்ஷணஞ்சொல்லுகின்றார்* பெருமைபொ
ருந்திய துளசிமணிமாலைகளையும் தாமரைமணிமாலைகளையும் கண்டத்
தில் தரித்துக்கொண்டு உத்தமமான கோபிசந்தனத்தையும் திருமண்
ணையும் துவாதசதானங்களில் வைத்துக்கொண்டு இரவிலும் பகலிலும்
௪௪. ஸ்ரீ ஹரிநாமபஜனையே செய்துகொண்டிருப்பார்கள்* இவ்விதமாகிய
திருமாலின் பக்தர்களைத் தெரிந்துகொண்டு அவர்கள் பாதங்களைய
டைந்து பரிசுத்தமான பணிவிடைசெய்வாயாகில் சர்வவேதநாயகனான
நாராயணனுக்குப்பாற்கடலில் தோன்றிய லெட்சுமிதேவியின்மீதுள்ள
விருப்பத்திலும் மேலான விருப்பம் உன்மீதுண்டாகுமென்று கூறிய
௪௫. போது அவ்வண்ணம் செய்தற்கு அரசனும் உடன்பட்டு* பரமாசாரி
யராகிய ஜெயதேவர் இட்ட ஊழியத்தைச் சிரசிலேதாங்கிக்கொண்டு
தோஷமில்லாத அவர் திருவடிகளை இதயத்துட்கொண்டு பழுதில்லாத
சாத்வீககுணமுடைய சாதுசற்சனர்களின் தரிசனஞ்செய்து இரவிலும்
பகலிலும் அவர்களுடைய பூசனைசெய்வதே தனக்குரியதொழிலாகக்
௪௬. கைக்கொண்டு* ஸ்ரீ கண்ணபெருமான் பாதத்துக்கடிமைபூண்ட தொ
ண்டர்களுக்கு அரசன் அதிசிரத்தாபத்தியுடன் பூசைசெய்துவருகின்ற
அதிசயம் உலகமெங்கும்பரவியபடியால் ஸ்ரீமந்நாராயணனுடைய கேச
வாதி துவாதசநாமங்களையும் சகஸ்திரநாமங்களையும் தினந்தோறும்
இடைவிடாது பசிக்கின்ற தாசர்கள், பள்ளமுள்ளவிடத்தில் பாயும் நீர்
போலப் பெரும்புண்ணியவானாகிய ராஜேந்திரனைப் பார்க்கவந்தார்கள்*
௪௭. வந்தவர்கள் அரசனுக்கு அரிதாசர்களிடத்தில் பேரன்புண்டாகிய ஜெ
யதேவர் குணாதிசயங்களைப் புகழ்ந்து பூசனைசெய்து அப்பால்வேந்தன்

தங்களுக்குச்செய்த பெரிதான பூசையையும் அங்கீகரித்து மேல் அவ் வரசனால் கொடுக்கப்பட்ட வஸ்திரம் ஆபரணம் மிக்க திரவியங்களா லும் திருமாலுக்குத் தொண்டர்களாகிய மலரகிதர் தாரித்திரியத்தினி
௪௮. ன்று நீங்கினர்* இத்தன்மையாக இவ்விடத்தில் நடக்குங்காலத்தில் முன்னம் மகாமூர்த்தியாகிய ஜெயதேவரின் கால்கரங்களையும் அறுத்து அவரைத்தூக்கி ஓர் புதரில் எறிந்துவிட்டு இரதத்தில் நிரம்பிய பொரு ளுடன் களவுசெய்துகொண்டுபோன மகாபாதகராகிய திருடர்களிரு வரும் கிரவுஞ்ச வேந்தன்செய்யுங்காரணத்தைக் கேள்விப்பட்டு நா மும் அரிதாசர்களைப்போல வேஷம்பூண்டுகொண்டுபோய் அரசன்பொ ருள்களையும் கிருகித்துக்கொண்டு வருவோமென்று தீர்க்காலோசனை செய்து தாங்களிருவரும் வைணவர்களைப்போல வேஷம்தரித்துக்கொ
௪௯. ண்டார்கள்* தங்களால் கைகால் அறுக்கப்பட்ட நாராயணமூர்த்தி யின் கிருபைக்குப் பாத்திரமான ஜெயதேவர் அப்பட்டணத்தில் எழு ந்தருளியிருப்பதை அறியாமல் மீனைக் கௌவுதற்காகக் கொக்கு அசை யாது நிற்கும் நிலைமையைப்போலக் கைகளில் ஜெபமாலையும் கழுத்தில் துளசிமணித்தாவடமும் நெற்றிமுதலிய தானங்களில் திருமண்ணும் தரித்து வாக்கில் அரிநாமத்தையும் சொல்லிக்கொண்டு அதிவேகமாக
௫௰. வந்தார்கள்* இப்படி வந்தவர்கள் அகப்பற்றும் புறப்பற்றும் அற்ற மெய்ஞ்ஞானிகளைப்போல வெளிக்குத்தோற்றும்படியான செய்கைய ராய் தாவள்ளியமாய்ப் பிரகாசிக்கின்ற உன்னதமாகிய அரசன் அரண் மனைக்குள் புகுந்தார்கள். அங்கு அறுபட்ட கைகால்களுடன் சிம்மா சனத்தில் வீற்றிருக்கின்ற ஜெயதேவரைக்கண்டார்கள். கண்டவுடன் தாங்கள்கொண்டிருந்த சந்தோஷமுழுவதும்போய் மிக்க வெறுப்படை
௫௧. ந்து* பசுவானது மிகவும் புல்லுள்ளதென்றுவிரும்பி ஓர் காட்டில் புகுந்தபொழுது அவிடத்தில் தன்னைக்கொல்லும் வேங்கைப்புலியைக் கண்டால் எவ்விதமான பயமும் துக்கமும் அதற்குண்டாமோ அது போல, மனமும் சினமும் இறந்த சாந்தசீல சம்பன்னரான ஜெயதேவ ரைக்கண்டு பயந்து நாம் உள்ளேபோவது தகாது இவ்விடத்தினின்று விலகிச் சீக்கிரம் மறைவாய்ப்போய்விடவேண்டுமென்று புத்திகலங்கி
௫௨, ஒருவருக்கொருவர் சயிக்கினைபண்ணிக்கொண்டனர்* அத்தருணத் தில் அக்கொடியரிருவரையும் பொறுமையும் சீவகாருணியமும் உடை யவரும் உண்மைப்பொருளாகிய பரப்பிரம வஸ்துவை உணர்ந்தவரு மாகிய ஜெயதேவர் அறிந்து அவர்களுக்கு உத்தமமான உபசாரஞ்செய் வதற்காகத் தாம் வீற்றிருந்த சிம்மாசனத்தைவிட்டிறங்கிச் சமீபத்தில் நிற்கின்ற ஏவலாளரைக்கொண்டு எதிரேவந்து வந்தனம்செய்து*
௫௩. அவர்களை விருப்பத்துடன் ஆலிங்கனம்பண்ணித் தம்முடைய ஊழியம் பண்ணும்படியாகச் சமீபத்தில் காத்துக்கொண்டிருக்கின்ற ஏவலாள ரைநோக்கி இந்தப்பக்தர்கள் இருவரையும் அரசனிடத்தில் கொண்டு போய்விட்டு இவர்கள் கேட்பவைகளை எல்லாம் கொடுக்கும்படி நாம்

சொன்னோமென்று சொல்லுங்களென்று அவர்களுடன் அரசன்பால்
௫௪. அனுப்புவித்தார்* ஏவலாட்கள் சுவாமிகள் சொல்லியபடியே அவர்களை
அழைத்துக்கொண்டுபோய் விட்டு குருசுவாமிகள் சொல்லியதையெல்
லாம் சொல்லியபோது அரசன் பொய்வேஷதாரிகளை உண்மையான
தாசர்களென்று பெருமிதப்படுத்தி அவர்கள் பாதத்தில்வீழ்ந்து வண
௫௫. ங்கி அதிக பிரீதியாகத்தோத்திரஞ்செய்து* அருக்கியமுதலான உப
சாரங்களை எல்லாம்செய்து அத்திருடர்களைநோக்கி மகானுபாவர்களே
தங்களுக்கு என்னுடைய பட்டணத்தில் எத்தனைகாலம்வரையில் இரு
ப்பதற்குப் பிரியமோ அத்தனைகாலம்வரையில் இருக்கவேண்டுமென்று
பிரார்த்திக்க ஆணவத்தோடுவந்த பாவிகள் அப்படியே இருக்கிறோமெ
௫௬. ன்று இருந்தார்கள்* அப்போதரசன் தோஷமில்லாத அதிக அன்புட
னே செய்கின்ற பெருமைகளை எல்லாம் இந்தக்கீழ்மக்கள் இருவரும்
கொஞ்சமாவது விருப்பமடையாமல் எப்படி நினைத்திருந்தார்களென
றால் ஆடானது கசாருகன் கொல்லுதற்குத் தன்னை வளர்க்கிறானென்
றெண்ணாமல் வளர்வதுபோல நாம் அரசன் போஷணையிலிருப்பது
௫௭. ஒக்குமென்று கவலையுற்றிருந்தார்கள்* அன்றியும் பொறுமையுடைய
பெரியவர் நாம்செய்த கொடுந்தொழிலை அரசனிடத்தில் அறிவித்தால்
அச்சங்கதியை அரசன் அறிந்தவுடனே நம்மிருவர் பிராணனையும்வா
ங்கிவிடுவான். இதில் எவ்வளவும் சந்தேகமில்லையென்று வேடதாரி
யாகிய திருடர்கள் யோசனைபண்ணி மிகவும் பயங்கொண்டு நீந்தக்கூ
டாத துன்பசாகரத்தில் மூழ்கி மிகவுந்துயர மடைந்தவர்களாய்*
௫௮. சாப்பிடுவதுமில்லாமல் நித்திரையுமில்லாமல் மனதில் சந்தோஷமும்
இல்லாமல் சிநேககுணமுமில்லாமல் இவர்கள் தினந்தோறும் வருத்
தம் உற்று மெலிந்து துக்கமாயிருக்கும் இயல்பை அரசனுணர்ந்து பரி
சுத்தகுணக்கடலான சுவாமிகளிடத்தில்வந்து பாதம்பணிந்து அவர்
கள் இருக்குந்தன்மையை அறிவிக்க அதுகேட்ட ஜயதேவர்சொல்லு
௫௯. கின்றனர்* இராசேந்திரா அந்தப்பக்தர்கள் இவ்விடத்தில் இருப்ப
தில் சுகமில்லாமல் வருத்தமடைவார்களானால் அவர்களுடைய பாத
பூசைபண்ணி அவர்கள்கேட்டதைஎல்லாம் கொடுத்து அவர்களுக்கு
உத்தரவுதந்து காடுவனங்களையெல்லாம் கடந்து அவர்கள்வாழும் ஊ
ரில்சேரும்படி செய்விக்கவேண்டுமென்று ஜெயதேவர் சொல்லியவா
ர்த்தையைக்கேட்ட பெருமைபொருந்தியஅரசன் அவ்வண்ணமே செ
ய்கிறேனென்று தேசிகோத்தமரின்பாதம்பணிந்து அங்குநின்று நீங்கி*
௬௰. அவ்வேடதாரியர்இடம் அரசன்போய் அவர்கள் எதிரேநின்று இனி
மையான உபசாரவார்த்தைகளைச்சொல்லி பக்தசிரேட்டர்களே தாங்
கள் சந்தோஷமாக அடியேன் அரண்மனையில் இருக்கின்றீர்களா அல்
லது வேறிடம்போகப் பிரியமாவென்றுகேட்கவும் விஷத்துக்கொப்பான
அக்கொடியதுஷ்டர்கள் அரசனே உம்முடைய உபசாரம் பெரிதா
யிருந்தாலும் உத்தமமான கங்காநதிமுதலிய தீர்த்தயாத்திரைபண்ணு

௬௧. வதில் எங்களுக்குமிகுந்த இச்சையுண்டாகியிருக்கிறது* ஆகையினு
லே நீர் எங்களுக்கு உத்தரவுகொடுத்தால் போகின்றோமென்றூர்கள்.
அப்படித்தாங்கள் உத்தமமான யாத்திரைபோவதற்கு வேண்டுமான
பிரியம் எதுவோ அதைச்சொல்லவேண்டுமென்று அரசன் மிகுந்த
அன்புடன்கேட்க அப்போது அக்கள்வர் இரண்டு ரதங்களில் திர
௬௨. வியங்களை நிரம்பத்தந்து அனுப்பிவிக்க* வேண்டுமென்று சொல்ல
வும் அரசன் அதிதீவரமாய் இருவருக்கும் மிகுதியான ஆபரணங்களும்
வஸ்திரங்களும் கொடுத்து அவர்கள் திருப்தியடையும்படி இரண்டு
ரதங்களில் திரவியங்களை நிரப்பி இவ்விரதங்களில் ஏறுங்களென்று
ஏறச்செய்து சாரதியுடனே தாங்கள்போகவேண்டிய இடத்துக்குப்
௬௩. போங்கள் என்று அரசன் உத்தரவுசெய்தான்* அரசனிடத்தில் நய
மான உத்தரவுபெற்ற கள்வர் ஜெயதேவருடைய பாதங்களைவணங்கிச்
சுவாமி எங்களுக்கு உத்தரவுகொடுக்கவேண்டுமென்று கேட்டனர்.
இவர்கள்மேல் மிகுந்தபிரியமுடைய சுவாமிகள் போங்கள்என்று உத்
தரவுகொடுத்தார். இப்படி உத்தரவுபெற்றுக்கொண்டு அதிகசந்தோ
ஷத்துடன் ரதத்தில் ஏறிப்போகிறபொழுதில் இரதங்களை நடத்தும்
௬௪. சாரதிகள் இவர்களைப்பார்த்து* சுவாமிகளே எங்கள் ராஜேந்திரனு
டைய பட்டணத்தில் அநேகம் அரிதாசர்கள் வந்தார்கள் அவர்களைப்
பார்க்கிலும் உங்களைமிகவும் புகழ்ந்துகொண்டாடி உயர்வான உபசா
ரங்கள்சொல்லி அளவிறந்த திரவியங்களையும் கொடுக்கும்படிசெய்து
ஜெயதேவர் உங்களை அனுப்பினுரே, இப்படியெல்லாம் அவர் உங்களு
க்குச்செய்வித்தது இன்னகாரணத்தால்என்று தெரியவில்லை அது ஏது
காரணத்தாலென்று கேட்க அப்போது அக்கள்வர்கள் அதற்குக்கார
௬௫. ணம் சொல்லத்தொடங்கினுர்கள்* இந்த ஜெயதேவர் என்பவர் எங்
கள் தேசத்தையாளும் துஷ்டகருமராஜனுடைய பிரதானி நாங்கள்
அரசன் என்னகட்டளையிட்டாரோ அதைச்செய்கின்ற ஏவலாளர்கள்
ஜெயதேவர் எங்களுக்கு மிகுந்தசினேகர் இவர் அரசனுடைய அநேக
மாயிரம் திரவியங்களைச் சேதப்படுத்திவிட்டார். அதை அரசன்தெ
ரிந்து இவரைச்சிரச்சேதம் பண்ணச்சொல்லி எங்களுக்கு உத்தரவுகொ
௬௬. டுத்தார்* நாங்கள் அரசனுத்தரவுப்படி செய்யாமல் இவருடைய
கால்களையும் கைகளையும் அறுத்துப்புட்பங்கள் மலர்ந்தவனத்தில் ஒரு
புதரில் போட்டுவிட்டு இவரைச்சிரச்சேதம் செய்விக்கச்சொன்ன அவ்
வரசனிடத்திலும் போகமனமில்லாமல் விரக்தியோடு நாங்கள் இந்நாள்
௬௭. இவ்விடம் வந்தோம்* உங்கள்பட்டணத்துக்கு வந்தவுடன் ஜெயதே
வர் எங்களைக்கண்டதே பிராணபிட்சைகொடுத்த உயர்ந்த புண்ணியர்
களே என்று மிகுந்த உபசாரமுஞ்செய்து பிரியத்தோடு மிக்க சன்
மானமும் செய்தார் என்று சொன்னுர்கள். அசத்தியமாகிய பொய்
௬௮. யைஅல்லாமல் பெரும்பாவம் வேறுண்டா* அப்பொய்வார்த்தையைப்
பூமியானது பொறுக்கமாட்டாமல் அக்கணத்தில் திடீரென்றுவெடித்

தது அந்தவெடிப்பில் மகாசண்டாளர்களான திருடர்கள் இரதத்துடனே விழுந்து அமிழ்ந்து மரணமடைந்தார்கள். அப்போது சாரதிகள் இருவரும் மெல்லப்பக்கத்தில்குதித்து அந்தஅபாயத்துக்கு விதிவலியால் சாகாமல் தப்பித்துப்பயந்து நடுங்கி இதற்கு நாமென்னசெய்வோம்*
௬௯. இது தெய்வச்செயலேயல்லாமல் வேறல்லவென்று நினைத்து இந்தப்பிரமாதகரமானசெய்கையை மாசீதிபரரும் அரிபக்தருமான ராஜேந்திரருக்கு இப்பொழுதே நாம்போய் அறிவிக்கவேண்டுமென்று ராஜன் சபையைநோக்கிப்போயினபோது*
௭0. அச்சபையில் கண்ணபிரானுடையதிருவடியில் தம்முடைய மனதைச்சேர்த்தித் தியானபரராய் இரத்தின சிம்மாசனத்தில் தேஜோமயமாகவிற்றிருந்த மகாமூர்த்தியாகிய ஜெயதேவரைக்கண்டு மிகுந்தபயபக்தியுடனே விழுந்துபணிந்தெழுந்து வாட்டமானமுகத்தோடு கண்கலங்கி நின்றார்கள். அவர்கள் முகத்தைச் சுவாமிகள்பார்த்து தமதுமனதில் மிகவும் இரக்கமுற்று அப்பா நீங்கள் இருவரும் மிகுந்த துன்பமுடையவர்களாய் முகம்சோம்பி கண்களில் ஜலம்ஒழுக நிற்கின்றீர்களே யாதுகாரணத்தாலே யாமறியும்படி விரைவிற்சொல்லுங்களென்று மிகுந்தகவலையோடுகேட்டார். அப்போதவர்கள் அரசனுக்கினைப்படி அவ்வஞ்சக அரிதாசவேஷதாரிகள் இருவரையும் இரதத்தில் ஏற்றிக்கொண்டு சென்றதையும் அப்படிச்செல்லும்போது அவர்களைஇவர்கள் விசாரித்தகாரணத்தையும் அதற்குஅவர்கள் சொல்லியமுகாந்தரத்தையும் உடனே பூமிவெடித்ததையும் அவ்வெடிப்புக்குள் அவ்விருவரும் இரதத்துடன் விழுந்து மரணமடைந்ததையும் தாங்கள் அச்சங்கதியை அரசனுக்குத்தெரிவிக்க வந்ததையும் சவிஸ்தாரமாகத் தெரியப்படுத்தினார்கள்*
௭௧. இவர்கள் சொல்லியவார்த்தை ஜெயதேவருடைய செவியில்விழுந்தமாத்திரத்தில் உள்ளமுருகி உடல்நடுங்கிவெயர்த்து கண்களிலிருந்து தாரைதாரையாக ஜலம்பெருகியோடும்படியாகக் கதறியழுது கால்கரமில்லாதவரானபடியால் அவரிருந்த சிம்மாசனத்தின்மீதேவிழுந்து புறண்டு ஓ கிருஷ்ணா, ஓ வாசுதேவா, ஓ மாதவா, ஓமுகுந்தா, ஓகோபாலா, ஓ கோவிந்தா, ஓகண்ணா கருணாகராவென்று அரிநாமங்களையெல்லாம் சொல்லியழுதுகூவிச்சகிக்கமுடியாததுக்கமுடையவராய் என்அப்பனே என்அய்யனே என்னை இத்துக்க சமுத்திரத்தில் மூழ்கச்செய்தது உமக்குத்தருமமா தயாபரா தீனரட்சகாபதிதயாவனா ஏபாண்டவர்சகாயா சத்தியபாமைநேயா உலகையுண்ட சிவந்தவாயா ஏமாயா*
௭௨. உமக்குப்பகைவர்களாகிய ஆலகாலவிஷத்துக்கொப்பான இரணியாக்ஷன் இரணியகசிபு இராவணகும்பகர்னன் தந்தவக்கிரன் சிசுபாலன் கம்சன்முதலாகிய மகாபாவிகளை எல்லாம்மேலான மோட்சஉலகத்தை அடையச்செய்து என்னுடைய பகைவர்களானகள்வர்களைக் கீழுலகாகிய நரகத்தில் அமிழ்ந்தச்செய்தது என்பேரில் உமக்குள்ள அன்புதானோ உம்முடைய குளிர்ந்தகருணையோ*
௭௩. ஆதிமூலப்பொருளே என்றழைத்த யானைக்கெதிராகவந்து அதையுமிரட்

சித்து யானைக்குப் பகையான முதலையையுமிரட்சித்து மிருந்தபெரு
மைபொருந்திய உம்முடைய வைகுண்டபதவியையும் கொடுத்தீரே
அதுமாத்திரம் நியாயமோ. சர்வாண்டபிண்டசராசரங்களும் தாமாக
௭௪. விளங்குகின்ற பரிபூரணா* நான் அந்தயானையைப்போல உமக்கடியா
னாகஇருக்க எனக்குத்தீங்குசெய்த பகைவரை நித்தியமான மோக்ஷஉல
கத்தையடையச் செய்யாமல் இப்படிச்செய்தது என்னகாரணத்தினு
௭௫. லோ என்அய்யனேஎன்று* இவர்அழுது வருத்தப்படுகிறபொழுது
அன்னவாகனத்தையுடைய பிரமதேவனது பிதாவாகிய ஸ்ரீமந்நாராய
ணன்கருணைகூர்ந்து தமது சகுணரூபங்கொண்டு அன்பர்கள் நினைத்த
மாத்திரத்தில் வருகின்றதிருமாலானவர் ஜெயதேவருடைய கண்களுக்
௭௬. குப்புலப்படும்படியாக எதிராகவந்தார்* உடனே ஜெயதேவருடைய
கால்களும் கைகளும் பழமைபோல வளர்ந்தன ஜெயதேவர் கண்களால்
காணும்படியாக பூமியின் வெடிப்பில்விழுந்து மரணமடைந்த ஆலகால
விஷத்திற்கொப்பான கள்வர்களும் மேன்மையான சொர்னவிமானத்தில்
௭௭. ஏறி* சொர்க்கம்போய் சேர்ந்தார்கள் அப்பொழுது ஜெயதேவர் சிம்
மாசனத்தில் இருந்து கீழேகுதித்து சர்வலோகநாயகனும் சர்வாந்திரி
யாமியும் பரப்பிரம்ம வஸ்துவான ஸ்ரீகண்ணபிரானுடைய திவ்வியசர
ணம் புஜங்களில் அஷ்டாங்கபஞ்சாங்க சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்
காரம்பண்ணினர். அப்போது தேவர்நாயகன் ஜெயதேவரைத்தூக்கியெ
டுத்துக்கட்டி அணைத்துக்கொண்டு என்னுடையபக்த சிரோமணியே
உன்னுடைய அன்புக்கும் அளவில்லை உன்னுடைய ஜீவகாருண்யத்
திற்கும் அளவில்லை எனக்குமிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தாய்*
௭௮. என்று கொண்டாடி ஆசீர்வதித்து பக்தபாலனன் மறைந்துபோயினர்.
அப்பொழுது அங்குநின்றவர்கள் எல்லோரும் ஜெயதேவருடைய கை
கால்கள் வளர்ந்ததைமாத்திரம் அறிந்து மிகவும்புகழ்ந்து வணங்கினர்
கள். அப்போது ஜெயதேவர் அரசனிருக்கும் இடம் நாடிவரும்பொ
ழுது முந்தியே சிலர் அரசனிடம் சென்று அவருடைய கைகால்கள்
வளர்ந்ததையும் அவர் அரசனிடம் பாதசாரியாக நடந்துவருவதையும்
அறிவித்தார்கள். உடனே அரசன் அதிவியப்படைந்து எதிராக ஓடிவந்
துசுவாமிகளுடைய பாதங்களிலேவிழுந்து வணங்கிப் பரம்பொருளுக்கு
ஒப்பானசுவாமிகளே தங்களுடைய கால்களும் கரங்களும் எவ்வண்ண
௭௯. மாகப் பழமைபோல் வளர்ந்தனவோ* அவற்றைச் சொல்லியருளவே
ண்டுமென்று மிகவும் பிரார்த்தித்துக்கேட்டான். அப்போது ஜெய
தேவர் நடந்தவிருத்தாந்தங்களில் ஒன்றுவதுவிடாமல் கூறினர் அது
கேட்ட ஒப்பில்லாத கிரவுஞ்சராஜன் அபரிமிதானந்தமடைந்து முன்
தான்கொண்டிருந்த சிரத்தாபக்தி விசுவாசங்களில் சதமடங்கு அதிக
முடையவனாகி சுவாமியினுடைய பாதங்களில் விழுந்துபணிந்து அநே
கதோத்திரம்செய்து சுவாமிகளே தங்களுடைய பத்தினியாரும் என்னு
டையதாயாரும் ஆகிய மகாலட்சுமிக்கு ஒப்பான பத்மாவதியாரை இவ்

விடத்திற்கு அழைப்பிவிக்கும்படியாக அடியேனுக்கு உத்திரவுகொடுக்கவேண்டுமென்று கேட்டான் அப்போது ஜெயதேவர் ஏராஜன் உன்னுடைய அபிப்பிராயம்போல் செய்வதற்குயாதும் தடையில்லையென்றார். அப்போது அரசன் பத்மாவதியாரை அழைத்துக்கொண்டு வரும்படியாக சில ரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சேனைகளும் சில அறிவில் சிறந்த ஸ்திரிகூட்டங்களும் பத்மாவதியாருக்கு வேண்டிய ஆடைஆபரணங்களும் அவர்கள் ஏறிக்கொண்டுவரும்படியாக ஒருமுத்துச்சிவிகையும் குடை சாமரைமுதலியவைகளும் அனுப்பிவிட்டான்*

அ௰. இந்தச்சேனைகளும் ஸ்திரிகூட்டங்களும் திந்துபில்வ ஊருக்குவந்துசேருவதற்குமுன் பதிவிரதாதருமத்தில் சிறந்த பத்மாவதியார் அவ்விடத்தில் எத்தன்மையவாக இருந்தார்கள் என்னில் ஜெயதேவர் மகாபக்தனாகிய வர்த்தகன் கிரகத்திற்குச்சென்றபின் ஒருமாதம்வரையிலும் தினந்தோறும் ஸ்நானம்செய்து பத்திரபுஷ்பங்கள் எடுத்துக்கொண்டுவந்து சுவாமிகள் வீற்றிருக்கும்படியான ஆசனத்தைச்சுத்தஞ்செய்து அதன்பேரில் ஜெயதேவர் இருப்பதாகப்பாவித்து பத்திரபுஷ்பார்ச்சனை செய்து நமஸ்காரம் பண்ணி அவருடைய தியானமாகவேயிருந்து ஒருவேளை அன்னமுண்டு பகல்முழுவதும் இராத்திரிமுழுவதும் உறக்கமில்லாமல் தமது உள்ளத்தில் அவரைத்தியானித்துக்கொண்டே இருந்தார்கள் பூர்ணமாக ஒருமாதம் சென்றபிறகு மிகுந்தகவலையை அடைந்து என்னுடைய பிராணநாயகோத்தமரே தாங்கள் அன்புள்ள சிஷியனுகிய வர்த்தகன் பின்பு போகும்பொழுது அடியாள் தங்கள் பாதத்தில் நமஸ்கரித்து அஞ்சலிவந்தனத்தோடு நிற்கப்பார்த்து ஏ குணவதியாகிய பதுமாவதி நீ ஏன் கண்கலங்குகின்றாய் இந்தப்பக்தனுடைய மனோபீஷ்டம் நிறைவேறும்படியாக அவன்கிரகத்தில் ஒரு திங்களிருந்து இவிடம் வந்துசேருவோம் அதுவரையில் நீ அசஞ்சல சித்தத்தோடும் இவிடம் இருக்கக்கடவாயென்று அடியாளுக்குக் கட்டளையிட்டருளிய என் பிராணபதே சொல்லியவண்ணம் வருவீர்களென்கின்ற நம்பிக்கையோடும் இருந்த என்னுடைய எண்ணம் கலங்கி வியாகூலப்படும்படியாக வராதிருக்கின்ற காரணம்யாதோ சுவாமிகளே என்னுடைய கண்கள் தங்களுடைய திவ்விய சரணாரவிந்தத்தைப் பார்க்கவேண்டுமென்று என்னை வாதிக்கின்றது என்னுடைய மனசோ என்னிடத்திலில்லாமல் தாங்கள் எங்கிருக்கின்றீர்களோவென்று தேடிக்கொண்டு போய்விட்டது. யானோ ஓராதரவுமில்லாமல் நிராதரவாகத்தங்களைப்பிரிந்திருக்கின்ற துக்கமாகிய சமுத்திரத்தில் மூழுகிப் பரிதபிக்கின்றேன். இத்தருணத்தில் தாங்கள்வந்து கைகொடுத்து அழையாவிட்டால் என்னுடைய பிராணன் எவ்விதமாக நிலைக்கும் சுவாமிகளே சொல்லியவாக்குத்தவறி வராதிருக்கமாட்டீர்களே தங்களுக்கு என்ன சங்கடம் நேரிட்டதோ தங்களுடைய சரீரத்திற்குத்தான் ஏதேனும் உபத்திரவம் சம்பவித்ததோ அவ்விடத்தில் தங்களுக்கு பணிவிடைசெய்கின்ற பக்தர்களைப்பிரிந்துவரா

மனமில்லையோ அல்லது என்னோடுகூடியிருந்தால் தங்களுடைய தவத்திற்குக்குறைவு நேரிடுமென்று வருவதற்குப் பிரியமில்லையோ மகாகிருபாமூர்த்தியாகிய என் ஆண்டவரோ, சூரியனைக்காணாத தாமரைமலரைப் போலும், சந்திரனைக்காணாத அல்லிமலரைப்போலும், மழையைக்காணாத பயிரைப்போலும், தாயைக்காணாத சிசுவைப்போலும் அடியாள் தங்களைக்காணாமல் வருந்துவேனென்பதைத் தாங்கள் ஆலோசியாமல் இருப்பது தங்களுக்குத்தருமமா என்று அநேகவிதமாகப்பிரலாபப்பட்டு அன்னபானமுமில்லாமல் நித்திரையும் இல்லாமல் ஜெயதேவர் இருக்கும்படியான ஆசனத்திற்கு எதிராக இருந்து மகாகற்புடைமையில் சிறந்த பத்மாவதியார் இலங்கைஅரசனான இராவணன் உலகமாதாவான சீதாபிராட்டியை எடுத்துக்கொண்டுபோய் அசோகவனத்தில் சிறையாகவைத்தபொழுது ஜானகிதேவியார் ஸ்ரீராகவமூர்த்தியை எப்படிஜெபித்துக்கொண்டிருந்தார்களோ அப்படியே இவர்களும் ஜெயதேவமூர்த்தியை ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் ராஜாவினால் அனுப்பப்பட்ட சேனைகளோடுவந்த தாதிமார்களில் சில விவேகியர்கள் ஒரு சொர்னதாம்பாளத்தில் விலையுயர்ந்த ஆடையுடன் அநேக ஆபரணங்களையும் சந்தன குங்கும புஷ்பங்களையும்வைத்துக் கையில் ஏந்திக்கொண்டு கிரகத்திற்குள்ளே பிரவேசித்து பத்மாவதியாருக்கு எதிரே அத்தட்டை வைத்து விழுந்து நமஸ்காரம்பண்ணி நின்றார்கள் அப்போது பத்மாவதியார் அந்த ஸ்திரீகளைப்பார்த்து நீங்கள் ஆரம்மா எவ்விடத்திலிருந்து என்னகாரணமாக வந்தீர்களென்று கேட்டார்கள். அப்போது அந்தத் தாதியர்களில் ஒருத்தி அம்மணி தங்களுடைய பதியும் எங்களுடையகிரவுஞ்ச ராஜேந்திரனுக்குப்பரமாசாரியரும் ஆகிய ஸ்ரீமந்நாராயணருக்கு ஒப்பான ஜெயதேவர் இந்த ஆடை ஆபரணங்களையெல்லாம் தங்களுக்குக்கொடுத்து முத்துப்பல்லக்கின்பேரில் ஏற்றுவித்து இப்பொழுதே அவ்விடம் கொண்டுவந்து சேர்க்கும்படியாக எங்களுக்குக் கட்டளையிட்டருளினார். ஆகையால், தாங்கள் விரைவாக எழுந்தருளி ஆகவேண்டுமென்று பின்னும் ஒருதரம் விழுந்து நமஸ்கரித்தாள். அப்பொழுது பத்மாவதியாருடைய முகமும் அகமுமலர்ந்து உள்ளம் குளிர்ந்து அதிசீக்கிரமாகத் தங்கள்பிராணேசருடைய சரணாரவிந்தங்களை வணங்கித் தரிசித்து மகிழ்கூரவேண்டுமென்று அதி ஆவல்கொண்டு அவ்வாடை ஆபரணங்களைத் தரித்து எழுந்தருளி
அக. யாகி அரசனால் அனுப்பப்பட்ட பல்லக்கின்பேரில் ஏறி* மிகு மகிழ்ச்சியோடு சேனைகளெல்லாம் புடைசூழ்ந்துவரும்படியாகக் கிரவுஞ்சராஜன் பட்டணம்வந்துசேர்ந்து பல்லக்கினின்று கீழிறங்கிக் கருணைபரராகிய ஜெயதேவர் எழுந்தருளியிருக்கின்ற சபாமண்டபத்தில் சிம்மாசனத்திற்குச் சமீபத்திற்சென்று தமது பிராணபதியாகிய ஜெயதேவருடைய திவ்வியமங்கள சொரூபத்தைக் கண்குளிரக்கண்டு அவருடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து அதி வணக்கத்

தோடும் நிற்கின்ற தருணத்தில் ராஜனும் ராஜாவின் பத்தினியும் மிகுந்த பிரீதியோடும் பக்திவிசுவாசத்தோடும் பத்மாவதியாருடைய பாதங்களில் வீழ்ந்து பணிந்து தோத்திரம்செய்து அம்மணி என்னுடைய பரமகுருநாதராகிய சுவாமிகளோடு தாங்களும் எழுந்தருளியிருக்க வேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்தான். அப்போது ஜெயதேவரும் அதற்கு அனுமதிகொடுத்து கூடவீற்றிருக்கும்படியாக உத்தரவுசெய்தார். உடனே பத்மாவதியார் சுவாமிகளோடு சிம்மாசனத்தில் கூட வீற்றிருந்தார்கள் அப்பொழுது கிரவுஞ்சராஜன் ஆநந்தபரிதனாய் தானும் தன் பத்தினியுமாக எதிரேநின்று சோடச உபசாரத்தோடும் பூசனைசெய்து பாதம்விளக்கிய தீர்த்தத்தைச் சிரசில் புரோக்ஷித்துக்கொ
௮௨. ண்டு* பானமும்செய்து அற்புதாநந்தமடைந்து ராஜபத்தினியும் ராஜனுமாக விழுந்து நமஸ்கரித்து ராஜா தன் பாரியாளைப்பார்த்து நமது மாதாவாகிய பத்மாவதியாரை உன்னுடைய அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு சென்று அற்புதமான ஆசனத்தில்வைத்துத் தினந்தோறும் வழுவாது பூசனைசெய்துகொண்டு வாவென்று உத்தரவுகொடுத்
௮௩. தான்* ஜெயதேவரும் பத்மாவதியாருக்கு அவ்வண்ணமே இருக்கக் கட்டளைகொடுத்தனுப்பினர். அதுமுதல் பத்மாவதியார்மிக மனமகிழ்ச்சியோடும் ராஜாவின் பத்தினி அரண்மனையில் அவ ள்பூசிக்க
௮௪. வீற்றிருந்தார்கள்* இப்படியாக இருக்குநாளில் ஒருநாள் ஒரு தூதன் ராஜபத்தினி அரண்மனைக்குவந்து, அம்மணி தங்கள் தம்
௨௫. பியாகிய சுஜாணர் இறந்துபோனாரென்றறிவித்தான்* அந்த வார்த்தையைக்கேட்ட அரசன் மனைவி அடித்துமோதிப் பூமியில்விழுந்து கதறியழுதாள். அப்போது அவளுடைய தாதிமார்களும் உறவினர்களும் ஊழியப்பெண்களும் அநேகம் நூறுபேர்களாக ஓலமிட்டு அழுதார்கள். அத்தருணத்தில் இறந்துபோன சுஜாணனுடைய மனைவியும் ராஜபத்தினியிடத்திருந்தாள் அவளடைந்த துக்கமும் சோ
௮௬. கமும் ஒருவராலும் அளவிட்டுச்சொல்லிமுடியாது* இப்பேர்ப்பட்ட துக்ககரமான சமயத்தில் ஆசனத்தின்மீதிருந்த குருபத்தினியாகிய அருந்ததிக்கொப்பான கற்பினையுடைய பதுமாவதியார் தம்முடைய உள்ளங் கலையாமலும் கண்கலங்காமலும் தம்முடைய நாயகரான ஜெயதேவருடைய திருவடித் தியானமாகவேயிருந்தார்கள். இப்படி இவர்களிருப்பதை இராஜன்மனைவி பார்த்து ஆ; இவளுடைய மனமென்ன கல்லா, மரமா, இவ்விதமான துன்ப சமயத்திலும் கொஞ்சமாவது மனமிரங்காமலும் கண்கலங்காமலும் இருக்கின்றாளே மேலும் என் தம்பி பெண்சாதி உடன்கட்டை ஏற உறுதிகொணடு புறப்பட்டாளே இப் பெருந்துன்பசங்கதியைப்பார்த்தும் புற்றுப்போலிருக்கின்றாளே ஏ சகிஜனங்களா இப்படிக் கடினசித்தமுடையபெண்பிள்ளையை நீங்கள் எங்கேயாவது கண்டதுண்டா கேட்டதுண்டா இருக்கட்டும் விசாரிப்பதற்கு இது சமயமல்லவென்று சொல்லி தம்பியினுடைய களேபரம் மயா

னத்துக்குப்போவதும் தம்பிபெண்சாதி உடன்கட்டை ஏறுவதுமுத
லான காரியங்களையெல்லாம் தான் கூடவிருந்துநடத்தி மேல் செய்ய
வேண்டியபத்துநாள்பிரேதச்சடங்குகளை எல்லாமுடித்துச் சூதகந்தீர்ந்த
சில தினங்களுக்குப்பின்பு வழக்கம்போல் ராஜபத்தினி பதுமாவதியார்
பாதங்களுக்குப் பூசைசெய்து முடித்தபின் ஒருதரம் பாதம்பணிந்து
௮௭ எழுந்துநின்று* அம்மணி ஒரு விண்ணப்பமிருக்கின்றதென்றாள்.
அப்போது பதுமாவதியார் சொல்லலாமென்றார்கள் தாயே என் தம்பி
யிறந்த சமாசாரத்தைக் கேட்டவுடனே நான்முதலிய யாவரும் துக்கசா
கரத்தில் மூழ்கியழுதோமே அப்பொழுது தாங்கள் மனங்கலங்காம
லும் கண்களில் ஜலம் வராமலும் எப்போதும் இருக்கும் சுபாவம்
போலிருந்தீர்களே அது காரணம் சொல்லியருளவேண்டுமென்றாள்*
௮௮ அப்போது பதுமாவதியார் ஏ ராஜாத்தி எனக்கு இவ்வுலகத்தில்
என்னுடைய பிராணநாயகரைத்தவிர ஒருமாதாவுமில்லை பிதாவுமில்லை
குருவுமில்லை தெய்வமுமில்லை உறவுமில்லை பகையுமில்லை ஒருவஸ்து
வினிடத்திலும் விருப்புமில்லை வெறுப்புமில்லை சதா என்னாயகருடைய
திருவடியில் மனதை லயப்படுத்தியிருக்கின்ற எனக்கு உன்தம்பியிறந்
துபோனதால் துன்பம் வருதற்கு மார்க்கமெங்கே நீயும் மற்றவர்களும்
௮௯ அழுவதைப்பார்த்து நான் அழுவதற்கு ஏதுவெங்கேயென்று இவ்விதமாக
ப்பதுமாவதியார்சொல்லியவைகளைக்கேட்டராஜன் மனைவிக்கு மிக்கசின
முண்டாகி இவ்வளவு அகம்பாவம் கொண்டிருக்கின்ற இந்தஅம்மாளை
தான்பரிக்ஷைபார்க்கவேண்டும் என்கின்ற எண்ணங்கொண்டு மகா தந்தி
ரியாகிய மந்திரியை ஒரிடத்தில் வரவழைத்து தான் பதுமாவதியாரைக்
கேட்டதையும் அதற்கவர்கள் பதிலுரைத்ததையும் தெளிவாகச்சொல்லி
௯௰ பின்பு தான் பரிட்சை* பண்ண அவிப்பிராயங்கொண்டிருப்பதையும்
அறிவித்தாள் அதைக்கேட்ட மந்திரி தாயே தாங்கள் பரிக்ஷைபார்க்க
வேண்டுமென்கின்றீர்கள் அதுயாதேனும் ஒருகாரணத்தால் மகாமூர்
த்தியாகிய ஜெயதேவர் இறந்துபோனாரென்று அவர்பத்தினியாருக்கு
அறிவிக்கவேண்டியது அறிவித்தவுடனே குருபத்தினியார் சொல்லிய
படி அச்சொல்லைக்கேட்டவுடனே பிராணனை விட்டுவிட்டால் அப்
பால் என்ன செய்கிறது தாங்களே சொல்லவேண்டுமென்றான்.
என்ன மந்திரி உன் புருஷன் இறந்தான் என்றவுடனே பிராணன்போய
விடுமா அப்படி என்ன உயிர் ஒட்டிக்கொண்டா இருக்கிறது எனக்கு
அறிவுதோன்றிய நாளாக இதுவரையிலும் அப்படி இறந்தபேர்களை
நான் கேள்விப்பட்டதில்லை நீராவது கேட்டதுண்டா எமனையல்லாம
லுயிர்போகுமா என்னும் பழமொழியை நீர் அறியீரா அந்த அம்மாள்
கூறியது ஆணவ வார்த்தையே ஆதலால் அதைப்பரிசோதித்து அவசி
யம் கருவபங்கம் பண்ணவேண்டும் அப்படிப்பண்ணாதவரையில் என்
மனம் ஆறமாட்டாது ஆகையால் நீர் எப்படியும் செய்யவேண்டியதுநல்
லது அம்மணி தங்கள் உத்தரவின்படி யாதேனும் தந்திரம்செய்து கட

த்துகிறேன் அதனால் பழிநேரிட்டால் நம்முடைய ராஜாங்கத்துக்கும் ரா
ஜாமுதலியசகலஜனங்களுக்கும் நாசம்நேரிடும் என்னை அரசர்கேட்டால்
கக. காரணம் தாங்கள்தான் என்று தெரிவிப்பேன் என்றான். அதற்கு நீ
அஞ்சவேண்டாம் மந்திரி சீக்கிரம் ஏற்பாடு செய்யென்று அனுப்பினான்
அப்போது மந்திரி தன்கிரகத்துக்குவந்து ஒருவேகு காரனைக்கிராமாந்தி
ரங்களுக்கு அனுப்பி சமீபத்திலுள்ள காட்டிலிருந்து புலிகரடிகள் வந்
துவிழுந்து மேய்கின்ற ஆடுமாடுகளையுங்கொன்று தின்று சிலமனிதர்க
ளையும் கொன்றுவிட்டதாகக்கிராமவாசிகள் அரண்மனையில் வந்துதெரி
விக்கும்படி சொல்லச்செய்தான் அப்படியே அவன் சொன்னவுடனே
நாட்டிலுள்ளவர்கள் கூட்டமாக அரண்மனையில்வந்துதெரிவித்தார்கள்
உடனே மந்திரியவர்களையரசன் முன்னிலையில்விட்டபோது அரசன் அவ
ர்களால் புலிமுதலிய மிருகங்கள் செய்யும் கெடுதியைக்கேட்டு நாளையதி
னமேநாம் வேட்டைக்காரரோடும் வந்து அக்காட்டிலுள்ள மிருகங்களை
எல்லாம் வதம்செய்து உங்களுக்குக் கவலையில்லாமல் செய்கிறோம்
போங்களென்று அரசன் அவர்களை யனுப்பிவிட்டு மந்திரியை நோக்கி
நாளைதினம் நாம் வேட்டைக்குப் போகிறபடியால் வேட்டைக்காரர்
களும் சேனைகளும் உதயத்துக்கே வரும்படி யுத்தரவு செய்யென்றான்
உடனே மந்திரி அப்படியே தயார் செய்வித்தான் அன்றுராத்திரி நீங்கி
உதயத்துக்கெல்லாம் அரசன் நித்தியநேமங்களை முடித்துக்கொண்டு
ஜெயதேவர் பாதங்களை வணங்கி வேட்டையாடப்போக உத்தரவுகேட்
டான். சமீபத்தில் நின்ற மந்திரி ராஜேந்திரரே சுவாமிகளும் தங்கள்
கூட வந்தால் வேட்டை வேடிக்கைபார்த்தாற்போலும் இருக்கும் தங்
களுக்குக்குருதெய்வம் துணையாய்வருவதுபோலும் இருக்கும் சுவாமி
களுக்கு விசராந்தியுமாக இருக்கும் என்றான். அப்போதரசன் சுவா
மிகளுக்கு ரதம் தயார்செய்யவேண்டுமேயென்றான். முன்னமே சுவாமி
களுக்கு இரதம் நிற்கிறது அடுத்தாற்போல் தங்களுக்கு யானை நிற்கிற
தென்றான். அப்பொழுது ஜெயதேவருக்கு அரசனொருபுறமும் மந்தி
ரிஒருபுறமுமாகக் கைலாகுகொடுத்து அழைத்துக்கொண்டுபோய் இரத
த்திலேற்றுவித்து அரசன் யானையிலேறிக்கொண்டு சேனைகள் சூழ்ந்து
வர வேட்டையாடக் காட்டில் பிரவேசித்தான். வேட்டையாடப்
போயின அரசன் போகும்பொழுது மந்திரியைப்பார்த்து நீ இவ்விடத்
திலிருந்து சர்வகாரியங்களையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளெ
ன்று கொடுத்த உத்தரவைப்பெற்றுக்கொண்டு தன்னுடைய அதிகார
ஸ்தானத்தில்வந்து இருந்து யுக்திசாலியான ஒரு சாரணனை அழைத்து
ராஜேந்திரரோடு காட்டுக்குப்போன ஜெயதேவர் ஓர் விருக்ஷத்தின்
நிழலில் உட்கார்ந்திருக்கும் தருணத்தில் பின்புறமாக ஓர் வேங்கைப்
புலியானது வந்து பாய்ந்து உண்மையாகக் கொன்றுவிட்டதென்று தெ
ரிவிக்கும்படிசொல்லி அனுப்பினான். அவன் அதிக துக்கமுடையவ
னைப்போல முகமும்வாடி மெய்யும் நடுங்கி கண்களில் ஜலமும் ததும்பு

ம்படியாக ராஜபத்தினியுடைய அரண்மனைக்கு ஓடிவந்து ஏ ராஜபத்தி னியேயென்று கதறினன். அப்போது காரியம்தெரிந்த அரசன் மனைவி அடே ஏன் அழுகிறாய் சீக்கிரம் சொல்லென்றாள். அம்மணி ராஜேந் திரர்கூடக் காட்டிற்குப்போன குருநாதராகிய ஜெயதேவரை ஓர் புலி அடித்துக்கொன்றுவிட்டது என்று வெகு கவலையோடு சொன்னான்* அப்போது சொர்ணசனத்தின்பேரில் இருந்த பத்மாவதியார் ஏ ராஜன் மனைவி இவன் சொல்லியவார்த்தை உண்மையாவென்று கேட்டார்கள்.
௬௨. அரசன் மனைவி ஆமென்றாள்* அப்பொழுது பத்மாவதியார் ஆ பிரா ணநாதாஎன்றார்கள் அத்தொனியோடு பிராணன்போய்விட்டது. அது கண்ட ராஜபத்தினி ஐயோ நான் பரிக்ஷைபார்க்க ஆரம்பித்தது தெய்வ
௬௩. நாயகியான பத்மாவதியாருடைய மரணபரிக்ஷை ஆய்விட்டதே* என் னுடைய ராஜாங்கத்திற்கும் குலத்திற்கு நாசத்தை நானே தேடிக்கொ ண்டேனே என்று சொல்லி பெருங்குரல்விட்டு அழுதாள். அப்போது அங்கிருந்த யாவரும் அழுதார்கள் அரண்மனையானது அல்லகல்லோல ப்பட்டு துக்கசாகரத்தில் மூழ்கிய சங்கதியைத் தூதரால் கேள்விப்பட்டு வேட்டையாடப்போன அரசனும் மிக்க கவலையோடு வந்துசேர்ந்தான்*
௬௪. அப்போது அரசன் என்னகாரணத்தினலே குருபத்தினியார் இறந்து போனர்களென்று விசாரித்தபொழுது தன் பாரியாளே காரணமென்று மந்திரியால் தெரிந்துகொண்டு ஓகோ இந்தப் பெரும்பழிக்கு என்ன
௬௫. செய்வேனென்று நடு நடுங்கி இரக்கமுற்று அழுது* இக்கொலை செய்த பாதகியினுடைய உயிரை என் வாளாயுதத்தால் இக்ஷணமே போக்கிவிடுவேன் என்னை ஸ்திரீஹத்திதோஷம் அடையும் ஆதலால் என்னுடைய பிராணனையே விடுவேனென்று தீர்மானித்து பட்டணத்
௬௬. திற்கு வெளியில் அக்கினிக்குழி உண்டாக்கும்படியாக* மந்திரிக்குக் கட்டளைகொடுத்துத் தன்னுடைய குருநாதராகிய ஜெயதேவர் சந்நிதா னம் வந்து அவர் பாதங்களில் விழுந்து பணிந்து எழுந்துநின்று சுவா மிகளே தங்கள் மனைவியார் பாவியாகிய என்னால் மரணமானர்கள் எ
௬௭. ன்று தெரிவித்தான்* வேதநாயகனான ஸ்ரீ நாராயணன் எப்போதும் குடியாயிருந்து பிரகாசிக்கின்ற இதயத்தையுடைய பரிசுத்தரான ஜெயதேவர் கிருபையுடன் அரசனைப்பார்த்து ஏ ராஜன் என் மனைவி மரணமடைந்தது உன்னால் அல்ல புலியினால் மரணமடைந் தது நீ கவலைப்படவேண்டாம் போவென்று கூறி ஜெயதேவர் ராஜபத்
௬௮. தினியின் அந்தப்புரம்போயினர்* அங்குபோனவர் மரணமடைந்திரு க்கின்ற பதுமாவதியாரைப்பார்த்து ஸ்ரீ கண்ணபிரானைத் தம்மு டைய கண்ணுள்ளாகக்கொண்டு தாளமும் வீணையும் கையில்தாங்கி முன்பு சாத்வீகராஜன்பாடிய அஷ்டபதியாகிய இருபத்துநாலு பாட
௬௯. லையும்பாடித் தோத்திரம்பண்ணி* அரிகீர்த்தனத்துடன் ராதாவிலாச த்தையும் சேர்த்துப்பாடினர். இப்படிப் பாடினபோது ஸ்ரீமந்நாராய ணனுடைய செவிகளில் நிறைந்தது உடனே அன்பராகிய ஜெயதேவரு

௱. க்கு நேராகவந்தருளி* தேவாதிதேவன் ஜெயதேவனைக்கட்டி ஆலிங்க
னம்பண்ணிக்கொண்டு அஷ்டபதியைப்பாடுவோர்கள் அதனை உத்தம
மானதென்று சொல்லிக் கேட்பவர்கள் ஆகிய அவர்களிடத்திலுள்ள து
ன்பங்களெல்லாம் நீங்கும்படி இரவும்பகலும் அவர்களுள்ளத்திலிருப்
௱௧. பேன்* என்று சொல்லி பதுமாவதியார் உயிர்த்தெழும்படியாகக்கிரு
பாநோக்கம்வைத்தவுடன் ஆகாயவீதியில் நிறைந்துநின்ற தேவர்கள் கற்
பகமலர்மாரிபொழிய பதுமாவதியார் சீவித்தெழுந்துநின்று தம்முடைய
௱௨. நாயகரான ஜெயதேவனை எதிரேகண்டார்கள்* உடனே ஸ்ரீ அரிதாச
ர்கள் எல்லோரும் பல்லாண்டு பல்லாண்டாகிய மங்களம்பாடி ஸ்ரீ சக்க
ரபாணியான சர்வலோகநாயகன் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தோ
த்திரித்தார்கள். அரசன் தன்னுடைய சகல பரிசனகூட்டங்களுடன்
ஜெயதேவர் பாதங்களில் வீழ்ந்து பணிந்து அவருடைய கீர்த்தியைச்
சொல்லித்துதித்து அவருடைய பாதபூசையைச் செய்துகொண்டு அரி
தாசனாக வாழ்ந்திருந்தான்.

முற்றிற்று.

ஜெயதேவரவர்கள் திருவடிகளேசரணம்.

ஸ்ரீ ராமஜெயம்.

# துளசிதாசர் சரித்திரம்.

அருமையுடைச் செயதேவர் சரித்திரங்கேட்
டகமகிழ்ந்தேன் பின்னுமன்பர்
பெருமையுடைத் தன்மையுரைத் தருள்கவெனச்
சங்கரியாள் பெரிதுகூற
ஒருமைமறை யவர்மரபி லுறுதுளசி
தாசர்சரித் திரத்தையுன்னிக்
கருமையுடைக் காலனைக்கா லாலுதைத்த
புராரிஅன்பாயக் கழறலுற்றான்.

எனது பிராணநாயகரே மிகுந்த அருமையான ஜெயதேவரது அற்புதமான சரித்திரத்தைக்கேட்டு மிகவும் களிகூர்ந்தேன். மேலும கண்ணபிரானது அன்பர்களுடைய சரித்திரத்தைக் கேட்க அதிக விருப்பங்கொண்டிருக்கின்றபடியால் கருணைகூர்ந்து மொழிந்தருளவேண்டுமென்று சங்கரி கேட்க புராந்தகனும் காலாந்தகனுமாகிய சாம்பவமூர்த்தி மறையவர்குலத்து அவதரித்த துளசிதாசருடைய சரித்திரத்தைச் சொல்லத்தொடங்கினார்.

க. ஸ்ரீ லெட்சுமிநாயகரும், சர்வலோகநாயகரும், சர்வபரிபூரணரும், சர்வஜீவதயாபரரும், சச்சிதானந்த சொரூபருமான நாராயணமூர்த்தியானவர் தம்முடைய சந்நிதியில் அஞ்சலியஸ்தராய் நிற்கின்ற ரிஷிகணங்களில் வன்மீகரிஷியைக் கருணாவிட்சண்ணியத்தினாலே பார்த்து ஏ வன்மீக ரிஷியே பூவுலகில் பாவமாகிய அக்கினியானது மிகவும் விருத்தியாகித் தகிக்கிறது. ஆகையால் நீர் சென்று மானிடவடிவமாய் மறையவர் குலத்தில் அவதரித்து நம்முடைய பக்தியாகிய குளிர்ந்த ஜலப்பிரவாகத்தினாலே அவ்வக்கினியைக் கிஞ்சித்துமீறவிடாமல் அவிக்கவேண்டுமென்று திருவாய்மலர்ந்தனர். அப்பொழுது வன்மீகர் இந்தச் சந்நிதானத்தில் நிரம்பி நிற்கின்ற பரமபாகவதர்களாகிய ரிஷிகணங்களுக்கும் தேவகணங்களுக்கும் எதிராக எளியேனாகிய என்னை ஒரு பொருளாக மதித்து எம்பெருமான் அழைத்து இக்கட்டளைகொடுத்தருளினாரோ இது எனக்குப் பெரும்பாக்கியமென்று மிக மகிழ்ச்சிகூர்ந்து பெருமான் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம்செய்து

உ. விடைபெற்றுக்கொண்டு பூவுலகிற்குவந்து* உலகத்திலுள்ள பட்டணங்களுக்கெல்லாம் மேலாகவும், விஸ்தாரமாகவும், அலங்காரமாகவும் விளங்குகின்ற பட்டணமாகவும் எல்லா அரசர்களையும் அடக்கி அவர்கள் பயந்துவணங்கிக் கப்பங்கட்டும்படியாக அரசாக்ஷிபுரிந்துவந்த சார்வபௌமரான அரசர்களுக்கு ராஜதானியாகவும் சிறந்திலங்குகின்ற

அத்தினுபுரியென்னும் நகரத்தில் பாரம்பரையாய் வாழ்பவரும் கனோ
ஜா என்கின்ற உயர்ந்த உத்தமமான பிராமணகுலத்திற்சிறந்தவருமாகிய
ஆத்துமா ராமனென்னும் நாமமுடையவருக்கு அற்புதமான புத்திர
ராக அவதரித்தார். அப்போது தாயும் தகப்பனும் குழந்தையினு
டைய அதி சுந்தரமான வடிவத்தைக்கண்டு அளவில்லாத ஆநந்தமடை
ந்து மிகவும் ஆலோசித்துத் துளசிதாசென்று நாமகரணம்வைத்து*
௩. ஈஸ்வரனுடைய கிருபையாலுண்டாகிய புத்திரனை மிக்கவிருப்பத்தோடு
நாளொருவண்ணம் பொழுதொரு மேனியாக வளர்த்துவந்து ஏழாவது
பிராயத்தில் பிராமணர்களுக்கு வகுத்திருக்கின்ற வேதவிதிப்படி புத்தி
ரனுக்கு உபநயனம் செய்து மேல் பரிசுத்தமான பன்னிரண்டாவது
பருவத்திற்குள் பிராமணர்களுக் குரிமையான வேதாகமபுராணங்களை
யெல்லாம் கற்பித்துப்பின்பு தங்களுடைய குலாசாரத்துக்குத் தக்க
யோக்கியதையான மறையவர் குலத்தில் நற்குணமும் நற்செயலும் சுப
லெக்ஷணங்களுமுள்ள மமதா என்னும் பெயருடைய பெண்ணைத்தேடி
௪. க்கொண்டு வந்து நல்லசுபமுகூர்த்தத்தில் விவாகமுடிப்பித்தார்* அப்
போது துளசிதாசர் நல்லயவ்வன பருவமுடைய தமது பாரியாளாகிய
மமதாவும் தாமும் கணப்போதாவது பிரியாதவர்களாய்க் காமசுகபோ
கத்தை யனுபவித்துவந்தார். அக்காலத்தில் அத்தினுபுரத்திலிருந்து
அரசாக்ஷி செய்துவந்த அக்பர்பாச்சாவினிடத்தில் சேனைத்தலைவராய
உத்தியோகத்தில் அமர்ந்து பெருஞ்செல்வமுடையவராய்ச் சிறப்புற்
றோங்கிவருஞ்காலத்தில் ஒருநாள் பாச்சா தன்னுடைய ரதகஜதுரகப
தாதிகளெல்லாம தன்னைப்புடைசூழ்ந்தும் முன்னணிபின்னணியாகவும்
ஜெயபேரிகை ரணபேரிகை முதலிய வாத்தியங்கள் மேகமுழக்கத்துக்கு
ச்சமானமாக முழங்கப் பாலைவனமார்க்கமாய்ப் பகைவன்மேல் பொருத
ச்சென்றான். அப்படியவன் செல்லும்போது துளசிதாசர் தமது சேனை
௫. முன்னணியில் அரசனோடு சென்றார். இவர்சென்ற மறுநாள் மமதாதே
வியினுடைய தாயார் மகளைப்பார்க்கவேண்டுமென்கின்ற விருப்பத்தி
னால் அழைத்துகொண்டு வரும்படி ஒரு தூதுவனையனுப்பினாள் அத்
தூதுவன் அந்த ஊரிலிருந்து புறப்பட்டு வேகமாய்த் துளசிதாசர் மனை
க்கு வந்து சேர்ந்தான். அப்போது மமதாதேவியார் அவனை தங்கள்
தாய்விட்டில் இருந்து வந்தவனென்று தெரிந்து கொண்டு நீ யாதுகார
ணத்தால் வந்தாயென்று கேட்டார்கள், அவன் தங்கள் தாயார் தங்க
ளைப் பார்க்கிறதற்காக அழைத்துக்கொண்டு வரச்சொன்னார்க
ளென்று அறிவித்தான் அப்போது மமதையார் மாமியாரிடத்திற்
சென்று என் தாய் என்னை அழைத்துவரும்படியாய்த் தூதனை அனு
ப்பியிருக்கிறார்கள், ஆகையால் தாங்கள் உத்தரவு கொடுத்தால்
௬. போய் வருகின்றேனென்று சொல்லி* மாமியார் பாதத்தில் விழு
ந்து நமஸ்காரம் பண்ணி மாமியாரின் நன்மையான உத்தரவைப் பெற்
றுக்கொண்டு வந்த தூதனுடனே தாயார் வீடுவந்து சேர்ந்து தாயுடன்

கூடிச் சந்தோஷகரமான வார்த்தையாடி மனமகிழ்ச்சியாக அவிடத்தில் இருந்தார்கள். அப்படியிருக்கும்போது பகைவர்மேற் சென்ற இரத்தக்கறையுள்ள வேலாயுதத்தைக் கையிலேந்திய அக்பர்பாக்ஷா பகைவரை அடக்கி அவர்களைத் தனக்குக் கப்பம்கட்டும்படியாகச் செய்துபாளையத்துடனே திரும்பித்தனது பட்டணமாகிய அத்தினபுரம் வந்து சேர்ந்தான். அரசனோடு சென்ற சேனைவீரரான துளசிதாசரும் தம்முடையவீடு வந்து சேர்ந்தார் வீட்டில் தம்முடைய பாரியாள் இல்லாமல் இருப்
எ. பதை நோக்கித்* தமது தாயாரைப்பார்த்துத் தாயே என் பாரியாள் எங்கே யென்று கேட்டார், அப்போது அவருடைய தாய் உன்னுடைய மாமியார் அழைத்துக் கொண்டுவரச் சொன்னதாக நேற்று ஒருமனிதன் வந்து அழைத்துக்கொண்டு போனானென்று தெரிவித்தாள், அவ்வார்த்தையைக் கேட்ட உடனே துளசிதாசர் மனஞ்சோர்ந்து களைத்துப் பின்பு தெளிந்து மாமியார் இருக்கும் ஊருக்குப்போவதே நலமென்று துணிந்து மிகவும் அந்தகாரமான நடுராத்திரியென்று கொஞ்சமேனும் அச்சமில்லாதவராய் நெடுந்தூரம் இரவிலே தனியாகநடந்து அதிவேகமாக மாமியாருடைய வீடுபோய்ச்சேர்ந்து அந்த நடுச்சாமத்தில் கதவடைத்திருப்பதைப் பார்த்துக் கதவைத்தட்டிக் கூப்பிட்டு எழுப்பிப்பார்த்தார். அங்கே நித்திரையான காலமானபடியால் ஒருவரும் எழுந்திருக்க வில்லை. அப்போது துளசிதாசர் இவ்வளவு தூரம் பிரயாசப்பட்டு வந்தும் நம்முடைய மனைவியோடு கூடி மகிழாதெப்படியிருப்பதென்று மிகவும் ஆலோசித்து எவ்விதமாவது இந்த உயர்ந்த வீட்டின் மேலேறி உள்ளே பிரவேசிப்போமென்று நினைத்து அந்த வீட்டைச்சுற்றிப் பார்த்தார். அப்போது ஒருபெரும்பாம்பானது அவ்வீட்டின் முகட்டில் இருந்து கீழே இறங்குவதற்குத் தன்தலையை முன்னே தொங்கவிட்டுக் கொண்டிருந்தது*
அ. அப்பாம்பு தொங்குவதை இவர் பெரிய கயிறுதொங்குகிறதென்று நினைத்து அப்பாம்பின் தலையைக்கையினால் பிடித்துக்கொண்டு அதிவேகமாய் வீட்டின் பேரில் ஏறி யாவரும் சஞ்சரிக்கத்தக்கதான உள்வாயிலில்திடீரென்று குதித்தார் இவர்குதித்த அதிர்ச்சியினாலே உள்ளே நித்திரைசெய்த யாவரும் பயந்து திடுக்கிட்டு, நித்திரை நீங்கினார்கள் அப்போது நித்திரைதெளிந்து எழுந்த மயில்போன்ற சாயலினையுடைய ஒப்பில்லாதமமதாதேவியார் உள்வாயிலில் இறங்கிவந்துபார்த்துத் தன்னுடைய
கூ. நாயகரென்றுஅறிந்து மிகவும் மனங்கலங்கி வருந்தி, என்னுடைய பிராணநாயகரே நீர் இந்த இராத்திரி யென்று சொல்லும்படியான சமுத்திரத்திலே மூழ்கி நெடிதாகிய மார்க்கத்திலுள்ள நதிகளையும் நீந்தி எவ்விதமாக இவிடம் வந்துசேர்ந்தீரோ இப்பேர்ப்பட்ட சங்கடத்தையெல்லாம் தாங்கள் அனுபவிக்கும்படியாய் என்னாலே நேரிட்டது என்ன விதிவசமோ அல்லாமலும் தாங்கள் இந்த உயர்வான வீட்டில் எவ்விதமாக ஏறிவந்தீர்களோ அதனை அடியாளுக்கு அறிவிக்கவேண்டுமென்று

கேட்டாள். அப்பொழுது துளசிதாசர் என் பிராணநாயகி நான் என்ன
நடுராத்திரியாய் இருந்தபோதிலும் உன்னைத்தேடிக்கொண்டு வந்து சே
ருவேனென்று நீ நினைத்து அப்படி வந்தகாலத்தில் நான் வீட்டில் ஏறி
வரும்படியாக உன்னால் விடப்பட்டிருந்த பெருங்கயிற்றினால்தான் வந்
௰. தேன் என்று சொன்னார். இப்படி இவர் சொல்லியவுடனே மமதாதேவி
மனநடுங்கி இவர் ஏறிவரும்படியாய் நாம் கயிறு எங்கேவிட்டோம்
என்று எண்ணங்கொண்டு, சுவாமிகளே தாங்கள் ஏறிவரும்படியாக
நான் வீட்டின்பேரில் போட்டிருந்த கயிறு எதுவோ, அதனைக் காட்ட
வேண்டுமென்று கேட்டாள், காட்டுகிறேன் வாவென்று வீட்டுக்கத
வைத்திறந்துகொண்டு துளசிதாசர்செல்லும்போது மமதாதேவி கையி
ல்தீபம் பிடித்துக்கொண்டு கூடவேவந்தாள் தாசர் இக்கயிறுதான்
என்று காட்டினார். அப்போது மமதாதேவி தீபத்தைச் சமீபமாகக்
கொண்டுவந்து பார்த்தபோது நெடிதாகிய பெரும்பாம்பைக்கண்டு என்
நாயகோத்தமரே, தாங்கள் கயிறென்று தங்கள் கையினால் இப்பாம்பின்
தலையைப்பிடித்தபோதும் காமமாகிய அக்கினிஜ்வாலை எரிகின்ற கொ
டும்புகைமூட்டத்தால் உம்முடைய அறிவுமுழுதும் அமிழ்ந்துபோனீர்*
௰௧. என்னையகரோ, தேவராஜனாகிய இந்திரன் அகலிகையின்மீது மோகங்
கொண்டு செய்த அகிருத்தியத்தால் ஒருகாலத்திலும் நீங்காத பேரவ
மானத்தையடைந்திருப்பதையும் பத்துத்தலைகளையுடைய இராவணன்
சீதாதேவியின்மேல் மோகங்கொண்டு தூக்கிக்கொண்டுபோய்ச் சிறை
யில்வைத்தமையால் அவன் சகோதரர் புத்திரர் மித்திர களத்திரங்க
ளோடும் நாசமாய்ப்போனதையும் தாம் அறிந்திலீரா இந்தப்பாம்பை
நீர் பிடித்தபோது இது உம்மைத் தீண்டியிருந்தால் இந்நேரம் என்னபிர
மாதமாகமுடிந்திருக்கும் பிராணபதே உள்ளேவாருங்களென்று அழைத்
துக்கொண்டு சென்று தானிருக்கும்படியானஅறைவீட்டிற்குள் ஆசனம்
போட்டு அதன்மேல் வீற்றிருக்கச்செய்து விற்பத்தியிலும் நித்தியாநித்தி
யங்களைஐயமறவுணர்ந்த கியானத்திலும் மிக்கவல்லமையுடைய மமதாதே
௰௨. விஇனிமையான வார்த்தை சொல்லத்தொடங்கினாள்* பிராணநாயகரே,
மாதர்கள் விரகமாகிய காமக்கடலிலே மூழ்கின புருடர்கள், துன்பமாகிய
சமுத்திரத்திலே மூழ்கி எக்காலும் நீங்காத பெருங்கஷ்டத்தை அனுப
விப்பார்கள். பெண்கள் மாயை மகாகொடியது. எப்படியெனில், பஞ்
சபூதங்களில் ஒரு பூதமாகிய நெருப்பு தன்னைத்தொட்டால் மாத்திரம்
சுடும். காமாக்கினி அப்படியல்ல, விலகித் தூரப்போகப்போக மிக
வும் சுடும். விஷமானது தன்னைப் புசித்தவர்களையே கொல்லும். கா
மமானது கண்ணால் பார்த்தவுடனே கொல்லும். மேலும், ஸ்திரீமோ
கம் புருடர்கள் ஜீவனைப்பிடிக்கின்ற மாயவலை. பிராணநாயகா, இந்த
த்தேகமோ இப்போதொழியுமோ, எப்போதொழியுமோ, தெரியாது
நிலையில்லாத வாழ்வு உண்மையாகக் காணப்பட்டவைகளெல்லாம் அழி
ந்துபோகும் ஆகையால் தாங்கள் என்னிடத்திலேகொண்ட விருப்ப

தால் பிரக்கியாபங்கமடைந்து இன்னது செய்கிறோமென்பதைக்கூடத்
தெரியாமல் மயக்குகின்ற இந்தச்சிற்றின்ப இச்சையைவிட்டு ஒருகாலத்
திலும் அழிவில்லாதிருக்கின்ற நித்திய பரப்பிரம வஸ்துவான கவுத்துவ
ரத்நாபரணமணிந்த ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் திருவடிக்கன்புபூ
ண்டு பேரின்பசாகரத்தில் எக்காலும் ஆடும்படியாகவும் அவருடைய
நாமசங்கீர்த்தனமிர்தத்தை உண்டு களிக்கும்படியாகவும் தாங்கள் அன்பு
௰௩. கூர்ந்தருளவேண்டும்* இனி இந்தப் பெண்மோகத்தை விட்டுவிடுமெ
ன்று மமதாதேவி மொழிந்தாள். இவ்விதமாகத் தமது பாரியார் கூறிய
வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் துளசிதாசர் அவர்களுக்கு உண்
மைஞானோதயமாயிற்று. உடனே அற்புதமான இராகவமூர்த்தியின்
பாதங்களைத் தமதிதயத்தில் நிலைபெறச்செய்து மனங்களிகூர்ந்து பூரண
மதிக்கொப்பாகிய அழகிய முகத்தையுடைய தன் மனைவியான மமதா
௰௪. தேவியைப்பார்த்து இவ்விதம் சொல்வதானார்* ஏ! மமதா, அறியாமை
யினாலே அக்கினியிலேபோய் விழுகின்ற குழந்தையைப் பெற்ற தாயா
னவள் கண்டு இரங்கி அன்புடனே அதிவேகமாக ஓடிச்சென்று அந்நெ
ருப்பில்விழாமற்றாக்கி எடுத்து அக்குழந்தை ஜீவனுக்கு ஹானிநேரிடா
மல் இரட்சித்ததுபோல மன்மதன் எய்யும் பாண உபாதையால் யான்
மதிமயங்கிக் காமமாகிய அக்கினியில்வீழ்ந்து இறந்துவிடப்போன என்மீ
து நீகருணைகூர்ந்து அதிதீவிரமாக உனது உபதேசமொழிகளால் விழா
தவண்ணம் எடுத்து என்னை இரட்சித்தருளிய உனக்கு யான் பிரதியுப
காரம் என்னசெய்யப்போகிறேன் எனக்கு நீ பாரியாள் அல்லள். என்
௰௫. னைப்பெற்ற தாய்க்கொப்பாவாய்* என்று புகழ்ந்துகொண்டு மமதா
தேவியினுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரஞ்செ
ய்து எதிரேநின்று நான்கொடிய மரணதுக்கத்தில் நின்று விலகி மோ
க்ஷாநந்தத்தையடையும்படியாய் உபதேசித்த பரமகுருவாகையால் உங்
களுக்கு நான் பணிதலும் புகழ்தலும் செய்யும் சேடனேயல்லாது வேற
ல்லேனென்று தோத்திரஞ்செய்து கொண்டாடி இப்பிரபஞ்சத்தில்
எனக்குத் தாங்கள் செய்த உபகாரத்தைப்போல என்னையீன்ற மாதா
பிதாமுதலானவர்களும் செய்யவில்லை என்று கூறி, துறவறத்தையடை
யத் துணிவுபூண்டு மிக்க எண்ணத்தோடு வீட்டைவிட்டு நீங்கி வெளி
௰௬. ப்பட்டு* பெரிய ஆரணியத்தில் பிரவேசித்துத் தெய்வீகமான கங்கா
நதியில் ஸ்நாநம்பண்ணிக் கொடிய பாவசம்பந்தங்களெல்லாம் தீர்ந்து,
பூர்வக்கியானந்தோன்றித் தன்னை வன்மீகரிஷியென்று தீர்க்கமாக உண
ர்ந்து, ஓகோ நான் காமாதுரனாய் பிரவஞ்சமயக்கத்தில் இப்படி மூழ்
கிப்போனேனே இதென்ன பைத்தியமென்று நினைத்து அவற்றில் மிக்க
௰௭. வெறுப்புற்றுத் தெளிவுள்ள விவேகத்தையடைந்து* சர்வலோகநாய
கரும் சர்வபரிபூரணருமான ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் பூவுலகத்
தில் பாசபந்தத்தில் அகப்பட்டு இருவினைக்கீடாகி யுழலுகின்ற சடமூ
டர்களுடைய கர்ம்மங்களெல்லாம் நீங்கும்படி நீ அவதரித்து, அவர்கள்

நெஞ்சாகிய பூமியை உன்னுடைய போதமாகிய கருவியால் சமமாகச்
செவ்வை செய்து எனது பக்தியாகிய வித்தை அந்நிலத்தில் விதைத்து
அது விளைந்த பலத்தை அவர்கள் அனுபவித்து அவர்கள் எக்காலமும்
சுகஜீவர்களாயிருக்கும்படி செய்யென்று எனக்குக்கட்டளை கொடுத்தரு
ளியபடி நான் அவர்கள் தோஷநிவாரணமாகும்படி செய்யாமல் காமசமு
த்திரத்தில் மூழ்கினேனே, சீ! சீ! இந்தத் தோஷம் என்னைவிட்டு நீங்
௰அ. கும்படியான காரணம்செய்வேனென்று தனக்குள் நினைத்து* சூரி
யோதயகாலத்தில் எழுந்து சென்று நீரோடுகின்ற நதியில் ஸ்நாநம்செ
ய்து நித்தியகருமங்களையெல்லாம் அதி தீவரமாக முடித்துக்கொண்டு
வந்து அன்னமுண்பதை நீக்கி விருக்ஷங்களிலிருந்து காய்ந்துதிர்ந்த சரு
குகளைப்புசித்து தம்முடைய நெஞ்சில் ஸ்ரீ ராகவமூர்த்தியை நிலைபெறச்
செய்து அவர் திருவடியில் கண்களையும் மனதையும் லயப்படுத்தி வா
யில் இராமநாமத்தைச்சொல்லி ஜெபித்துக்கொண்டு அசைவற்ற ஒரு
௰௯. தன்மையராய் அருமையான தவஞ்செய்துகொண்டிருந்தார்* இவ்வித
மான கடினதவஞ்செய்யுங்காலத்தில் தினந்தோறும் கமண்டல ஜலத்தி
னால் கால்கை முதலானவைகளையும் சுத்திசெய்துகொண்டு ஜலக்கரை
யிலிருந்து திரும்பிவரும்பொழுது கமண்டலம் நிறைய ஜலமொண்டு
கொண்டு வந்து தாம் வீற்றிருந்து தவம்புரிகின்ற விருக்ஷத்தினடியில்
௨௰. நாள்தோறும் ஊற்றிக்கொண்டுவந்தார்* இப்படி ஒரு கணப்போதாவ
து இராமநாமத்தைவிடாது ஜெபித்துத்தமது தபநிலைமையினின்று மனம்
கொஞ்சமாவது கலையாததன்மையராய்ப் பன்னிரண்டு வருடம் பூரண
மாகச்செய்தார். துளசிதாசர் இருந்து தவஞ்செய்கின்ற விருக்ஷத்தில்
எப்போதும் குடியாயிருக்கின்ற ஒரு வேதாளமானது தாசர் நாள்தோ
றும் அந்த மரத்தடியில் ஊற்றப்பட்ட ஜலத்தை நித்தமுங்குடித்துத்
தாகசோஷையால் வருந்தாமல் சுகமாக இருக்கின்றதாகையால் தாசர்
மீது மிகுந்த சந்தோஷம்பூண்டு ஒருநாள் பயங்கரத்தைத்தருகின்றகோ
௨௧. ரமான தன் நிஜவடிவத்தோடு* துளசிதாசரவர்கள் நேராகவந்துநின்று
இருகரங்களையுங்கூப்பிப்பணிந்து உத்தமதபோதனராகிய மஹானுபாவ
ரே, யான் தங்களிடத்தில் கொண்டிருக்கின்ற மிகுந்த பிரியத்தினால் உங்
களுக்குவேண்டுமான ஒரு நன்மையான வரங்கொடுக்க விரும்பித் தங்
கள் நேத்திரங்களுக்குத் தெரியும்படியாய் எதிராகவந்தேன் என்றது.
அச்சொல்லை உணர்ந்ததாசர் அந்த வேதாளத்தை நேராகப்பார்த்து*
௨௨. எனக்கு நீ வரங்கொடுக்கவேண்டுமென்கின்ற இச்சையுடனே எனக்கெ
திராக இவ்விடத்தில் வந்துநின்று பேசுகின்ற நீ யாரோ, யாதுகாரண
த்தால் வலியவந்தாயோ நாம்தெளிவாக உணரும்படியாய் உண்மையாகச்
சொல்லென்று தோஷமில்லாத தபசீலராகிய தாசர் கூறினர். அப்போ
து அந்தவேதாளமானது பயமில்லாமல் மிகுந்த சாந்தமாக மறுமொழி
௨௩. கூறுகின்றது* உத்தமமான தபோதனரே நான் பைசாசகணங்களில்
ஒரு வேதாளம், இந்த விருக்ஷத்திலே நெடுங்காலமாக வாசம்பண்ணிக்

கொண்டிருக்கிறேன் எங்களுக்கு ஆறு, குளம், ஏரி, கிணறுகளிலுள்ள ஜலத்தைக் குடிக்கும்படியாய் விதியில்லை, அண்ணாந்து வாயைத்திறந்து ஜலமருந்தும்படியாக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மழைபெய்யுங்காலத்தில் போதுமானவரையிலும் குடிப்போம் மற்றப் பருவங்களில் எல்லாம் நாங்கள் தாகத்தினால் மிக்க வருத்தமடைவோம் இதில் நான் தாகத்துக்கு ஜலம் அகப்படாமல் மிக வெதும்பிச் சரீரமெலிந்து
உச. போனேன்* அப்பேர்ப்பட்ட பெருந்தாகப்பிணியால் வாடி வருத்தப்பட்டுக்கொண்டிருந்த நான் தினந்தோறும் நல்ல மதுரமான சுத்தஜலம் சாப்பிடும்படியாகப் பன்னிரண்டு வருடமாய்க்கொடுத்துத் தாகத்தைத் தீர்த்து அத்துன்பத்தை நீக்கி யிரட்சித்தீர்கள் தாங்கள் ஆகையால் உம்மிடத்தில் எனக்குமிகுந்த பிரியமும் தயையுமுண்டாகி உமக்குப் பிதி உபகாரம் செய்யவேண்டும் என்று கருதியே இப்போது நீர் பிரத்தியக்ஷமாய்க் காணும்படியாய் உமக்கெதிராக வந்து நிற்கிறேன். உம்முடைய உள்ளத்தில் என்னவரம்பெறவேண்டுமென்று நினைத்துத் தவஞ்
உரு. செய்கின்றீரோ அதைச் சொல்லும் இப்போதே கொடுக்கிறேன்* என்பதாய் வேதாளமானது மிகப் பிரியத்துடன் மொழிந்த வார்த்தைகளை எல்லாம் தமக்குச் சமானம் வேறொருவருமில்லாதவரும் பரிசுத்தருமாகிய துளசிதாசர் அவர்கள் கேட்டு இதென்ன புதுமையென்று தமக்குள் ஆச்சரியமடைந்து தம்முடைய மனதில் எவ்வளவும் சம்மதமில்லாதவராய் நின்றுயிருக்கின்றது. "கருடதரிசனம்பண்ணப்போனவனுக்குக் கா
உசா. கதரிசனம் கிடைத்தாற்போலும்*" "கற்பகவிருக்ஷத்தைக் காணவேண்டுமென்று நினைத்தவருக்குக்கள்ளிமரமானது எதிர்ப்பட்டாற்போலும்," "புண்ணியத்தை அபேக்ஷித்தவனுக்குப் பாவம் சம்பவித்தாற்போலும்," "அமிர்தத்தைச்சாப்பிடவேண்டுமென்று தேடிவந்தவனுக்குக் கள்ளுக்கி
உஎ. டைத்த தன்மையைப்போலும்*" ஒருகாலத்தும் அழிவில்லாதபரப்பிரமவஸ்துவாகிய ஸ்ரீ ராமச்சந்திரப்பிரபுவைத் தரிசிக்கவேண்டுமென்கின்ற ஞானத்தையுடையவனாக இவ்வாரணியத்திலிருந்து அன்னமாகாரமில்லாமல் தவஞ்செய்துகொண்டிருக்கின்ற எனக்கெதிராக ஒரு வேதாளம் வந்து நிற்கின்றதே; இதற்கு யான் என்னசெய்வேனென்று யாவரும் மதிக்கும்படியான குணசீலராகிய துளசிதாசர் மிகுந்த கவலையடையும் தருணத்தில், அந்தப் பைசாசானது தவத்திற்சிறந்த மகானுபாவரே, என்னிடத்திலே உமக்கு வெறுப்புண்டாகியது என்னகாரணமென்று
உஅ. சொல்லத்தொடங்கியது* உம்மை என்னுடையவுள்ளத்தில் மிகுந்த கனவானென்றும், ஞானவானென்றும் உண்மையாக எண்ணியிருக்கின்றேன் என்னை நீர் எப்படியாக மதித்திருந்தபோதிலும் என்னுடைய குற்றமில்லாத யோக்கிதைக்குத் தகுந்தபடியாக மேலான ஒருவரம் கேளும் அப்பேர்ப்பட்ட வரத்தைக்கொடுக்க நான் சித்தமாயிருக்கிறேன். ஆனால், என்ன ஒரு பிசாசு எவ்வளவு அற்பவஸ்து இதாவது நமக்கு வேண்டிய வரம்கொடுக்காவது என்று என்னைக் கேவலமாக நினைக்க

வேண்டாம். ஏனென்றால், வாசனைபொருந்திய மேலான புட்பமாலை
தொடுக்கவேண்டுமென்றால், "தாழ்வாகிய நாரல்லாமல் ஆகமாட்டாது"
என்பதுபோலும், "ஓட்டைப்பானையிலே சர்க்கரையிருக்கும்" என்ப
துபோலும், என்னைத்தாங்கள் அவ்வண்ணமாகவே நினைத்துக்கொள்ள
௨௯. வேண்டியது* என்று வேதாளமானது சொல்லிய வார்த்தைகளைக்கே
ட்ட துளசிதாசரவர்கள் நல்லது வேதாளமே, எனக்கு நீ பிரியமாக வர
ங்கொடுக்கவேண்டுமென்று எனக்கெதிராக வந்திருக்கின்றேனென்று
கூறினாய் ஆகில் இப்போது நான் கேட்கிற வரத்தை நீ கொடுக்கவேண
டும் அது எதுவென்றால் வாசனைபொருந்திய துளபமாலையணிந்த ஸ்ரீ
ராமபிரானுடைய தரிசனம்கிடைக்கும்படியான வரமொன்றைத் தவிர
வேறொன்றிலும் எனக்குப் பிரியமில்லையென்றார். இந்த மொழியைக்
கேட்ட வேதாளமானது நின்ற இடத்தைவிட்டு விலகி, ஒதுங்கி மிகு
௨௰. ந்த பயமடைந்தது* அப்படித் தூரவிலகிநின்ற பூதமானது அநாதி
வஸ்துவும் ஆதிமூலப்பொருளுமாகிய தேவாதிதேவனைக் காண்பிக்கும்
படியான வல்லபம் எனக்கில்லை. ஆயினும், அப்பொருளைத் தங்களெ
திராக வரும்படியாய்ச் செய்யத்தக்க சிறந்த தன்மையுடைய பரிசுத்த
குண தேவனை நீர் தெரிந்துகொள்ளும்படியாகப் பின்வாங்காமல் செய்
வேனென்று கூறியது. உடனே துளசிதாசருக்கு மிகுந்த விருப்பமு
ண்டாகி அப்படி என்னுண்டவனைக் காண்பிவிக்கும்படியான நற்குண
திசயத்தையுடையவனை எனக்குத் தெரிவிக்கவேண்டியது. ஆகையால்,
௩௧. அவராரென்று வினவினார்* அப்போது வேதாளமானது, வாய்வுதே
வனுடைய புத்திரராகிய மாருதிராஜனென்றது. உடனே துளசிதா
சர், குற்றமில்லாத அநுமந்தர் எவ்விடத்திலிருக்கின்றார் நான் விசாரித்
துக்கொண்டு அவரிடத்தில் சேரும்படியாக அதிவேகமாகச் சொல்லெ
ன்று கேட்டார். அப்போது வேதாளமானது மகாதபோதனரே, தா
ங்கள் தினந்தோறும் சென்று கேட்கின்ற இராமாயண கதாபிரசங்கம்
௩௨. செய்கின்ற புராணீகருக்கு எதிராக* கதைகேட்க வருகிறபேர்களுக்
கெல்லாம் முன்னதாகவே வந்திருந்து கதைகேட்டுச் சந்தோஷத்துடன்
போகிறபேர்களுக்கெல்லாம் கடையில் ஆநந்தபரிதராய்ப் போவார். சிர
சிலே குல்லாவைத்தரித்தும், சரீரத்திலே கிழிந்த கந்தைவஸ்திரத்தைப்
போர்த்திக்கொண்டும், கையிலே ஓர் தடியைப்பிடித்தூன்றிக்கொண்
டும், இடையிலே பஞ்சகம்வைத்த வேஷ்டியை உடுத்திக்கொண்டும்
௩௩. மகா விருத்தராய் வளைந்த உடலுடனே செல்லுவார்* இப்படிக் கிழ
ப்பிராமணராகப்போகின்ற அவரைத் தெரிந்துகொள்ளும் என்றுகூறி
வேதாளம் மறைந்துபோயிற்று. அப்பொழுது ஸ்ரீ ராமமந்திரத்தைச்
சதாநினைவிற்கொண்டு தபோநிலையாய் நிற்கின்ற தாசரவர்கள் ஆச்சரிய
மும் சந்தோஷமுமடைந்து அன்றுநீங்கிய மறுநாள் தம்முடைய நித்தி
யநேமங்கள் தபஜெபங்கள் எல்லாவற்றையும் கொஞ்சம் முன்னதாகவே
௩௪. முடித்துக்கொண்டு * கதைகேட்க வருகிறபேர்களுக்கெல்லாம் முன்

னதாகவே கதைசொல்லுமிடத்திற்குப் போய்ச்சேர்ந்து வேதாளம்சொ
ல்லிய அடையாளத்தின்படி ஆஞ்சநேயர் கிழப்பிராமண வடிவத்தோடு
எல்லாருக்கும் முன்னதாகவந்து புராணீகருக்கு எதிரேபோய் உட்கார்
௬௫. ந்ததையும் பார்த்து* அன்று ராத்திரி புராணஞ்சொல்லி முடிகிறவ
ளையிலும் இருந்துகேட்ட ஜனங்களெல்லோரும் போயினபின்பு வாய்
வுபுத்திரராகிய ஆஞ்சநேயர் கடைசியில் தடியையூன்றிக்கொண்டு மெ
ல்ல மெல்லச் சென்றார். அப்பொழுது துளசிதாசர் இவர் எவ்விடம்
போகின்றாரோ நாம் அவ்விடம் போகவேண்டுமென்று இவரும் மிகுந்த
சந்தோஷத்துடன் பின்றொடர்ந்துபோயினர். போனவர் மகா பரிசுத்
௬௬. தரான வாய்வுபுத்திரருடைய* செந்தாமரை மலர்போலும் திருவடி
களிலே விழுந்து பணிந்து இரண்டு கரங்களினாலும் அப்பாதங்களைக்
கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஐயனே! எனக்கு அருள்செய்யவே
ண்டுமென்றார். அப்போது ஆஞ்சநேயர், ஓய் பிராமணோத்தமரே
நீர் என்னுடைய் காலைப்பிடித்துக்கொண்டீரே; இது ஞாயமா, இது
பிராமண தருமமா என்ன தகாதகாரியம்செய்தீர் விடும்! விடும்! எ
ன்றார். அப்போது துளசிதாசர் அடியேன்செய்த தபோபலத்தால்
தங்களுடைய பாதங்களைப்பிடிக்கலானேன். தாங்களோ, ஸ்ரீ ராகவ
மூர்த்தியினுடைய திருவடிகளை சதாதியானிக்கின்ற தூதராகையால்
நான் பிடித்தேனென்று மறுபடியுமொருதரம் விழுந்து நமஸ்கரித்தார்*
௬௭. அப்பொழுது வேறொருவருமில்லாத தனியிடத்தில்* நின்ற அனு
மார் இவன் ஸ்ரீராகவபிரானுடைய சரித்திரங்களை இராமாயணமென்று
பெயரிட்டுச்செய்த வன்மீகரிஷியென்றுணர்ந்து மிகுந்த பிரியத்துட
னேகொண்டாடிக் கட்டித்தழுவி சந்தோஷித்து உத்தமகுணசீல முனி
௬௮. வனே, உமக்கு வேண்டியதைச் சொல்லுக வென்றார்* மகானுபா
வரே, தாங்கள் எப்போதும் சந்நிதானத்திலிருந்து பணிவிடைசெய்து
ஆனந்தமடைகின்ற ஸ்ரீராமபிரானுடைய தரிசனையை அடியேன் காண
வேண்டுமென்று அதிக ஆவல்கூர்ந்திருக்கின்றேனென்று துளசிதாசர்
கூறியபொழுது அனுமார், மகாலெட்சுமிகாதலோடு தங்கியிருக்கி
ன்ற மார்பினையுடைய ஸ்ரீராகவமூர்த்தி, உன்கண்களால் நீ காணும்படி
௬௯. யாக நீயிருக்கின்ற இடம்தேடிக்கொண்டு சந்தோஷத்தோடு* வரும்படி
யாகச்செய்வேன். என்று மொழிந்து துளசிதாசர் கண்ணுக்குப்படா
மல் மறைந்து சென்று ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியினுடைய திருவடிகளு
க்குச் சமீபத்தில் நின்று மிகுந்த அன்புடனே வந்தனைசெய்து பதித
பாவனா, பக்தவச்சலா, அனாதிவஸ்துவாகிய ஸ்ரீராகவபெருமானே; தங்க
ளுடைய பாதாரவிந்தங்களிடத்து மிகுந்த காதலோடுங் கூடிய வன்மீக
ரிஷி பூவுலகில், ஓர் மறையவனாகத்தோன்றி இருக்கின்றனன். அவன்
தங்களைத் தரிசிக்கவேண்டுமென்று பெரிதாவல்கொண்டு வாடுகின்ற
௭0. னன்* ஆதலால் அவனுக்குத் தரிசனை கொடுத்தருள்வது தங்களுடைய
கிருபை யென்று அனுமந்தர் மொழிந்தவுடனே, நல்லது அப்படியே தரி

சலம் தருகின்றோமென்று கூறி, ஸ்ரீராகவபெருமான் ஒரு துலுக்கனுகவ டிவெடுத்து சிலகுரங்குக்கூட்டங்கள் தம்மைச்சூழ்ந்து வரும்படியாக, வில்லைக்கையிலே பிடித்துக்கொண்டு துளசிதாச ருடையநினைவு ஈடே
௬௧. றும்படியாக, அவருடைய ஆசிரமத்திற்கு நேராக* அவ்வாரணியத்து மார்க்கத்திலேவந்து அவனைப்பாராமலும், அங்குநிற்காமலும்,வழிப்போக்கர் போவதைப்போல வழிபற்றிச் சென்றார். அப்பொழுது துளசிதாசர் யாரோ ஒரு துலுக்கன் வளைவாகிய ஒருவில்லைக்கையிலே பிடித்துக் கொண்டுகோணலாகிய வடிவுள்ளகுரங்குக்கூட்டங்கள் சுற்றிக்கொண்டு வரும்படியாகப் போகின்றானென்றெண்ணம் உற்று ஓர் வந்தனைவழிபாடும் செய்யாமல் தமது தியானத்திலே இருந்தார். பின்பு மாருதிராஜ
௬௨ னும் துளசிதாசரிடத்திற்கு வந்து பெரும் பொருளாகிய * உமது ராகவமூர்த்தியைச் சந்தோஷகரமாகத் தரிசனைசெய்தீரா வென்றுகேட்டார். அப்போது தாசர் என்னுடைய ஆண்டவர் இங்குவரவேயில்லை ஆனால்ஒருதுலுக்கன் சில வானரகூட்டங்களுடனே இந்த வனத்தின்மார்க்கமாகப் போனானே யல்லாமல் வேறொருவரும் வரவில்லை யென்று சொன்னவுடனே அனுமார், முனிவரே; "எதிரேவந்தகாமதேனுவைஓர்
௬௩. ஆடென்று நினைத்ததுபோல * ஆனது உம்முடைய அபிப்பிராயம்" என்று சொல்லியவுடனே ஆகா! ஆதிமூலப்பொருளாகிய ராகவமூர்த்தியா துலுக்க வேடமாக வந்தார். நான் அறியாமல்போனேனே என்று உள்ளத்திற் சஞ்சலம் பூண்ட துளசிதாசர் ஆஞ்சனேயனைவணங்கி நோக்கிப்பூர்வம் நாரதமுனிவர் எனக்குச் சொல்லியபடி அயோத்தியிலிருந்து அரசாக்ஷி புரிந்த தசரத சக்கிரவர்த்தியினுடைய புத்திராகிய ஜானகிரமணன் நெடிதாகிய கோதண்டமென்கின்ற தனுசையுடைய கையன் என்பதாய் அம்முனிவர் சொல்லியபடி தம்பியாகிய இலட்சுமணப்பெருமாளோடும் கூடி எனக்கெதிராக சீதாபிராட்டியுடனே என்னகாரணத்தினாலே வரவில்லை அல்லாமலும் துலுக்க வடிவமெடுத்துக்கொண்டு வந்தாரே பாவியாகிய நான் அவருடைய நிஜசொரூபத்தைப்பார்த்தால் அவருக்குக்குறைவு நேரிடுமென்றோ அல்லது நான் அவரைத்தெரிந்து கொள்வதையும் தெரியாது மயங்கிப்போவதையும் பரிட்சிப்பதற்காக வந்ததென்றால் அவருடைய அதிர் ஏகமாயை அறி
௬௪. வதற்கு யான் சக்தனோ * ஆதலால் மாருதிராஜனே என்னுடைய சந்தேகம் தீரும்படி மூவரும் பிரத்தியக்ஷமாக வந்து தரிசனம் கொடுக்கும்படி மகா கீர்த்திபொருந்திய தாங்கள் கிருபைசெய்தருளவேண்டு
௬௫. மென்று மிகவுந்தோத்திரம் பண்ணினார் * வாயுபுத்திரராகிய அனுமார் துளசிதாசர் இவ்விதமாகச்சொல்லிய பொழுது மனமிரங்கி வன்மீகரிஷியே நீர் எவ்வளவும் மனதில் சந்தேகம் கொள்ளவேண்டாம் இராமச்சந்திரபிரபு உம்முடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவார் என்று, அவர்மனதிற்குத் தெளிவுண்டாகும்படியாகச் சொல்லி அவ்விடத்து நின்று மறைந்து தாமிருக்கும்படியான தலம்போய்ச்சேர்ந்து தம்மு

டைய மனதில் நிலையாய் நிற்கின்ற ராகவமூர்த்தியை அதியன்போடு
௪௬. துதிசெய்ய ஆரம்பித்தார் * நான்கு வேதங்களும் உம்மையறியாது மய
ங்குகின்ற அபலமூர்த்தியே ஓர் யானையானது ஆதிமூலப்பொருளே
யென்றழைத்தவுடன் அதற்கெதிராகவந்தவனே பூமிமுழுவதையும் எடு
த்துண்டவனே எங்குநிறைந்திருக்கின்ற பரமனே, சர்வகாரணகாரியமு
௪௭. மாய் விளங்குபவனே என்று தியானம் செய்தபோது * சீதாபதியாகிய
ஜெகதீசன் ஆஞ்சநேயருக்கு எதிராகவந்து ஏ அனுமானே இன்றைய
தினம் நீ என்னை அநேகவிதமாகத் தோத்திரம் செய்தாயே அது என்
னகாரணத்தினாலே தீவிரமாகச் சொல்லென்றார். அப்போது அனு
மார் ராகவமூர்த்தி பாதங்களை அதியன்போடு வணங்கி அஞ்சலியஸ்த
ராய் நின்று சுவாமின் தங்களுடைய திவ்விய சொரூபத்தைத் தரிசிக்க
௪௮. அபேக்ஷைகொண்டிருக்கின்ற தங்கள் பக்தனுக்கு எதிரே * தாங்
கள் மாறுவேடம தரித்துக்கொண்டு போனீர்களே அப்படிப்போ
காமல் நிஜரூபத்துடனே சென்று தரிசனை கொடுத்தருள வேண்டு
மென்று தமது சிரசின்மேல் இரண்டு கரங்களையும் தூக்கிக்குவித்துப்
பணிந்தார். அதனை யுணர்ந்த கண்ணபெருமான் சிறந்த அன்பினையு
டைய அனுமந்தா இது கலியுகமானபடியால் நிஜவடிவத்துடன் போவது
௪௯. கூடாதென்று கூறினார் அப்போது அனுமார் சொல்வதானார் * ஏ வன்
மீகரிஷியே நீ பூவுலகில் மானிடமாக அவதரித்து என்னுடைய நாமபக்
தியை விளைவியென்று தாங்கள் சட்டளைகொடுக்க அக்கட்டளைப்படி
நடத்த வந்திருக்கின்ற தோஷமில்லாத தங்கள் அன்பனுக்குத் தங்
கள் சொரூப தரிசனங்கொடுத்தால் அதனால் தங்களுக்கு என்ன
குறைவுவரும் என்றார் அப்போது ராகவபெருமான் சம்மதித்து
௫௰. அப்படியே செய்வோமென்று அந்தத் துளசிதாசர் ஆசிரமத்துக்கு *
சகோதரராகிய இளையபெருமாளும் பத்தினியாராகிய சீதாபிராட்டியா
ரும் கூடவரும்படியாய்க் கோதண்டமாகிய வில்லைக்கையில் பிடித்துக்
கொண்டு வந்தார். இப்படிச்சுவாமி வருவதற்கு முன்பாகவே அனு
மார் துளசிதாசரிடம் வந்து உம்முடைய பிரியம்போல இப்பொழுதே
௫௧. நிறைவேறுமென்று சொல்லியபொழுதே ஸ்ரீராகவமூர்த்தியும்வந்து தரி
சனை கொடுத்தருளினார் * வண்டுகள் சப்திக்கின்ற மணமலர்மாலைகள்
அணிந்த நவரத்தினகிரீடமும் பிரகாசிக்கும்படியான மகரகேயூரகுண்
டலங்களுடன் சொர்ணவஸ்திரமும் மிக்க வல்லமை யமைந்த கோத
ண்டமாகிய வில்லும் சாமளவர்ன்னமாகிய திருமேனியும் அற்புதமாக
விளங்குவதை அன்பராகிய துளசிதாசர் கண்குளிரக்கண்டு சாஷ்டாங்
௫௨. கமாக விழுந்து நமஸ்காரம் பண்ணினார்* உடனே ராகவமூர்த்தி தமது
பாதத்தில் பணிந்த அன்பராகிய துளசிதாசரைத் தமது மார்போடணைத்
து நன்றாகக்கட்டித்தழுவினார். அத்தருணத்தில் அனுமார் துளசிதாசரை
ப்பார்த்து நிர்மலமூர்த்தியாகிய எம்பெருமான். பெருமைபொருந்திய பிர
தாபசரித்திரத்தைமுன்பு இராமாயணமென்று நாமமிட்டுநீர் செய்ததன்

மையினாலே அநாதிவஸ்துவான பரம்பொருள் உம்மைப்பார்ப்பதற்காக
நீரிருக்குமிடந்தேடிக்கொண்டு வரும்படியான பெரும்பாக்கியத்தைப்
பெற்றீர் உம்மைப்போல ஜெகதீசன் தரிசனையை இக்காலத்தில் காண்ப
௫௩. வர்கள்யார் பிரபஞ்சத்தில்* இக்காலத்தில் மௌனம், யோகம், தவம், விர
தம், முதலானவைகளைத் தவறுதலில்லாமல் சாதனம் செய்தாலும் நிர்விக்
கினமாக அவைகள் நிறைவேறமாட்டா, ஆகையால் அவர்கள் பெருமானு
டையசரணங்களையடையமாட்டார்கள் அத்தொழில் சாத்தியப்படாமல்
போயினபொழுது அவர்கள் பட்ட கஷ்டமெல்லாம் வீணாய்ப்போகும்
ஆகையால் நீர் முன்னம் செய்திருக்கின்ற சீதாபதியினுடைய சரி
த்திரமாகிய ராமாயணமே எல்லாப்பதத்துக்கு மேலான சாயுச்சிய
பதவியையும் தரும் தகுதியையுடையது யாவரும் அதனையே திட
பக்தியோடு மனனம் செய்யும்படியாகச் செய்யும் என்று ஆஞ்சனேயர்
துளசிதாசருக்குக்கூறி பின்பு ஸ்ரீலட்சுமி பதியாகிய சின்மயபரமனைப்
௫௪. பார்த்து மிக்கவன்புடன் சொல்லுகின்றார்* தசரதசக்கரவர்த்தி
யின் புத்திரராகிய தாசரதே தாங்கள் மகிழ்கூர்ந்து பேரன்பிற்சிற
ந்த தங்கள் அடியவருக்கு இதோபதேசம் அருள்செய்யவேண்டுமெ
ன்று மிகவும் பிரார்த்தித்துக் கேட்டார். அப்போதுராகவமூர்
த்தி அன்புகூர்ந்து தோஷமில்லாத துளசிதாசருடைய சிரசின்மேல்
தமது கரகமலத்தைவைத்து அவருக்கு எல்லா ஞானநன்மைக
௫௫. ளும் அமையும்படியாக உபதேசித்தருளி மறைந்துபோயினார்* இந்த
ராமாவதாரமெடுத்து நாம் நடத்திய சரித்திரங்களையே உலகமுழுவ
திலும் பரவும்படியாக இவரைச் செய்யச்சொல்லுமென்று ராகவமூர்
த்தி அனுமாருக்குக் கட்டளைகொடுத்தபடியே அநுமார் துளசிதாசருக்
கறிவித்தார். அந்தக் கட்டளையை மலரகிதராகிய உண்மையான துள
சிதாசர் சிரசின்மேற்கொண்டு மேன்மையும் பரிசுத்ததன்மையும்பொரு
ந்திய காசிக்ஷேத்திரத்தையடைந்து நாபியங்கமலத்தையுடைய தேவாதி
தேவனதுமெய்யான இராமாயணத்தைப் பிரசங்கம்செய்யத்தொடங்கி*
௫௬. சர்வத்திரஜனங்களும் மிக்க நேமத்துடன் உறுதிகொண்டு ராமநாமமந்
திரத்தையே ஜெபம்செய்யும்படியாக உபதேசம் பண்ணி திரிவிக்கிரம
அவதாரமெடுத்த வாமனமூர்த்தியினுடைய திருவடிகளை ஒருகணப்போ
தாவது மறவாத சித்தமுடையவராய் மகாதபசீலராகிய துளசிதாசரிருந்
௫௭. தார்* அப்போது காசிப்பட்டணத்திலுள்ள மகாவிவேகவான்களும் வேத
சாஸ்திரமுணர்ந்த மறையவர்களும் துளசிதாசருடைய மிக்கஅன்புடை
மை அபாரபக்தி சீவகாருணியமுதலிய மாட்சிமையான தன்மையை உ
ணர்ந்து உயர்வாகவும் விசாலமாகவும் தபோதனர்கள் வசிக்கத்தக்க பரி
சுத்த ஸ்தானமாகவும் ஓர் அழகான மடங்கட்டுவித்து அந்த மடத்தில்
அவதாரமூர்த்தியான துளசிதாசர் அவர்களை எழுந்தருளியிருக்கும்படி
யாகச்செய்து சுவாமிகளும் மற்றும் அங்குவருகின்ற யாவர்களும் நாள்
தோறும் புசிப்பதற்கு வேண்டுவதான சாமக்கிரியைகளையெல்லாம்குறை

ருஅ. வில்லாமல் நிரம்பச்செய்து* சொர்ன்னத்தினுலும் வெள்ளியினுலும்
அநேகமான பாத்திரங்களும், செம்பு பித்தளை வெண்கலமாகிய லோக
ங்களால் வேண்டிய பாத்திரங்களும் சேர்த்து யாதொன்றும் குறைவில்
லாதுநிறைந்து விளங்குகின்ற அந்தமடத்தில் மகா தபோதனராகிய துள
சிதாசர் பிரமாணத்திலடங்காத ஜனங்களுடன் கூடிப் பந்தியிலிருந்து
ருகூ. புசித்துக் களிகூர்ந்திருந்தார்* இவ்விதமாகத்தாசர் நடந்து வருகின்ற
போது இவருடைய இணையில்லாத உண்மையான கீர்த்தி உலகமுழு
தும்பரவி நிரம்பியபடியால் பல தேசங்களிலும் உள்ள பக்திமான்கள்
எல்லோரும் தங்கள் தங்கள் பிரியத்துக்கிசைந்தபடி திரவியங்கள் பாத்
திரங்கள் அரிசி பருப்பு நெய்முதலிய சாமான்கள் காய்கறிவகைகள் கண்
ணபிரானுக்கு ஆபரணங்கள் ஆடைகள் பூசைக்குத்தகுந்த பாத்திரவ
கைகளும் மற்றும் மடத்துக்கு உபயோகமான வஸ்துகளெல்லாம் அனு
ப்பிக்கொண்டேயிருப்பார்கள். அவைகளோ அளவில் அடங்காவாம்*
சூய. தெய்வலோகத்தில் எந்தப் பருவகாலத்தில் எவ்வகைவஸ்துகள் விளை
யுமோ அவைகளே இருக்குமல்லாமல் மற்றைய பருவகால வஸ்துகள்
இராவாம். துளசிதாசரவர்கள் மடத்துக்கு கார்கால முதலான ஆறு
பருவகாலங்களிலும் உண்டாகிறகாய்கள், பழங்கள், புட்பங்கள் முதலிய
சூக. பொருள்களெல்லாம் குறைவில்லாமல் நிரம்பியிருக்கும்* வேதப்பிரா
மணர்கள் தாசரைத் தரிசிப்பதற்காக எப்போதும் வருவதும் போவது
மாயிருப்பதினுலும் குறைவில்லாத ஸ்ரீ அரிதாசர்கள் ஆவதற்குத் தா
சரவர்களிடத்தில் வந்து உபதேசம் பெற்றுக்கொள்பவர்களாலும் தாசர்
செய்யும் பஜனையைச் சிரவணம்செய்ய வந்து கூடுகிறவர்களாலும் பக
லிலும் இரவிலும் பந்திபந்தியாயிருந்து சாப்பிடுகிறவர்களும் சாப்பிட்
டுப்போகிறவர்களும் பின்னும் சாப்பிடவருகிறவர்களும் ஓய்வில்லாதிரு
ப்பதினுலும் பகற்காலத்திலும் இராக்காலத்திலும் மடத்தின் வாயில்க
சூஉ. ளிலுள்ள கதவுகள் சாத்துகிறதேயில்லை* மடத்தில் நிரம்பியிருக்கி
ன்ற பொருள்களை தங்கள் தங்களுக்கு வேண்டுமானவரையிலும் கொ
ண்டுபோகிறவர்கள் இல்லாத குறை ஒன்றையல்லாமல் எடுத்துக்கொ
ண்டுபோனல் வேண்டாமென்று தடுப்பவர்கள் ஒருவருமில்லை. ஒரு
பொருள் இல்லையென்று சொல்லுவதற்கு இடமில்லாமல் தனதானியாதி
சகல பொருள்களும் அம்பாரம் அம்பாரமாகக் குவிந்து நிரம்பி இருப்ப
வைகளுக்கு ஒரு கணக்குமில்லை, கட்டுக்காவலுமில்லை. இப்படி யிருக்
கையில், ஒருநாள் இராத்திரியில் இரண்டு திருடர்கள் மெள்ள மடத்
சூ௩. துக்குள்ளே புகுந்து* மடத்தில் பஜனை சாப்பாடுமுதலானவைகளெ
ல்லாம்முடிந்து தாசர்முதல் மடத்திலுள்ள பலபேர்களும் நல்ல நித்திரை
போகிறவரையிலும் அவ்விருவரும் மறைவாயிருந்து யாவரும் நித்திரை
போனதைத்தெரிந்துகொண்டு தங்கள் இச்சை எவ்வளவோ அவ்வள
வான பொருள்கள் தாங்கள் சுமந்துகொண்டுபோகத்தக்கவரையிலும்

எடுத்துக்கொண்டு வெளியேவருகிறபோது வாயிலில் இரண்டு காவற்
௯௪. சேவகர்கள் நிற்பதைப்பார்த்தார்கள்* பார்த்த திருடர்கள் இந்த வாயி
லின் மார்க்கமாக நாம் போகலாகாது போனேமேயானால் காவல் வீரர்
கள் பிடித்துக்கொள்வார்கள் ஆகையால் இவர்கள் கண்ணிற்படாமல்
வேறுவாயிலின்வழியாகப் போவோமென்று அங்கு நின்று திரும்பி மற்
றொரு வாயிலுக்கு வந்தார்கள். அந்த வாயிலிலும் முன் சொல்லிய
காவல் வீரர்கள் வில்லைவளைத்துப்பிடித்துக்கொண்டு விளங்கினார்கள்*
௯௫. அப்போது திருடர்கள் இவ்விடத்திலும் சேவகர்கள் காவலிருக்கின்ற
தென்று கண்டு மற்றுமுள்ள வாயில்கள் சாளரவழிகளெல்லாம் போய்
ப்பார்த்தார்கள். எங்கேபார்த்தாலும் அங்கெல்லாம் காவலாளர் நிற்ப
தைக்கண்டு அவர்களில்லாதவிடத்தைத்தேடித்திரிந்ததில் இராத்திரிநீங்கி
விடிகிறசமயமானபடியால் மகாவீரர்கள் நின்று காவல்செய்கின்ற தடை
௯௬. யினால் மிகவுமனமெலிந்து* மடத்துக்குள் ஓரிடத்தில்போயிருந்து நாம்
இருவரும் இந்த மடத்துக்குள்ளாக வரும்போது மகரகேயூர குண்டல
ங்களும் விட்டுவிட்டுப்பிரகாசிக்கின்ற நவமணி மகுடங்களும் நெடிதா
ன தனுசுகளும் விளங்கும்படியாய்க் காவல்செய்கின்ற வீரர்கள் இவ்வி
௯௭. டத்திலிருக்க நாம் பார்க்கவில்லையே இதென்ன புதுமையாயிருக்கிறது*
என்று யோசித்து நல்லது அவர்கள் காவற்சேவகர்தானே அல்லது
வேறே யாரோ காவற்சேவகராயிருந்தால் நம்மை விடாது கடிந்து பிடிக்
கவருவார்கள். அப்படி வந்தால் நாம் மடத்துக்குள் புகுந்துகொள்ளு
வோம் நம்மை நோக்காமலும் தடைசெய்யாமலும் இருப்பார்களானால்
வெளிப்பட்டுப் போய்விடுவோமென்று யோசித்துக்கொண்டு உள்ளே
யிருந்து வெளியேபோக வாயிலினிடமாகவந்தார்கள். அப்போது முன்
சொல்லிய காவல்வீரர்கள் இருவரும் இவர்களைச் சினந்துபார்த்து வில்
லைவளைத்து பாணங்களைவைத்திழுத்து இவர்கள்மேல் பிரயோகம்செ
ய்ய எத்தனித்ததையறிந்து பயந்து உள்ளே புகுந்துகொண்டார்கள்*
௯௮. இப்பொருள்களை நாம்திருடிக்கொண்டுபோவோமேயானால் காவற்சேவ
கர்கள் நம்மைத் தொந்தரவுசெய்து பிடித்துக்கொள்வார்கள் அப்போது
சிறைச்சாலையில் இருக்கவேண்டியதாகமுடியும். இப்பொருள்களையெல்
லாம் இம்மடத்திலே வைத்துவிட்டுப்போனேமேயானால் அப்போது
பயமில்லை சாதாரணமாகப்போகலாமென்று நினைத்துத் தாங்கள் எங்கெ
ங்கேயிருந்து பொருள்களை எடுத்தார்களோ அங்கங்கேஅப்பொ
ருள்களையெல்லாம் வைத்துவிட்டு இனி வெளியேபோவதற்கு எ
ன்னதடையென்று நினைத்து இரண்டுபேர்களும் வாயிலின்வழியாய்
௯௯. காவற்சேவகர்களுக்கு எதிராகவந்தார்கள்* அப்போதும் காவல்வீரர்
கள் இருவரும் இவர்களைப்பார்த்தவுடன் வில்லில் பாணத்தைவைத்து
இவர்களைக்கொல்வதற்கு எத்தனித்ததை இவர்கள்கண்டு மிகவும்பயந்து
அவ்விடத்தினின்று திரும்பி மடத்திற்குள்ளே புகுந்து என்ன செய்வோம்
பொருள்களைத் திருடிக்கொண்டுபோனபோது பாணங்களாலே எய்ய

ஆரம்பித்தார்கள் ஒரு பொருளையும் திருடாமல் இப்போது வெளிப்ப
ட்டுப்போகும்போதும் நம்மை வதம்பண்ணப்பார்க்கிறார்கள் எவ்வித
மாய் நாம் பிழைத்துப்போகப்போகிறோம் என்று இருவர்களும் மிகுந்த
௭௰. துக்கத்தோடே ஆலோசனைபண்ணி மெலிவடையும்போது* பொ
ழுதும் விடிந்துவிட்டது. அப்பொழுது எல்லோரும் எழுந்திருந்து
காலைக்கடனைக்கழித்து நித்தியநியமங்களை முடித்துக்கொண்டார்கள்.
துளசிதாசரவர்கள் நித்தியகருமங்களைமுடித்து ஸ்நாநம்செய்து ஸ்ரீகண
ணபெருமானுக்குப் பூசனைமுடித்து எழுந்து நமஸ்கரித்து மங்களார்த்தி
செய்து ஆனபின் சந்நிதானத்தைவிட்டு வெளியே ஓர்புறமாக வந்தார்.
அப்படி அவர்கள்வருவதை மகாகொடியர்களாகிய திருடர்கள்பார்த்துச்
௭௧. சமீபத்திற்சென்று அவர் பாதங்களில்விழுந்து பணிந்து* சுவாமிகளே
மகா பாவிகளாகிய நாங்கள்செய்த குற்றத்தைப்பொறுத்து இரட்சித்த
ருளவேண்டுமென்றார்கள். ஸ்ரீ ராகவமூர்த்தியின் பாதபக்தியில் சிறந்து
வாழ்கின்ற மகா தபோதனராகிய துளசிதாசரவர்கள் திருடர்களைப்பார்
த்து நீங்கள் யாரப்பா துன்பப்படவேண்டியகாரணம் என்னவென்று
கேட்டார். அப்போதவர்கள்செய்த காரணங்களைச்சொல்வதானார்கள்*
௭௨. சுவாமிகளே; எங்களுடைய வறுமையினாலே இவ்விடத்தில் திருடவந்
தோம், வந்த நாங்கள் எங்களுக்கு வேண்டுமான பொருள்களைத் திரு
டிக்கொண்டு வெளிப்பட்டுப் போகப்போம்பொழுது வில்லேந்திய கை
யினராகிய இரண்டுவீரர்கள் நாங்கள் எந்த வாயிலின்வழியாகப் போ
கப்போனாலும் எங்களை வெளியேவிடாமல் தடுத்துத் துன்பப்படுத்த
ஆரம்பித்தார்கள். ஆகையால், நாங்கள் மிகுந்த பயங்கரமடைந்து இவ்
௭௩. விடத்திலேயிருந்து துயரப்படுகின்றோம்* நடந்தகாரியம் இதுதான்
சுவாமியென்று தெரிவித்தார்கள். அப்போது சாந்தசீலராகிய
துளசிதாசர் தம்முடைய தோஷமில்லாத சீடர்களையெல்லாம்முறை
௭௪. யாக வரவழைத்து அவர்களைப்பார்த்துச் சொல்லுகின்றார்* உத்
தமர்களே, இரவிலும் பகலிலும் மடத்துக்குத் தொலைதூரங்களிலிருந்து
வருகிற பொருள்களும் வேண்டுமானவர்கள் மடத்திலிருந்து கொண்டு
போகின்றபொருள்களும் ஓய்வில்லாதிருப்பதால், இதுவரையிலும் யா
தொரு தடையுமில்லாமல் நடந்துவருகின்ற செயலுக்கு நேர் விரோத
மாக வாயில்களிலே காவற்சேவகர்களை நேமித்துவைத்தவர்கள் எவர்
௭௫. கள்* என்று கேட்டபோழ்து சீடர்கள் வணங்கி சுவாமிகளே
தங்கள் பாதசாக்ஷியாக வாயில்களில் காவற்காரர்களைநாங்கள் நே
௭௬. மிக்கவேயில்லையென்று தெரிவித்தார்கள்* அப்போது அங்கு நிற்
கின்ற திருடர்கள், சுவாமிகளே இவர்கள் எல்லோரும் ஒருமொ
ழியாகக் காவற்சேவகர்களை நேமிக்கவில்லையென்று சொல்லுகின்
றார்களே காதில் குண்டலங்களும் சிரசில் நவமணியிழைத்த கிரீடங்க
ளும் அழகான பீதாம்பரமும் அபாரமான விற்களும் விளங்கும்படியாக
நீருண்ட காளமேகத்துக்கொப்பான அதிசுந்தரவடிவத்தோடும் இன்னும்

வாயிலைவிட்டுப்போகாமல் இதோ இருவரும் நிற்கின்றார்கள் தாங்களே
௭௭. வந்து பாருங்கள் என்று சொன்னார்கள்* அப்போது தாசர் தமது சீட
ர்களோடு வாயிலுக்கு வந்துபார்த்தார். அவ்வாயிலில் இவருடைய
நேத்திரங்களுக்குத் தோற்றாமையால் மற்ற வாயில்களையும் பார்த்தார்.
அங்ஙனம் தோற்றாமையால் உயர்ந்த தபோதனராகிய தாசர் திருடவந்த
வர்கள் நிற்பதாகச் சொல்லுகின்றார்கள், நமக்கோ தோற்றவில்லை இதெ
ன்னவென்று ஆச்சரியமடைந்து தம்முடைய அடியார்களோடு சொல்லி
௭௮. யோசித்துத் துயரமடைந்து* கரியமேனியா, கருணாகரா, காகுத்தா,
கமலலோசனா, சானகிரமணா, சச்சிதாநந்தா, சர்வபரிபூரணா, சர்வாந்த
ரியாமி, பக்தபரிபாலனா, பாவனாதீதா, பரமதயாளா, பரந்தாமா, கிருபா
சமுத்திரா, கேசவா, ரிஷிகேசா, தேவாதிதேவா, தீனதயாளா, கோபா
லா, கோவிந்தா, ஏ ; வாசுதேவா, கிருஷ்ணா நீர் இப்போது செய்தது
நியாயமா மடத்திலே திருடர்புகுந்து திருடிக்கொண்டு போகின்றார்க
ளென்று தாங்களும் தங்கள் தம்பியாகிய லெட்சுமணப்பெருமாளுமாக
வந்து வில்லைக் கையில்தரித்துக்கொண்டு மடத்து வாயிலில் காவல்வீ
ரர்களாக திருடர் வெளியேபோகாமல் தடைசெய்து நின்றீரோ தா
ங்கள் ஆயர்பாடியில் வீடுவீடாகப்புகுந்து கணக்கில் அடங்காத வெ
ண்ணெய் திருடித்தின்றீரோ தேவா ; நீர் திருடரல்லவா ! உமக்கொரு
நியாயம் மற்றவர்களுக்கொரு நியாயமா சுவாமி உம்மைத் திருடர் அல்
௭௯. லவென்று மதிக்க ஏதுவுண்டா* பரமகாருண்ய நித்யவஸ்துவே தங்
களுடைய செந்தாமரை மலர்போன்ற திருப்பாதங்களை நான்குவேதங்
களும் தங்கள் சென்னிகளாலே தாங்குவதற்குத் தங்களுடைய யோக்கி
யதை போதாதென்று வெட்கப்படுகின்றதே அத்தன்மையவாகிய பரிசுத்
தமும் மிருதுவும்பொருந்திய பாதங்கள் வருந்து[illegible]ாக வந்து இந்த
மடத்துவாயிலில் நின்ற தங்களுடைய அவ்வழகிய பாதங்களுக்கு நாயி
னேன் என்ன பிரதியுபகாரம் பண்ணப்போகிறேன் என் ஆண்டவரே*
௮௦. என்று அநந்த விதமாகத் தோத்திரஞ்செய்து அப்போது எதிரில் நின்ற
திருடர்கள் மீது எவ்வளவும் கோபங்கொள்ளாமல் மிகுந்த கிருபை
யோடு அவர்களைப்பார்த்து அப்பா நீங்கள் இருவரும் உங்களுக்கு வே
ண்டுமான பொருள்களை யெடுத்துக்கொண்டு கொஞ்சமாகிலும் அஞ்
௮௧. சாமல் உங்கள் கிரகம்போய்ச் சேருங்களென்று கூறினார்* அப்போது
திருடர்கள் துளசிதாசர் அவர்களைப்பார்த்து சுவாமிகளே இவ்வுலகத்
திலுள்ள சாதுஜனர் என்று சொல்லுகின்ற பரமபாகவதர்களுக்கெல்
லாம் முதன்மையாகிய தங்களுடைய கிருபையால் மகாபாவிகளாய் ஜெ
னனகாலந்தொடங்கி இதுபரியந்தம் அநேகருடைய பொருள்களையெ
ல்லாம் தீங்குசெய்து அபகரித்துக்கொண்ட திருடர்களாகிய நாங்கள்
ஆதிமத்தியாந்த ரஹிதரையும் பரப்பிரமமாயும் பரஞ்சோதியாயும் விளங்
குகின்ற ஸ்ரீதேவாதிதேவனை குறைவில்லாமல் எங்களுடைய கண்க
௮௨. ளால்கண்டு தரிசனம்பண்ணினோம்* பரிசவேதிக் கல்லானது எந்தவி

டங்களில்பட்டாலும் அவைகளையெல்லாம் குற்றமில்லாத சுவர்ணமாய்
விளங்கச்செய்வதோ அதற்கொப்பாக தங்களுடைய சரணாரவிந்த
௮௩. ங்களை நாங்கள் அடைந்தபடியால்* ஜனனாந்திரங்கள்தோறும் செ
ய்த கொடிய பாவங்களும் எங்கள் ஆணவசம்பந்தமான அஞ்ஞான
மும் ஆகிய இரண்டும் நீங்கினோம் இனிமேல் தங்களுடைய பாதா
ம்புஜங்களை சதாகாலமும் பணிந்து தங்களுக்கு அடிமைசெய்யும்படி
யாகிய சிலாக்கியமான உபதேசத்தை அருள்செய்யவேண்டுமென்
பதே எங்களுடைய பிரார்த்தனை. இதுதவிர வேறொரு பொருளி
௮௪. லும் எங்களுக்கு இச்சையில்லையென்று சொல்லி* தாசருடைய பா
தங்களில் சாட்டாங்கமாக விழுந்து பணிந்தார்கள் அவர்கள் அப்படிப்
பணிவதைக்கண்ட துளசிதாசர் அவர்களைப்பார்த்து நீங்கள் குறைவில்
லாத புண்ணியஞ்செய்த மகாயோக்கியர்கள் ஆகையினாலேதான் நம்
முடைய நேத்திரங்களால் காணக்கூடாத பரப்பிரம வஸ்துவை நீ
ங்கள் இருபேரும் கண்குளிரக்கண்டு களித்தீர்கள் ஆகையால் அழகு
பொருந்திய உங்களோடுகூடியிருக்கவேண்டுமென்பது நம்முடைய இஷ்
டமே தவிர உங்களை விலகிப்போகும்படியாகச் சொல்வதற்குப் பிரி
யமில்லையென்று சொல்லி அவர்களை தம்முடைய சீடர்களாக இருக்கு
௮௫. ம்படி செய்தருளினார்* "மாதூரியமாய் வசனிக்கின்ற பசுங்கிளிக்கொ
ப்பாகிய பார்வதி" இந்தப்பிரகாரமாக துளசிதாசர் மிருந்த பொறுமை
யும் சாத்மீகதன்மையும் ஜீவகாருண்யமும் பொருந்தி நடந்துவருங்கால
த்தில் ஒருநாள் பகல் மத்தியானவேளையில் நிலைபெற்று விளங்கும்படி
யான பெரிதாகிய மடத்தினுடைய வாயிலில் ஒரு பிராமணன்வந்து
நின்று நன்மைபாக ஜானகிராமாவென்று ஒரு வார்த்தைமொழிந்து
பின்பு நான் முன்னமே ஓர் பிரமஹத்திதோஷம் செய்திருக்கின்றேன்.
௮௬. அப்பேர்ப்பட்ட மகாபாவியாகிய எனக்கு* இந்த மடத்தில் பிரசாதம்
கிடைப்பதுண்டோவென்று பலமான சத்தமாகக்கேட்டான் அந்தச்
சமயம் எப்பேர்ப்பட்டதென்றால் துளசிதாசர் அவர்கள் அநேக பிரா
மணரோடுங்கூடி பந்தியில் இருந்து ஔபாசனம்செய்து கிருஷ்ணார்ப்ப
ணமாக்கி போசனம்செய்வதற்கு இசைந்தகாலம் அப்போது துளசிதாச
ரவர்களும் பந்தியில் சூழ்ந்திருந்த மறையோர்களும் அந்தச்சொல்லைக்
௮௭. கேட்டார்கள்* கேட்டமாத்திரத்தில் அவ்விடத்தில் இருந்த எல்லோ
ருந்திடுக்கிட்டு ஒருவரும்சாப்பிடாமல் மயங்கியிருந்தார்கள். அத்தருண
த்தில் துளசிதாசர் மடத்துக்கு வெளியேவந்து அந்தப் பிராமணனைத்
தம்முடைய நெடுங்கைகளால் தழுவி ஆலிங்கனம்செய்து அவனுடைய
கையைப்பிடித்துக்கொண்டு உள்ளே அழைத்துவந்து அந்தப்பந்தியில்
௮௮. உ[illegible]காருவித்து அம்மறையோனைப்பார்த்து* ஏ; பிராமணோத்தமரே!
எ[illegible] நீர் ஜானகிராமாவென்று உம்முடைய வாக்கினாலே சொன்
னீ[illegible]ப்பொழுதே அந்தச்சொல்லினால் நீர்செய்த பிரமஹத்திதோ
ஷமு[illegible]ல் ஜனனாந்திரங்களில் செய்த சகல பாவங்களும வெந்து சாம்ப

ராய்ப்போயின. ஆகையால் இந்த மறையோர்களுடனே நீரும் அன்னம்
உண்ணுவீராகவென்று மொழிந்தார். அப்பொழுது பந்தியிலிருந்த பிரா
௮௯. மணர்கள் எல்லோரும் அது கூடாதென்று தடுத்து* தாசரவர்களைப்
பார்த்துச் சொல்லுவதானார்கள். சுவாமிகளே, அந்த ஒரு சொல்லினா
லே தோஷங்கள் எல்லாம் எவ்வகையாய்ப்போயின அதனைத்தெரிவிக்க
வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது தாசர், பந்தியிலிருந்தவர்
களையெல்லாம் பார்த்து வேதியர்களே கேளுங்கள் முற்காலத்தில் ஒரு
வேடனானவன் ஒரு பொந்தில் மறைந்திருந்து வில்லில் அம்பைவைத்தி
ழுத்து ஒரு மரத்தின் கிளையிலிருந்த கொக்கை எய்தான். எய்யும்
போது அப்பொந்திலிருந்த நாகசர்ப்பம் அவனைத்தீண்டியது. அம்புக்
குத் தப்பிக் கொக்குப் பறந்துபோயிற்று. அப்போது வேடன் அம்புக்கு
நேராயிராமலேபோயினது என்று சொன்னான். அவன் அறியாமல்சொ
ல்லியவார்த்தையில் ராம என்கின்ற இரண்டக்ஷரம் சேர்ந்தொலித்த
படியால் அவன் உயிர்வதைசெய்தது முதலான எல்லாப்பாவங்களுந்
தீர்ந்து விமானத்திலேறிப் பரமபதந்தையடைந்தானென்று சொல்கின்
௯௰. றபடியால்* இந்தப் பிராமணனுக்கு பூர்வம் தொடங்கி சம்பந்தப்பட்டி
ருந்த மகாபாவங்கள் எல்லாம் நிவர்த்தியாகும்படியாகச் செய்கின்ற
அந்த ராமநாமத்தினுடைய மகத்துவம் மிகவும் பெரிதென்று துளசிதா
சரவர்கள் சொல்லியபொழுது போஜனம் செய்வதற்குப் பந்தியில் நிரம்
பியிருந்த மறையவர்கள் எல்லோரும் மகா தபோதனராகிய சுவாமிகளே
தாங்கள் பூர்வகாலத்திலே எதுவோ ஒரு கதைநடந்ததாக இப்போது
தங்கள் திருவாக்கால் சொல்வது தகாதகாரியம் நாங்கள் ஒப்புக்கொள்
ளமாட்டோம். ஆனால் பிரத்தியட்சத்திலே நாங்கள் எல்லோரும் பார்
க்கும்படியாக இப்போது ஏதேனும் ஒரு சாக்ஷி காண்பிப்பீர்களேயா
னால் அந்தப் பிராமணனோடுகூடி இருந்து நாங்கள் எல்லோரும் உண்
௯௧. போம்* என்றுகூறிய பிராமணர்கள் எல்லோரையும் தாசரவர்கள் பா
ர்த்து நாமாக ஒரு சாக்ஷிப்பொருளை உங்களுக்குப் பிரத்தியட்சத்தில் கா
ண்பிப்பதைப்பார்க்கிலும் உங்கள் கருத்துக்கு இசைந்தபடி ஒரு காரிய
த்தைச் செய்யவேண்டுமென்று சொல்வீர்களேயாகில் அது உங்களுக்
கும் உண்மையும் பிரியமுமாய் இருக்கும். நமக்கும் சந்தோஷமாய் இரு
க்கும். ஆகையால், உங்கள் கருத்துக்குத் தோற்றியபடி ஏதேனும் சொ
ல்லவேண்டுமென்றார். அப்போது வேதியர்கள் எல்லோரும் ஒரு தன்
மையாக ஆலோசனைபண்ணிக்கொண்டு எங்கள் பரமாச்சாரியராகிய
சுவாமிகளே, காசியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விஸ்வநாதேஸ்வரரு
டைய ஆலயத்தின் முன் வாயிலில் இருக்கின்ற கல் ரிஷபமானது இந்த
மறையோனுக்கு எதிரே படைத்திருக்கின்ற அன்னத்[illegible] சாப்
பிடுமேயாகில் இந்த மறையவனோடு கூட இருந்து [illegible] எல்லோ
௯௨. ரும் சாப்பிடுவோமென்றார்கள்* இவ்வண்ணமாக [illegible]யர்கள் எல்
லோரும் சொல்லிய வசனத்தைக்கேட்ட துளசிதாசர் அப்படியே செய்